அனுபோகவைத்திய களஞ்சியம்



கிடைக்குமிடம்

சரஸ்வதி புத்தகசாலை
175.செட்டியார்தெரு. கொழும்பு.

உ

வேலும் மயிலும் துணை

அகஸ்தியர் அருளிய அனுபோக

வைத்தியகளஞ்சியம்



இ வை

P. S. சேணி நாயகர் அவர்களால்

சில ஏட்டுப்பிரதிகளிலிருந்து தொகுக்கப்பெற்றது



பதிப்பாளர்:

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு, கொழும்பு.

காபிரைட்] 1959 [விலை ரூபா 2

பதிப்புரிமை அறிவிப்பு

இதனுல் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் சென்னை ஏழுகிணறு பரமாநந்த முதலிதெருவில் இருக்கும் **P. S. சேணி நாயகர்** அவர்களால் தொகுக்கப்பெற்ற அகஸ்தியர் அனுபோக வைத்திய களஞ்சியம் என்னும் புத்தகத்தை வெளியிட நான் மேற்படியாரிடமிருந்து சகல சுதந்திரத்துடன் பெற்றுக்கொண்டேன் ஆகையால் மேற்கண்ட புஸ்தகத்தை இதரமானவர்கள் எந்த பாஷையிலும் அச்சிடலாகாதென்று கனம் பொருந்திய கவர்மெண்டார் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்திருப்பதை என் அனுமதியின்றி அச்சிட்டால் நான் கோரும் நஷ்டத்தை அச்சிட்ட வரிடமிருந்து வசூலிக்கப்படும் அல்லாமல் காபிரைட் உல்லங்கனம் செய்த குற்றத்திற்கு உள்படுவார்கள் என்பதை தெரியபடுத்துகிறேன்.

இப்படிக்கு:

S. பத்மநாப ஐயர்

வைத்திய நிபணர்களுக்கு அறிவிப்பு

.....

ஒவ்வொரு வைத்தியரும் வாதிகளும் கவனிக்க வேண்டியது அவசியம் இதில் வரும் பாஷாண வகைகளும் வாளம் இன்னும் அநேகமான கொட்டைகளையும் ஒவ்வொன்றும் சுத்திசெய்துசேர்க்க வேண்டும். லிங்கம், பூரம், வீரம், குங்கிலியம், வெள்ளைப்பாஷாணம், இதுகளை முக்கியமாய் சுத்திசெய்து ஒவ்வொரு முறையிலும் சேர்க்க வேண்டும் நேர்வாளத்தையும் பசும் சாணத்திலும் அரிசி நெய்யிலும் சுத்தி செய்யவேண்டும் ஒவ்வொரு பண்டிதரும் அவசியம் இதுகளை கவனிக்க வேண்டியமுறமை சுத்தியை மரவாமல் தாங்கள் செய்ய வேண்டியது மருந்துகள் நல்ல பெயருடன் விளங்கும் மேல்கண்ட சரக்குகளை சுத்தி செய்யாமல் மரதியாக வேலை செய்தால் நாங்கள் ஜவாப்தாரி அல்ல என்பதை தெரிவித்து கொள்கிறேம்.

இப்படிக்கு:

P. S. சேணி நாயகர்

வேலும் மயிலும் துணை.

அகஸ்தியர் அருளிய அனுபோக

வைத்தியகளஞ்சியம்

நாடி பார்க்கும் விதம்

கையைப்பிடித்து நெட்டைவாங்கி பெரும் விரல் பக்க மாகவிருக்கும் ஆரையென்பின் பேரிலோடும் நாடியை மணிக் கட்டுக்கு தாங்குலம் மேலாக மூன்று விரல்களால் சமமாக மெதுவாக யழுத்தி நாடியை பரிட்சித்த பின்பு விரல்களை மாறி மாறி யழுத்தி தலர்த்திப்பார்க்க நாடி நடை தெரியும்.

ஸ்திரீ புருஷாளுக்கு நாடி பார்க்கும் விதம்

புருஷர்களுக்கு வலதுகையிலும் பெண்களுக்கு இடது கையிலும் நாடி பரிட்சிப்பது சிரமம் மேலே சொல்லியபடி நாடியைப் பரிட்சிப்பதில் முதல் விரல் கீழ்வாத நாடியும் நடு விரல் கீழ்பித்த நாடியும் கடைவிரல் கீழ்சிலேத்ம நாடியுமென் றறியவும் புருஷர்களுக்கு வாதநாடி குயில், மயில் அண்ணம் கோழி போலவும், பித்தநாடி ஆமை அட்டை போலவும் சிலேத்மநாடி பாம்பு போலவும் நடக்கும் பெண்களுக்குவாத நாடி பாம்பு போலவும் பித்தநாடி தவளை போலவும் சிலேத்ம நாடி அன்னம் போலவும் நடக்கும் என்று அறிவாயாக.

திரிநாடியை இரவில் பார்க்கும் விதம்

காலை 6-மணியிலிருந்து இரவு 10-மணி வரையிலும் வாதமும் இரவு 10-மணியிலிருந்து விடியற்காலை 2-மணி வரையில் பித்தமும் விடியற்காலை 2-மணியிலிருந்து மறுநாள் காலை 6-மணிவரையில் சிலேத்மம் என்று தீர்மாணித்துக் கொள்ளவேண்டியது.

வாதத்தில் வாதமாகில்

உடல் நொந்து வீங்கிவாடும் மனமானது பதறும் உடம்பு துடிக்கும் நித்திரை பிடியாது

வாத ரோகமானுல்

வயறு மந்தம், பூட்டுகள் தோறும் நோய் உண்டாகும் தாதுநாசம் சிருக சிருக சிரு நீரிறங்கும் மலம் சிக்கல் காணும்

பித்த ரோகமானுல்

கண் சிவந்து சீதலத்திலிருக்கும் சிறுநீர் கடுத்துவிழும் இந் நீர் சீலையில் பிடித்துக் கொள்ளும் இந்நீரானது சி வ ந் திருக்கும், கிறு கிறுப்புண்டாகி நாவு உலர்ந்திருக்கும்.

சிலேத்ம ரோகமானுல்

சீதளமாகி உடம்பு வியர்க்கும் நாவு விஷம் போன்ற வழு வழுப்பாக நீர் சுரந்து துர்கந்தமாய் ஈலை விழும்.

வாதத்தில் சிலேத்தமமாகில்

கால், கைகள், நோய் உண்டாகி வீக்க முண்டாகும் தலை நோயால் புத்தி தடுமாறி திரேகம் வியர்க்கும் அ ன் ன ம் செல்லாது பேச்சுகள் தடுமாறும்.

பித்தத்தில் பித்தமாகில்

சரீரத்தில் கிரு கிருப்புண்டாகும் வாயில் நீரூரும் இளைப் புண்டாகும் உடம்பு வேர்பட்டு வாடும் பின்பு வீக்க முண் டாகும்.

சிலேத்ம பித்தமானுல்

வாய் கசந்து காணும் நாவில் பலவிதமான சுவையைத் தரும் பேசும் சொற்கள் திடமிராது கோபம் உண்டாகும் கண்கள் அழுக்கு சேர்ந்து ஜலம் வடியும் குரல் சத்தம் வேற் றுமையாக காணப்படும்.

பித்தத்தில் வாதமாகில்

கழுத்து கால், கைகள், உடம்பு, குடச்சல் உண்டாகும் ஒருவாராக ரம்பெல்லாம் பிகுவாக இருக்கும் மனம் பதரும் உடம்புவாடும் ஜுரமுண்டாகும் புத்தி தடுமாறும்.

பித்தத்தில் சிலேத்தமமாகில்

வாய் குளறும் வாயில் நீர் ஊரி வடியும் எழுந்து ஓடி ஓடி வரும் வயிறுநோய் உண்டாகும் வாந்தி உண்டாகும் கழுத்தில் நோய் உண்டாகும்.

சிலேத்மத்தில் சிலேத்தமமாகில்

திமிர்தண்டமாய் ஆத்மா புத்தி செயல்யாவையும் விட்டு அசாத்தியமாய் விழிவாட்டமிடும் இது அசாத்தியமான நோய் நம்ப முடியாது.

சிலேத்ம வாதமாகில்

ரம்புகள் பிகிந்து நிற்கும் முகத்தில் நோய் உண்டாகி மேல்விழி கீழ்விழியாகி மிரள மிரள விழித்து நாவு குழறும்.

தசநாடி எந்தெந்த இடத்தில் நடக்கும்

புருவம், உச்சி, கண்டம், நெஞ்சு, கரம், கால்களில் பெருவிரல், காலின் மணிக்கட்டு முழங்கை முழங்கால் இந்த இடங்களில் நடக்கும்.

நாடி தெரியாமை

அப்பியங்க ஸ்நானம் செய்திருக்கும் போதும் குதிரை யானை சவாரிசெய்து வந்திருக்கும்போதும் வெய்யலில் திரிந்து வந்தபோதும் பசியினல்வருந்தும்போதும் வியாகூலத்திலிருக்கும்போதும் பயமடைந்து இருக்கும்போதும் சிற்றின்பம்

அனுபவித்தபோதும் லாகிரி வஸ்துக்களை உபயோகித்திருக்கும் போதும் நாடி தெளிந்து காட்டாது காரணம் பித்தமிகுதியே.

நாடி உதிக்கும் இடம்

நாபியினின்றெழும்பி நாசிற் சுவாசிக்கும் மீண்டும் கழுத்திலுரைந்து வலக்கரத்தில் தோன்றும் நாடியே பிங்கலையாகும் இடக்கரத்தில் தோன்றிய நாடியே இடகலையாகும்.

நாடியின் விபரம்

நாடிகள் என்றுல் நரம்புகள் இவை எழுபத்தோராயிரமாம் அதில் விசை நரம்பு ஒன்று உண்டு அதுதான் திரிநாடி என்று வழங்குவது இவ்விசை நரம் பொன்றில் என்னவித மாக நடக்கும் ? காலையில் நடக்கும் நடைவாதம் பகலில் நடக்கும் நடைபித்தம் மாலையில் நடக்கும் நடைசிலேத்துவ மென்பார் இப்படியாக நடக்கும் நடையினளவே வாதபித்த சிலேத்தமமென்பதாம்.

வாதம் எவ்விதமாக நடக்கும்?

கோழியின் நடையாக நடக்கும்.

பித்தம் எவ்விதமாக நடக்கும்?

ஆமை நடையாக நடக்கும்.

சிலேத்துமம் எவ்விதமாக நடக்கும்?

பாம்பின் நடையாக நடக்கும்.

திரிநாடி எந்த இடத்தில் உதிக்கும்

நமது வலக்கரத்தின் மணிக்கட்டைவிட்டு ஓர் அங்குலம் மேலுக்கு தள்ளி விசை நரம்பை நமது மூன்று விரல்களால் அழுத்திப்பார்க்க வீணையின் பிருவாக விரல்களை தாக்கி குறிப்பு காட்டும் அப்படி காட்டும் குறிப்பை தன்னுடைய நுன்னிய அறிவால் கண்டு வியாதி யின்னதென்று தெரிந்துக் கொள்ளவேண்டியது.

மேல் சொல்லிய விடத்தில் நமது மூன்று விரல்களை அழுத்திப்பார்க்க ஆள்காட்டிவிரல் வாதம் நடுவிரல் பித்தம் பவுந்திரவிரல் சிலேத்மம் ஆகும் விசை நரம்பொன்றில் இத் தனை வியாதிகளை எப்படி காண்பது?

காலமும் நடையும் இடமும் அரசும் வியாதியும் ஆக இவ்வைந்தும் பொருந்தமாக நுணுணிய அறிவால் தெரிந்துக் கொள்ளவேண்டியது.

அகஸ்தியரும் இன்னும் இருக்கப்பட்ட முன்னோர்கள் சொல்லியபடி பார்த்தங்கால் இலகுவாக நமதரிவிற்கு புலப் படலாம் விரிவாகச் சொல்லுவதினல் நாம் அதை குறுக்கி யாவரும் உணரும் பொருட்டு அடியில் காட்டி இருக்கும் தசவாய்வைக்கொண்டு நாம் எளிதில் கண்டுகொள்ளலாம்.

தசவாயுவின் இருப்பிடமும் அதன் செயலும்

பிராணன்:— உந்தியிலுதித்து இருவிழியினின்று நாசி வழி யாக நாழிகை ஒன்றுக்கு 320–சுவாசத்தை யுண்டாக்கும்.

அபானன்:—உந்தியினடியிலிருந்து மலங்களை பிறவிருத்தி செய்யும்.

வியானன்:—தோளிலிருந்து தேஜசும் வெப்பமும் உண்டாகும்.

உதானன்:—உண்ட போஜனத்தை நரம்புகளில் பரவச்செய்யும்.

கிருசரன்:—உடலை வளர்க்கும்.

கூர்மன்:—இருவிழிகளிலிருந்து பார்க்கவும் இளமையை மூடவு மிருக்கும்,

நாகல்:—கொட்டாவி, விக்கல், செய்விக்கும்.

தேவதத்தன்:— இருகரங்களையும், கால்களையும் நடக்கவும் முடக்கவும் செய்யும்.

தனஞ்செயன்:— வார்த்தைகளை நாவினிடத்திலிருந்து வருவிக்கும்.

முக்கிய குறிப்பு

வைத்தியர் வியாதியஸ்தருக்கு மருந்து கொடுக்குமுன் அவர் வயதையும் தொழிலையும் நோய் உண்டாகிய காலத்தையும் சரீர குணத்தையும் தீபன சக்தியையும் மலஜலத்தின் கிரமத்தையும் நாடி ஸ்திதியையும் கவனிக்க வேண்டியதன்றி வயதுக்கு தக்கப்படி மருந்தின் அளவை பாகித்து கொடுக்க வேண்டியது.

மருந்து செய்யவும் அருந்தவும்

ஞாயிரில்மருந்துசெய்து செவ்வாய் வியாழன் உட்கொள்ள வியாதி நீங்கும், வெள்ளியில் நோய்மிகும் திங்கள் புதன் சனி தீதாம்.

மரணகுறி அறிதல்

வாதபித்த நாடியானது ஓட சிலேத்மம் பதுங்கி நிற்க நாடியானது அரணைவாலைப்போல் துடித்துமெய்யில் வேர்வை விட்டு தேகம் குளிர்ந்ததாகில் மரணக்குறி என்றறியவும் அன்றியும் இடிப்போல் இடித்து நாடியானது விழுந்து உடலானது மயங்கி மூக்கின்கீழ் வேர்வையுண்டாகி விழியானது மறைந்து விலா இரண்டும் வலிக்கக் கண்டால் மரணமென்றறியவும்.

நளியின் குணம்

ஞாயரில் பரணியும் திங்களில் சித்திரையும் செவ்வாயில் உத்திராடமும் புதனில் அஸ்தமும் வியாழனில் கேட்டையும் வெள்ளியில் பூராடமும் சனியில் ரேவதியுஞ் சேர்ந்த நாளில் நளி கண்டால் நளி நீங்காது.

பத்தியத்திற்கு ஆனவை

முருங்கை பிஞ்சு அவரை பிஞ்சு அத்தி பிஞ்சு முள்ளி பிஞ்சு, சிறுகீரை அரைக்கீரை. பொன்னுங்கணிகீரை பரட்டைகீரை புளியாரை ஆவின்பால் நெய் சிறுபயரு துவரை வெள்ளாட்டு மாமிசம் முயல் காடை கௌதாரி இவைகள் ஆனவை.

பத்தியத்திற்கு ஆகாதவை

சுரக்காய், பாவக்காய், பூசணிக்காய், கடலை, அவரை, பெரும்பயறு, மாங்காய், கொள்ளு, அகத்திக்கீரை நல் லெண்ணை, புளி, கடுகு, தேங்காய், போதைவஸ்து, கோழி பன்றி ஜலவஸ்துக்கள் ஆகாது.

பாஷாண வகைகள் சுத்தி செய்யும் முறை

வீரம்:— இளநீரில்கழஞ்சி கற்பூரமிட்டுகலக்கி இதில்தோலாந் திரம் கட்டிநீரில்படாமல் கட்டி எரித்து எடுக்கவும்.

லிங்கம்:— தேனில் மூலைப்பாலில் ஊரவைத்து மறுநாள் பழ ரசம் குப்பமேனிரசம் மூலைப்பாலும் கலந்து ஒரு ஜாமம் சுருக்கிடவும்.

பூரம்:— மிளகு, வெற்றிலை கியாழத்தில் கிளிகட்டி மூன்று நாள் ஊரவைத்து எரித்து எடுக்கவும்.

இரும்பு:—அயப்பொடியையொருநாள்எலிமிச்சம்பழம் ரசத்தில் ஊரவைத்தெடுத்து மறுநாள்எள்ளெண்ணையில் ஊர வைத்து இரும்பு சட்டியிலிட்டு வருத்து காடியில் கழுவி வேலம்பட்டைகியாழத்தில் கொதிக்கவைத்து காடியில் கழுவி எடுக்கவும்.

காந்தம்:—பழரசத்திலாகிலும், காடியிலாகிலும், மோரிலாகி லும், கொதிப்பித்து சாணிரசத்தில் 7-தரம் காச்சி துவைக்கவும்.

அயத்தொட்டி:— ஆவின்பாலில் 4-ஜாமம் நெய் தேன் இவைகளில் 9-நாளும் ஊரவைத்து எடுக்கவும்

நிமிளை:— வாழக்கட்டை அடிஜலத்தில் கொதிப்பித்து எடுக்கவும்.

பொன்னிமிளை:— 3நாள் காடியில் ஊறவைத்து எடுக்கவும்

கிருஷ்ண அப்பிரகம்:— காடி ஜலம் விட்டரைத்து படிகோசலத்தில் கலக்கி வேகவைத்தெடுத்து உலர்த்தி நெல்லுசேர்த்து கிளிகட்டி காடியில் தோய்த்து இறங்குந்தெளிவை உலர்த்திக் கொள்ளவும்.

பால்துூத்தம்:— கிளிகட்டி சிறுவர் அமுரியில் 7-நாள் ஊரவைத்து ஆவின் நீரில் 2-ஜாமம் ஊரவைத்து எடுக்கவும்.

சூதம்;— எருக்கம் பாலில் ஒருநாள் ஊரவைத்து செங்கத்தான் கொட்டை சர்க்கரை பழரசம் விட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

இருவங்கம் நாகம்:— இலுப்பஎண்ணெயிலாகிலும் தேங்காய்எண்ணெயிலாகிலும் நவாசாரத்தூள் தூவி 7தரம் உருக்கி காய்ச்சவும்.

கருவங்கம்:— வெள்ளாட்டு நீரில் பிரண்டை வேரரைத்து போட்டு நல்லெண்ணெவிட்டு கலக்கி அதில் 10தரம் உருக்கி காய்ச்சவும்.

நாகம்:— ஆட்டு நெய் விட்டு உருக்கி அமுரி பழரசம் கூட்டி சாரம் கல்சுண்ணமிட்டு கலக்கி அதில் மதுரம் உருக்கிக் காய்ச்சவும்.

கவுரி:— கவுரிக்கு பாதியிடைமிளகும் பாதியிடை உளுந்து கூட்டி எருக்கன்பால் விட்டரைத்து கவசம் கட்டி ரவியில் காயவைத்து மேலே துணிசுற்றி வெள்ளாவி

வேகும்போது நடுவில்வைத்தெடுத்து கவசம் நீக்கி அழுரியிலை கழுவி எடுக்க நல்ல சுத்தி.

மிர்தார்சிங்:— மிர்தார்சிங்கியை வெள்ளாட்டுக் கோமயத்தில் ஓர் நாழிகை கொதிக்கவைத்து எடுத்துக்கழுவவும்.

மஞ்சீலை:— காடியிலாவது வெள்ளாட்டு மூத்திரத்திலாவது கிளிகட்டி எரிக்கவும்.

கல்நார்:— கல்நாரைக் கழுதை மூத்திரத்தில் 3-நாள் ஊரவைத்து கழுவி எடுத்துக்கொள்ளவும்.

சிலாசித்து:— சிலாசித்தை பழரசம் சுண்ணும்புஜலம் அல்லிபூரசம் பசும்பால் இவைகளில் எதிலாவது தொலாந்திரங்கட்டி எரிக்கவும்.

கெருடப்பச்சை:— கெருடப்பச்சையை பயருப்போல் செய்து கிளிகட்டி குமரிச்சாற்றில் 30-நாழிகை ஊரவைத்துப்பின் கழுவி எடுக்கவும்.

சீனம்:— எருமைச்சாணியில் கழுவிப்போடவும்

வெங்காரம்;— எலுமிச்சை பழரசத்தில் அறைத்து பில்லைத் தட்டியுலர்த்திக்கொள்ளவும்.

முடிகாரம்:— பனங்கள்ளில் கிளிக்கட்டி எரித்துக்கொள்ளவும்.

துருசு:— தயிரில் ஒரு ஜாமம் ஊரவைக்கவும்.

மடல்துத்தம்:— வெண்ணை அல்லது தயிர் கற்றுழைச்சாற்றில் ஊரவைத்தெடுக்கவும்.

பவழப்புத்து:— பசுமோரில் கிளிகட்டி 4-நாழிகை எரித்து எடுத்துக்கொள்ளவும்.

அஞ்சனக்கல்:— புளியாரை சாற்றில் ஒரு நாள் ஊரவைத்து எடுக்கவும்.

கல்மதம்:— கல்மதத்தை சிறுநீரில் கழுவி எடுத்துக்கொள்ள வும்.

நாபி:— நாபியை பருத்தியிலை ரசத்தில் ஊரவைத்து மூத்திலைக் குள்வைத்து சுத்தி கும்பியில் சொருகி கொஞ்ச நேரம் பொருத்தெடுத்து சீந்தில் கியாழத்தில் தொலாந்திரங் கட்டி எரித்தெடுத்து எருக்கம்பாலில் சற்று ஊர வைத்து கோமியத்தில் கழுவி எடுத்துக்கொள்ளவும்.

நேர்வாளம்:— நேர்வாள கொட்டையை உடைத்து மேல் ஓட்டைப்போக்கி எருமைசாணியை கரைத்து அதில் கிளிகட்டி போட்டு எடுத்து பருப்பை பிளந்து மூலையையும் மேல் தோலையும் நீக்கி பச்சரிசிநொய் புளியந்தழை இரண்டையும் அடுப்பிலேற்றி மேல் படி கொட்டையை கிளிகட்டிப்போட்டு அரிசி வெந்துவிட்டதா என்று பார்த்து வெந்தவுடன் எடுத்து ஜலம்விட்டுகழுவி வெய்யலில்உலர்த்தி நெய் விட்டு வருத்துக்கொண்டு புட்டியில் பதனம்பண்ண வும் தேவையானபோது எடுத்து உபயோகிக்கவும்.

தாளகம்:— தாளகத்தை சுண்ணும்புக் கல்லுக்குள் வைத்து கழுதை மூத்திரத்தில் 7-விசை மாற்றி மாற்றி தாளிக் கவும் பணங்கள்ளும் சிறுவர் மூத்திரம் விட்டும் சுத்தி செய்யலாம் கழுதை மூத்திரமே மேலானது.

பாஷாணம்:— பாஷாணத்தை மேலே கந்தை துணிகளை சுற்றி வெள்ளாவியில் வைத்து எரிக்கவேண்டும் அப்படி 7-தரம் செய்தால் சுத்தியாகும் மற்றப்படி எந்த வித சுத்தி செய்தாலும் அதிலிருக்கும் எண்ணை கழலுவது கடினம்.

சகஸ்திரபேதி:— நாரத்தங்காய் ரசத்தில் வைத்து ஒருநாள் ஊரவேண்டும் அப்படி ஊரினதும் எடுத்து கொள்ளவும்.

சேங்கெட்டை:- மூக்கை வெட்டி சாணியில்போட்டுகொதிப்பித்து எடுக்கவும்.

சிவதைவேர்:— பசும்பாலில் அவிழ்த்து உலர்த்திகொள்ளவும்.

சுக்கு:— மேல்தோல் சீவி சுண்ணும்பு தடவி உலர்த்திக் கொள்ளவும்.

மிளகு:—புளித்தமோரில் 3-நாள் ஊரவைத்து வருத்து எடுக்கவும்.

திப்பிளி:— எலுமிச்சம் பழரசத்தில் ஊரவைத்து உலர்த்தி எடுக்கவும்.

ஓமம்:—சுண்ணும்பு தெளிவு நீரில் ஒரு ஜாமம் ஊரவைத்து பின்பு உலர்த்தி எடுக்கவும்.

கருஞ்சீரகம்:— சுண்ணும்பு நீரில் 7-ஜாமம் ஊரவைத்து உலர்த்தி எடுக்கவும்.

ஊமத்தன்விதை:—ஜலத்தில் ஒரு ஜாமம் ஊரவைத்து உலர்த்தி எடுக்கவும்.

எட்டிக்கொட்டை:— நெல்லோடு கூட அவிழ்த்து சிறுகீரை சாற்றில் 7-ஜாமம்போட்டு தேத்தான் கொட்டை ரசத்தில் அவிழ்த்து எடுத்துக் கொள்ளவும்.

கொம்பரக்கு:— நல்ல ஜலத்தில் போட்டு அடுப்பேற்றி எரித்தெடுக்கவும் இப்படி 3-தரம் செய்து காயவைத்து எடுக்கவும்.

மாசிக்காய்:— பசு நெய்யில் வருத்து வெடித்த பிறகு எடுத்துக் கொள்ளவும்.

சரக்குகளின் சுத்தி செய்முறை முற்றிற்று.

அறுவகை ஜெயநீர்

வெடி உப்பு	பலம்	5
துருசு	,,	5
படிகாரம்	,,	5
சோற்றுப்பு	,,	5
வங்காரம்	,,	5
நவாச்சாரம்	,,	5

மேல்சொன்ன 6-சரக்குகளையும் கல்வத்தில் போட்டு சன்னமாக இடித்து ஒரு பீங்காணில் கலந்து பனியில் வைக்க வேண்டியது இப்படி 20-நாள் பனியில் வைத்து 20-ம் நாள் காலையில் பார்த்தால் நீர் இரங்கி இருக்கும் அதை புட்டியில் பத்திரம் செய்துக்கொண்டு இதை அனேகமான தொழில் முறைகளுச்கு உபயோகிக்கலாம்.

பனித்தண்ணீர் எடுக்கும் விபரம்

பங்குனி மாதம் மூடுபனியில் வாழைத்தோட்டத்தில் வாழையிலையை தொண்ணைகுத்திவிடவும், காலையில்போய்ப் பார்த்தால் நீர் நிரம்பி இருக்கும் அதையெடுத்து பத்திரம் செய்துக் கொள்ளவும்.

பூநீர் எடுக்கும் விபரம்

பூநீர் பூக்கும் இடம் பார்த்து மாசிமாதம் பௌர்ணமி சித்திரை மாதம் சித்திரா பௌர்ணமி பங்குனி மாதம் பௌர்ணமி இதுகளில் எடுக்கலாம் ஆகிலும் சித்திரா பௌர்ணமி 15-நாழிகைக்கு எடுப்பதுதான் உச்சிதம் பூநீரை எடுத்து பானையில்போட்டு காரம் போகாமல்மூடி பத்திரம் பண்ணிக் கொண்டு தொழில்களில் உபயோகிக்கவும் இதை செந்தூரம் செய்தால் வெகு நண்மை.

வீரக்கட்டு

வீரம்	பலம்	1
குரத்துகற்பூரம்	..	1

கற்பூரத்தை சிறுதுண்டுகளாக்கி காற்று போகாத அரையில் சுத்தமான இடத்தில் ½-பலம் கற்பூரத்துண்டை கீழே வைத்து வீரத்தை அதின்மேல் வைத்து மீதி ½-பலம் கற்பூரத்தை வீரம் தெரியாமல் மூடி தீக்குச்சியில் கொளுத்தி விடவும் எரிந்து ஆரினபிறகு பார்த்தால் மணியாய் கட்டிவிடும் அதை எடுத்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தி கொள்ளவும்.

நாகக்கட்டு செய்யும் வகை

கோழியின் மலம்	பலம்	1½
வெங்காயம்	..	1½
வெள்ளைப்பூண்டு	..	½
பாவைவேர்காய்இலைமூன்றுசேர்த்து	..	½
நவாச்சாரம்	..	⅛
கெந்தகம்	..	⅛

இவையாவும் கல்வத்திலிட்டு மைப்போல் அரைத்து 3-பாகங்களாக்கி ஒருபாக மருந்தை எடுத்து அதை இரண்டு பாகமாக்கி ஒரு மூசையில் பாதிபோட்டு அதில் ½ பாகம் சிறு நாகத்தை வைத்து அதின்மேல் பாதிமருந்தைபோட்டு அழுத்தி மூசையை கவிழ்த்து மூடி 7-சீலை மண்செய்து காய வைத்து உலைகளத்தில் வைத்து ஊதவும் நாகத்தை பதமாய் உருக்கி மூசையை உடைத்து மறு மூசையில் போடவும் முன்பிரித்த மருந்தில் ஒருபாகம் எடுத்து இரண்டாய் பிரித்து முந்திபோல் புடம்போடவும் போட்டு எடுத்து மறுபடியும் இன்னொரு மூசையில் போட்டுஇருக்கும் மற்றபாக மருந்தை பிரித்து மூசையில் பாதியிட்டு நாகத்தைப்போட்டு பாதியை மேலே போட்டு 7-சீலை மண்செய்து உலக்களத்தில் ஊதி

எடுக்கவும் இப்படி 3-தடவை செய்து ஆறினபிறகு மூசையை உடைத்து பார்க்க நாகம்கட்டி இருக்கும் வேரே மூசையில் போட்டு ஆமனக்கண் வேரிலல்கிண்டி மண்ணெண்ணேவிடவும் இப்படி 7-தரம் செய்து வரவும் செய்தால் நாகம் கண்ணடைந்து மணியாய் இருக்கும் அதன்மேல் பொன் வர்ணமாய் இருக்கும் அதை தொழில் முறைகளுக்கு வைத்து கொள்ளவும்.

லிங்கக்கட்டு முறை

ஒரு பலம் லிங்கம் எடுத்து ஒருகோப்பையில் போட்டு லிங்கம் அமர காட்டாமணிபால்விட்டு 3-நாள் இரவில் வைத்து பிறகு மேல்படி பாலேயே கரந்து அரை ஆழாக்கு சுருக்கு கொடுத்து அக்கட்டியைத் தேனிற்றுவைத்து அதன் மேல் தலைமயிர் ஒரு விராகனிடை சுற்றிகட்டி ஓர் கலயத்தில் சிறைத்த மயிர்போட்டு கட்டியைவைத்து மேலேமயிர் போட்டு அழுத்திகலவாய்க்கு ஓடிட்டு 7-சீலைமண்செய்து காயவைத்து முக்கால்முழம் விரட்டியில் புடம்போடவும் ஆறினதும் குப்பி மூடியைநீக்கிப்பார்க்க லிங்கம்கட்டி யிருக்கும் அதை பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

இலவணக்கட்டு முறை

இந்துப்பு	பலம்	½
கல்லுப்பு	,,	½
பாரையுப்பு	,,	½
பிரண்டை	,,	½
சவுட்டுப்பு	,,	½
வேலையலுப்பு	,,	½
மாவிலங்கன் பட்டை	,,	½

இவைகளை நிறுத்து யெடுத்து கல்வத்திலிட்டு முருங்கப்பூ எருக்கன்பூ, வேலிபருத்திச்சார் இதுமூன்றிலும்வகைக்கு ஒரு ஜாமம் அரைத்து பில்லை செய்து நன்றாக உலர்த்தி அக

லுக்குள் வைத்து மேல் அகல்மூடி சீலை மண்செய்து முழுப் புடம் போடவும் ஆறினபின் உடைத்து பார்க்க கருத்து இருந்தால் மேல்படி சாற்றில் அரைத்து முந்திப்போல் புடம் போட வெண்மையாய் வரும் அதை தூள்செய்து பத்திரப் படுத்திவைக்கவும் அநுபானம் 6-குண்டுமணியிடை வீதம் கொடுக்க வாய்வு நெஞ்சடைப்பு தீரும் ஆவின் நெய் தேன் சுக்கு இதுகளில் கொடுக்க குன்மம் வயிற்றுவலி வாந்திபேதி இதுகள் தீரும் இச்சாபத்தியம்.

உப்பு கட்டு

சோற்றுப்பு (கடலுப்பு) கல்வத்திலிட்டு நன்றாய் தூள் செய்து அழுத்திப் பிடித்தால் உண்டையாய் நிற்கும் அதற்கு இலந்தன் இலைத்துளிரை அரைத்து கணக்கக் கவசம் செய்து அதன்மேல் மண்சீலைசெய்து ½-கெஜம் புடம்போடக்கட்டும் எடுத்து உடைத்தால் கருங்கல்லைப்போல் இருக்கும் இதை தூள்செய்து 2-3-குண்டுமணியிடை தேனில் கொடுக்க வயிற்றுவலி சூலை குன்மம் வாய்வு முதலிய வியாதி நீங்கும் இச்சாபத்தியம்

தாளகக்கட்டு

தாளகம் பலம்-½ எடுத்து சுத்திசெய்து சிவகரந்தைச் சார் கரிப்பான்சார் இவை வகைக்கு ½-படி மேல்படி கட்டிக்கி சுருக்கு கொடுத்து உலர்த்தி அதற்கு வெடியுப்பை அடக்க வருத்து எலுமிச்சம்பழம் சாற்றில் அரைத்து கட்டிக்கி கவசம் செய்து காயவைத்து 7-சீலை மண்செய்து 15-விரட்டியில் புடம்போட உருகிகட்டும் அநுபானங்களில் சேர்த்ததும் ஜ்வரம் ஐன்னி தீரும் இச்சாபத்தியம்.

இரசக்கட்டு செய்யும் முறை

சிகப்பு பாஷாணம்	பலம்	½
கெந்தி	..	½

அரிதாரம்	பலம்	½
லிங்கம்	,,	½
நவாச்சாரம்	,,	½
மைல்தூத்தம்	,,	½
நாபிக்கிழங்கு	,,	½
நேர்வாளச்செடியின் இலை	,,	½
வெங்காரம்	,,	½

இதுகளை யெல்லாம் கல்வத்தில் போட்டு அரைக்கும் போது எலுமிச்சம் சார்விட்டு ஒரு ஜாமம் அரைத்து வட்டுச் செய்து அந்த வட்டில் பலதுவாரம் செய்து இரும்புசட்டியை வைத்து அதற்குத்தகுந்த பித்தளை கிண்ணியை கவிழ்த்து இரும்பு சட்டிக்கும் பித்தளைக் கிண்ணிக்கும் துவாரம் தெரியாமல் மணல் அரைந்து பூசிக்காயவைக்கவும் மேல் கிண்ணி சூடானபதம் தெரிய கிண்ணியின்மேல் 4-5-நெல் உமியை போடவும் உமிகருகிவிட்டால் இதுதான் பதமென்று கீழே இரைக்கி வைத்து ஆரின பிறகு கவசம் பிரித்துப்பார்க்க மேல் கிண்ணியில் பதங்கம் இருக்கும் அதைக் கத்தியால் சுரண்டிகல்வத்திலிட்டு எலுமிச்சம் சார்விட்டு 15-நிமிஷம் அரைத்து ஒரு மூசையில் போட்டு கரி அடுப்பில் உருக்க அதில் இருக்கும் ரசம் வடியும் பின்பு வெங்காயசாற்றில் 3-விசை விடவும் பின்பு கரும் சீரகக்குழம்பில் 7-விசை விடவும் அதன்பின் நல்லெண்ணையில் 5-தடவை விடவும் பின்பு குழவிப்போல் கருவமைத்து விடவும் ஆரினப்பிறகு பீங்கான் பானையில் பதனம் பண்ணவும் இதை வியாதிகளுக்கு உபயோகப்படுத்தவும்.

விபரம்:

இவ்வரிய ரசக்கட்டை முலைப்பாலில் கரைத்து கண்ரப்பையில் விடவும் பற்றுப்போடவும் கண்சிவப்பு கண்கூசுதல் தீரும் பசுவின் பாலில் உரைத்து ஆழாக்குப்பால் விட்டு சாப்பிட ரத்தவாந்தி பித்தவாந்தி தீரும் இதைமணிப்போல்செய்ய

வேண்டுமானால் ரசமணியில் சொல்லியப் பிரகாரம் செய்துக் கொள்ளவும் இதை மணியாய் செய்தால் சுக்கிரனைப்போல் ஒளிவீசும் இந்த மணியை வியாதிகளுக்கு கொடுக்க விசேஷமாய் வியாதிதீரும். இச்சாபத்தியம்.

கருஞ்சீரகம் குழம்பென்றால் சீரகத்தை அம்மியில் வைத்து மைபோல் அரைத்து ஜலம்விட்டு குழப்பிக்கொல்வதே குழம்பாகும் இதுதான் குழம்பு.

இரசக்கற்பூரக் கட்டுமுறை

சுத்தி செய்த பூரம்	பலம்	1
சாம்பிராணி	,,	10
கற்பூரம்	,,	10

சாம்பிராணி, கற்பூரம், தனிதனியாக தூள்செய்து பிறகு இரண்டையும் ஒன்றுசேர்த்து நன்றாயரைக்க மெழுகாகும் அதை 100-பங்காக்கி ஒரு பங்கை சிறு சீலையில் தடவி மேற்படி பூரத்திற்கு சுற்றி ஒரு கம்பியால்சுற்றின பூரத்தை கட்டி மேலே தூக்கிபிடித்து கொளுத்தவும் இப்படி மிகுதியுள்ள 99-பங்கையும் கொளுத்தவும் பிறகு பூரம் கட்டிவிடும் பின வெல்லம், வெண்ணை, பால் முதலிய வஸ்துகளிலும் தேனிலும் அரிசியிடை 1-முதல் 4-வரையில் கொடுக்க மேகரோகம் பிரமியரோகம், வாயுரோகம் சூலரோகம் முதலிய ரோகங்கள் தீரும், பத்தியம் புளி, புகை லாகிரி வஸ்து ஸ்திரீபோகம் ஆகாது பத்தியத்திற்கு ஆகாத பதார்த்தங்கள் சாப்பிடக்கூடாது கடும் பத்தியம்.

மேக நாத செந்தூரம்

வெடியுப்பு	பலம்	1
பொன்னரிதாரம்	,,	1

துருசு	பலம்	1
பிஞ்சுகடுக்காய்	,,	1

இந்த நான்கையும் கல்வத்தில் போட்டு பொடிசெய்து முருங்கையிலை சாற்றில் நான்கு ஜாமம் அரைத்து வட்டு செய்து 3-நாள் வரையில் காயவைத்து வட்டிலை தட்டினால் கணில் என்று சப்தம் உண்டாகும் அந்த பதத்தில் எடுத்து ஒரு அகலில் வைத்து மேல் அகல்மூடி 7-சீலைமண் செய்து சீலைமண் காய்ந்த பிறகு ஒருமுழம் ஆழமும் ஒருமுழம் அகலமும் குழிவெட்டி அதில் விரட்டி அடுக்கி புடம் போட்டு ஆறினபின் எடுத்து கவசம் பிரித்து மருந்தின் வட்டை கல்வத்திலிட்டு நுனிக்கி பார்த்தால் நீலவர்ணமாக இருப்பது தவிர அதினின்று அதிக சூடு உண்டாகும் அதை சீசாவில் பதனம் செய்துக்கொண்டு இடைக்கு இடை செம்பை உரிக்கி கிராசங் கொடுக்க செம்பு சுத்தியாகும் இது மேலான தொழிலுக்கும் உபயோகபடுத்திக் கொள்ளலாம்.

அயவீரச் செந்தூரம் செய்யும் முறை

இரும்புபொடி	பலம்	1
ரசம்	,,	1
நவாச்சாரம்	,,	1
வீரம்	,,	1

இவை நான்கையும் கல்வத்திலிட்டு 4-ஜாமம் அரைக்கவும் பின்புபுதுசட்டியில் வெற்றிலைச்சாரு உள்புரம் தடவி காயவைத்து மருந்தை அதில்போட்டு அடுப்பிலிட்டு தீ எரிக்கும்போது தென்னங்குச்சியால் மருந்தை வருக்க வேண்டும் அதன் புகைவெகு நெடியாக இருக்கும் இந்தமருந்தை தோட்டங்களில் செய்வது உத்தமம் நெடி அடங்கின பிறகு பார்த்து வருத்துக்கொண்டே வரவும் மாதளம்பூ நிறம் வந்

தால் இறக்கி சீசாவில் பதனம் செய்துக் கொள்ளவும் வியாதிக்கு தக்கின பிரகாரம் மருந்தை உபயோகிக்கவும் இச்சாபத்தியம்.

சார செந்தூரம் செய்முறை

நவாச்சாரம் பலம் 8

இதை கல்வத்திலிட்டு தூளாக நுனிக்கி அதில் வெடியுப்பு திராவகம்விட்டு எட்டு ஜாமம் அறைத்து ஒரு தட்டை பீங்காணில்தடவி கொடூரமான வெய்யலில்வைத்து மேல்படி திராவகத்தை துளி துளியாக விடவும் 3-நாள் சென்ற பிறகு அதை ஒரு கோப்பையில் வைத்து உமி நெருப்பில் வைக்கவும் பிறகு வருத்து பொடியாக்கிகாசி கங்காஜல குப்பியில் வைத்து 7-சீலமண் செய்து பிறகு சந்திரோதய செந்தூரம் போல் பக்குவஞ்செய்து 12-ஜாமம் வரையிலும் எரிக்கவும் காலை 6-மணி முதல் மாலை 6-மணிவரையிலும் கமலாக்கினியாக எரித்து இரவில் ஆறவைத்துமறுபடியும்காலை 6-மணி முதல் மாலை 6-மணிவரையில் தீ எரிக்கவும்.

இப்படியாக 12-ஜாமம் எரித்து சீசாவை பக்குவமாக உடைத்து பார்க்க தேங்காய்எண்ணெய்ப்போல் சில இடத்தில் சிவந்து இருக்கும் அதை பின் கல்வத்திலிட்டு 8-ஜாமம் அரைத்து பீங்காணில் வைத்து துளி துளியாக வெடியுப்பு திராவகத்தை விட்டு இரவில் வைத்து பீங்காணில் வருத்து காசி குப்பியிலடைத்து 7-சீலமண்செய்து காயவைத்துமுன் போல் 12-ஜாமம் தீஎரிக்கவும் இப்படி 7-தரம் எரித்து எடுத்துப் பார்த்தால் செவ்வல்லிமலர்போல் சிவந்து இருக்கும் அதை சீசாவில் பதனம் செய்யவும் மேல்படி செந்தூரத்தில் 4-பலம் எடுத்து! கல்வத்திலிட்டு இரண்டு பலம் சீரகம் ஒரு பலம் தங்க அபிரேக்கும் சேர்த்து எலிமிச்சம்பழம் சாற்றில் 8-ஜாமம் அறைத்து முன்போல் காசி குப்பியிலடைத்து

வாய்க்கு செங்கல்கார்க்கு அடைத்து 7-சீலமண் செய்துகாய வைத்து முன்போல் 12-ஜாமம்எரித்து ஆரவைத்து சீசாவில் அடைத்து பார்க்க செந்தூரமாகஇருக்கும்அதை பணவிடை காலை மாலை 40-நாள்உட்கொள்ள நரைதிரை மூப்புகுஷ்டம் குலை நோய் இப்படிப்பட்டவியாதிகளை தீர்க்கும் தவிர (காய கற்பமாகும்) இதுமகாமகுத்துவமுள்ள மருந்து இதன்செயல் முழுதும் எழுதவேண்டுமானால் இப்புத்தகம் இடம் தராது கடும்பத்தியம்.

அயகெந்தி செந்தூரம் முறை

நெல்லிக்காய் கெந்தகம்	பலம்	4½
இரும்பு அரைப்பொடி	,,	1½

இதுகள் இரண்டையும்கல்வத்திலிட்டு கல் சுண்ணும்பு தெளிநீர்விட்டு ஒருநாள் அறைத்துகாயவைத்து ஒரு புது சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து வரக்க செந்தூரமா கும் வரவு ஒரு ஜாமம். பிறகு கல்வத்தில்அரைத்துபுட்டியில் பதனம் செய்து கொள்ளவும். இஞ்சிச்சார். தேன். நெய் இம் மூன்றையும் சமயிடையாய் சேர்த்து தேக்கரண்டியில் ஒரு கரண்டியும்செந்தூரம் 2-குண்டுமணியிடை நிறுத்தி காலை மாலை 5-நாள் 7-நாள் சாப்பிட சூலை பதினெட்டும் கிராணி 8-ம், சோகை, பாண்டு, சிறங்கு, சொறி, புண்புரை, மேகங் கள் தீரும். பசுவின் பாலில் சாப்பிட பிரமேகம் போகும். வெட்பாலையரிசி சீரகம் இரண்டையுமிடித்துகியாழம்வைத்து அதில் இராத்திரி போஜனம் ஆனபிறகு ½-ஆழாக்கு கியாழம் சாப்பிடவும் குலைநோய் மார்எரிச்சல் வாயில் நீர் சுரப்பு தீரும் இச்சாபத்தியம்.

தாம்பிரச் செந்தூரம் முறை

சுத்திசெய்த தாம்பிர தகடு	பலம்	6
ரசம்	,,	1

பூரம்	பலம்	1
வீரம்	,,	1
லிங்கம்	,,	1
தாளகம்	,,	1
நெல்லிக்காய் கெந்தகம்	,,	1

இவையனைத்தும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழசார் விட்டு மைபோல் அரைத்து 3-பாகம்செய்து ஒருபாகத்தை மேற்கூறிய தகட்டின் மேல் பூசி சற்று காயவைத்து அக லின் மேல் வைத்து மேல் அகல்மூடி 7-சீலமண் செய்து காயவைத்து 10-விரட்டியால் புடம்போடவும் பின் தகட் டின் மேல் இருக்கும் பக்குமருந்தை எல்லாம் எடுத்து கல் வத்திலிட்டு இன்னொரு பாக மருந்தையும் சேர்த்து எலுமிச் சம்பழம்சார் படிவிட்டு அரைத்து முன் சொன்ன பிரகாரம் புடம்போடவேண்டியது இப்படி 3-புடம்போட வேண்டி யது பிறகு எடுக்க களங்காய்விடும்.

பின்பு கல்வத்திலிட்டு கெந்தக திராவகம் விட்டு அரைத்து அகலில் வைத்து மேல்மூடி வைத்து 7-சீலமண் செய்து காயவைத்து 3-விரட்டியால் புடம்போட செந்தூரமாய் விடும் இதை கல்வத்திலிட்டு அரைத்து சீசாவில் பத்தனஞ் செய்யவும் இதிலரிசி எடை நெய்யில் மத்தித்து காலை மாலை 10நாள்சாப்பிட்டுவர கண்டமாலை பௌத்திரம் மேகம் பாரிச வாய்வு இவைகள் தீரும் 40-நாள் சாப்பிட சிற்சிலகுட்டம் நீங்கும்.

பூரக்கட்டு செய்யும் முறை

அன்னபேதி	துலா	1
கற்பூர சிலாசத்து	,,	1

இவை இரண்டையும் குண்டுமணி இலைசார்விட்டு அரைத்து பூரம்துலாம்-1 அதற்குமேல் குண்டுமணி இலையை அறைத்து கவசம் செய்து காயவைத்து சீலமண் செய்து காய வைத்து இரண்டுகை விரட்டியில் புடம்போடவும் பூரம்

உருகி கட்டிவிடும் அதை எடுத்து தொழில் முறைகளுக்கு உபயோகிக்கலாம்.

தாளகக்கட்டு செய்யும் முறை

ஒரு பலம் தாளகம் வாங்கி குளத்திலிருக்கும் மட்டி ஒன்றை எடுத்துவந்து அதற்குள் தசை இருக்க தாளகத்தை நுழைத்து 3-சீலைமண் செய்து இரவு சமையல்செய்த பிறகு அடுப்பு கும்பியில் சொருகி காலையில் எடுத்து பார்க்க ஈயக் குண்டுபோல் உருகி நிற்கும் அதை எடுத்து பத்திரம் பண்ணவும் அசாத்திய ஜன்னி, ஜுரம், இப்போ பட்டவைகளுக்கு வீரத்தில் இரண்டு உரை பூரத்தில் நாலு உரை லிங்கத்தில் எட்டு உரை தாளகத்தில் நாலு உரை ஆக தேனில் உரைத்து காலை மாலை 3-நாள் உட்கொள்ளஜன்னி ஜுரம் தீரும் இச்சா பத்தியம்

காளமேக நாராயணச் செந்தூரம் செய்யும் முறை

ரசம்	துலாம்-5
நெல்லிக்காய் கெந்தகம்	,, 5
நாவாச்சாரம்	,, 5
படிகாரம்	,, 5

இவைகளை கல்வத்தில் போட்டு 3-நாள் அரைத்து மூசையிலடைத்து 7-சீலைமண்செய்து காயவைத்து கலியாண செந்தூரத்தைப்போல் செய்து சீசாவில் அடைத்துப் பார்க்க செவ்வல்லிமலர் போன்ற செந்தூரம் இருக்கும் அதில் 2-குண்டு மணி எடுத்து பசுவெண்ணெயில் காலை மாலை 40-நாள் சாப்பிட குன்மநோய் கண்டமாலை,பவுத்திரம்தீரும்இச்சாபத்தியம்

இரண வைத்தியம் அவசியம் பார்க்கவும் விலை ரூபா 1-4-0

கலியாணச் செந்தூரம் செய்யும் முறை

ரசம்	துலாம்	5
கெந்தகம்	..	5
நாவாச்சாரம்	..	3

இவைகளை கல்வத்தில் போட்டு 3-நாள் பொடித்து அறைத்து சீசாவில் நிரப்பி சீசாவாய்க்கு கல்கார்க்கு போட்டு 7-சீலமண்செய்து காயவைத்து ஓர் சட்டியில் நாலுவிரல் உயரம் மணல் கொட்டி அதன்மேல் சீசாவை வைத்து மறு படியும்மணலால்மூடி இன்னொருசட்டியால் மூடி சட்டிக்கு 7-சீலமண்செய்து ஒரேஜாதி விரகால் 32-ஜாமம்எரித்துபின் ஆறவைத்து சீசாவை பக்குவமாகஉடைத்து மருந்தெல்லாம் கல்வத்திலிட்டு அரைத்து எடுத்து சீசாவில் பதனஞ் செய்து கொள்ளவும் இதில் 2-குண்டுமணி இடை திரிகடுகு லேகியத் தில் 10-நாள் காலைமாலைஉட்கொள்ள அஷ்டகுன்மம் சூதக வாய்வு, சூதககட்டி, காய்ச்சர்கட்டி, வயிற்றுவலி, வயிறுஉப் பிசம் தீரும், 10-நாள் நெய்யில் உட்கொள்ள கண்டமாலை பவுத்திரம் கிரந்தி தீரும் இச்சாபத்தியம்

கிருஷ்ணு அபிரேக் செந்தூரம்

கிருஷ்ணு அபிரேக் பலம்-10

ஒரு கட்டியாக எடுத்து உலக்கடத்தில் போட்டு பழுக்க காச்சி பசுவின் கோமியம்வெள்ளாட்டு நீரும் கலந்து 7-தரம் காச்சி துவைக்க அப்படி முதல் தரம் தொவிக்கஅபிரேக்உதி ரும் அதை மூசையில்வைத்து துவைக்கவும் இப்படி 7-தரம் துவைத்தால் அபிரேக் சுத்தியாகும் அதை கல்வத்திலிட்டு பொற்றலைக்கையான்சார் விட்டு 3-நாள் அறைத்து வட்டு செய்துகாயவைத்துமறுபடியும்கல்வத்திலிட்டுசாற்றைவிட்டு 5-நாள் அறைத்து ஒருசெங்கல்லைபோல்தட்டி காயவைத்து

கல்சூலை போடும்போது 3-வது வரிசையில் அடுக்கி விடவும் சூலைஆறினபிறகு சூலைகல்லை எல்லாம் எடுத்துவிட்டு மருந்தை வெகு ஜாக்கிரதையாக எடுத்து பார்த்தால் முருக்கன் பூவின் நிறமாகக்காணும் அப்படி காணவிட்டால் மறுபடியும் கல்வத்திலிட்டு சார்விட்டு அரைத்து புடம்போடவும் புடம் அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண்செய்து கெஜ புடம்போட்டு எடுக்க தளுக்கு அற்று செந்தூரமாகும் இதை நெய்யில்கொடுக்க மேகம் 21 சூலை 12 வாதம் 84 கிராணி 6 காசம் 8, தவிர தாதுகட்டும் 10-20-40-நாள் காலை மாலை உட்கொள்ள அனேக மேகரோகம் தீரும் அனேகர் 108-புடம் போட்டு உபயோகபடுத்துஞ் செந்தூரத்தை பார்க்கிலும் இது சால சிறந்தது இதை அனுபோகத்தில் அறிந்து கொள்ளவும் அனுபானம் அரிசிஇடை சாப்பிடவும் இச்சாபத்தியம்.

தாளக பஸ்பம்

தாளகம் விராகனிடை ½

தாளகம் கொண்டுவந்து கல்சுண்ணும்பில் பனங்கள் விட்டு 7-தடவை தாளித்து கழுவி எடுத்துக் கொள்ளவும் பிறகு தென்னங்காய் அளவு வேப்பிலையை அரைத்து தாளகத்திற்கு கவசம் செய்து 7-சீலைமண் செய்து 8-எருவில் குழி புடம் போடவும் பஸ்பமாகும் அனுபானம் அரிசியிடை தேனில் சாப்பிடவும் 5-7-நாள் சாப்பிடவும் தீரும்வியாதிகள் க்ஷயம். சூலை, இரும்பல், சுவாச காசம் ஜ்வரம் இதுகள் தீரும் பீடி புகையிலை லாகிரிவஸ்து கூடாது இச்சாபத்தியம்.

நெல்லிக்காய் கெந்தகம் பஸ்பம் செய்யும்முறை

நெல்லிக்காய் கெந்தகம்	பலம்-1
கழுதை மூத்திரம்	ஒருபடி
கல்சுண்ணும்பு	கால்படி

சுண்ணும்பை கழுதை மூத்திரத்தில் கரைத்து அ தி ல் கெந்தகத்தைப்போட்டு அடுப்பில்வைத்து சிறுதீயாக எரிக்க வும் நீர் சுண்டின பிறகு கெந்தகத்தை எடுத்துக்கொள்ளவும் கெந்தகம் வெண்மையாய் இருக்கும் பிறகு கொடிவேலி பட் டையை அரைத்து கெந்தகத்துக்கு கவசம் கட்டி சீலமண் செய்து (வலுவாக சீலைசெய்யவும்) காயவைத்து கோழிப் புடம் போடவும், பஸ்பமாக்கும் கல்வத்தில் பொடித்து பத் திரம் பண்ணிக்கொள்ளவும், வேளைக்கு அரிசியிடையாக பசு வெண்ணெயில் சாப்பிடவும். தீரும் வியாதிகள்: மகோதரப், கபம், மேகவாய்வு, 80-குஷ்டம், காச்சல் கட்டி-தீரும் 5-நாள் சாப்பிட்டு 6-ம் நாள் மறுபத்தியம் கடும்பத்தியமாய் இருக்க வேண்டும்.

ரசபஸ்பம் செய்யும் முறை

ஒரு தோலா ரசத்தை அத்திப்பாலில் 2-ஜாமம் அரைத் து வடைதட்டி காயவைத்து 4-தோலா பெருங்காயம் அத்திப் பாலில் அரைத்து மேலும் கீழுமாக வைத்து ரசத்தை நடுவில் வைத்து மூடி மூசையில்போட்டு மூசையை கவிழ்த்துமூடி 7-சீலமண் செய்து 18-விரட்டியால் புடம்போடவும் பஸ்ப மாகும் இந்தபஸ்பத்தை அரிசியிடை எடுத்து வெண்ணெயில் கலந்து 5-நாள் வரை காலை மாலை சாப்பிடவும். தீரும்வியாதி கள்: கைகால் பிடிப்பு, வெள்ளை, கொருக்கு, புண் தீரும் தாது விர்த்தியாகும் இச்சாபத்தியம்.

துருசு பஸ்பம் செய்யும் முறை

சிகப்புபாலைச்செடியின் வேர்பட்டை விலாங்காய்பெரு மானம் அரைத்து உருண்டைசெய்து அதன் நடுவில் 1-பலம் துருசுவைத்து 7சீலைமண்செய்து 1விரட்டியில்புடம்போட்டு எடுத்துப்பார்க்க வெண்மையாய் இருக்கும் அதை கல்வத்தி லிட்டு 2-பலம் பாதரசம் விட்டு எலுமிச்சம்பழம் சார்விட்டு 2-ஜாமம் அரைக்க ரசம் வடியும் அதை வட்டுசெய்து காய

வைத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி 7-சீலமண்செய்து காய்ந்தபிறகு 1-விரட்டியில் புடம்போடவும் இரண்டும் சேர்ந்து சுண்ணமாகும் இதை தொழில்முறைகளுக்கு வைத்துக்கொள்ளவும் இதில் அரிசியிடை எடுத்து காலை மாலை 40-நாள் சாப்பிடவும் சகல வியாதியும் பரந்தோடும் துருசு கட்டியாய் இருக்கவும் இச்சாபத்தியம்.

தங்க பஸ்பம் செய்யும் முறை

தங்கரேக்கு விராகனிடை 1

அதை தம்படியளவாய் கத்தரித்துக் கொள்ளவும் தும்பயிலையை அரைத்து வெளாங்காய் அளவு உருண்டை செய்துக்கொள்ளவும் ரேக்துண்டை தனித்தனியாக அதில் சொருகிவிட்டு பின்பு அவ்வுருண்டைமீது 5-சீலமண் செய்து சற்று ஊரவைத்து 20-வரட்டியில் புடம்போடவும் ஆறின பின்பு சீலையை பிரித்து பார்க்க வெண்மையாய் இருக்கும் அதை வெகு ஜாக்கிரதையாய் பேனு கத்தியால் யெடுத்து நுனிக்கி சீசாவில் பதனம் பண்ணிக்கொள்ளவும் இதை அரிசியிடை வெண்ணெயில் கலந்து காலை மாலை 10-நாள் சாப்பிடவும் தீரும்வியாதி; நீர்ஒழுக்கு பிரமேகம் பூரணதாதுவிர்த்தி உண்டாகும் புருஷலக்ஷணத்தையும் உண்டாக்கும் இச்சாபத்தியம்

சீமை கல்நார் பஸ்பம் செய்யும் முறை

சீமைக் கல்நார் பலம் 5

ஒரு கல்லுரலில் போட்டு நன்றாக இடித்து கல்வத்தில் போட்டு அரைக்கும் போது வெள்ளெருக்கன் கொழுந்தை சேர்த்து அரைக்கவும் இப்படியே இரண்டு ஜாமம் வரை எவ்வளவு கொழுந்து வாங்கிக்கொள்ளுமோ அவ்வளவுகொழுந்து சேர்த்து அரைத்துக் கொள்ளவும் பின்பு தட்டையாக செய்து காயவைத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி 5-சீலமண்

செய்து உலர்ந்த பின்பு 50-விரட்டியில் புடம்போடவும் ஆரின பின்பு பார்த்தால் வெண்மையாய் இருக்கும் அதை சீசாவில் பதனம்செய்து 3-குண்டுமணியெடை எடுத்து பசு வெண்ணெயில் கலந்து 10-நாள் காலைமாலை சாப்பிட்டுவரவும் வெள்ளை நீர்ஒழுக்கு இப்பேர்பட்ட வியாதிதீரும் தாதுவிர்த்தி யாகும் இதைப் பல்துலக்கினால் ஆடும்பல்லை கெட்டிப்படுத் தும் இச்சாபத்தியம்.

பவழ பஸ்பம் செய்யும் முறை

பவழக்கொடி பலம் 1

இதை எலுமிச்சம்பழசாற்றில் 4-ஜாமம் ஊரவைத்து எடுத்து எருக்கன்பால் விட்டு கல்வத்திலிட்டு அரைத்து வட்டிசெய்து காயவைத்து அகலில் வைத்து மேல் அகல்மூடி 5-சீலைமண்செய்து காயவைத்து முழுபுடம் போட்டு எடுக்க பஸ்பமாகும் சீசாவில் பதனம் பண்ணிக் கொள்ளவும் இதை குண்டுமணியெடை எடுத்து பசுவெண்ணெயில் 10-நாள் காலை மாலை சாப்பிட நீர் சுளுக்கு மேககாந்தம் வெள்ளை இவைகள் தீரும் இதை தேனில் கலந்து சாப்பிட்டால் ஜுரம் நீங்கும் இச்சாபத்தியம்.

தாம்பிர பஸ்பம் செய்யும் முறை

நீரடி முத்துக்கொட்டை பலம் 10

நீரடி முத்துக்கொட்டையை துண்டுத் துண்டாக நெருக்கி அதற்குத் தகுந்த அகலில் ½-பாகம் நிறப்பி ஒரு பழைய செம் புக்காசை துலக்கி சுத்திசெய்து பாதரசம் விட்டு துலக்கி வெள்ளியைப்போல் செய்து அகலின்மத்தியில் வைத்து மற்ற ½-பாகம் கொட்டையைப் போட்டு மேல் அகல்மூடி 7-சீலை மண் செய்து ஒருகெஜ அளவு குழிப்புடம் போடவும் ஆரின பின்பு எடுத்துப் பார்க்கநெம்பருடன் நீறி இருக்கும் பஸ்ப மாக இருக்கும் இதை கல்வத்திலிட்டு லேசாக அரைத்து சீசா

வில் பதனம் பண்ணவும் அநுபானம் அரிசியிடை பசு வெண்ணெயில் காலை மாலை 10-நாள் சாப்பிட பவுத்திரம் கண்டமாலை காலம் பாரிஸவாய்வு தீரும் இச்சாபத்தியம்.

அய பஸ்பம் செய்யும் முறை

இரும்பு அரப்பொடி பலம் 5

நிறுத்தெடுத்து பீங்காண் கோப்பையிலிட்டு எலுமிச்சம் சார் அயப்பொடி நிறைய ஊற்றி 2-நாள் ஊரவைத்து ஊறின பின்பு கழுவி காயவைத்து புலிப்புமாதலையிலை சாற்றில் 15-நாள் சூரிய புடமாய் வைத்து பிறகு ஒரு அகலில் அள்ளி வைத்து மேல் அகல்மூடி 7-சீலைமண்செய்து காயவைத்து ஒரு கெஜம் விரட்டி அடுக்கி புடம்போடவும் ஆறினபின் பார்க்க தவளநிறமாய் இருக்கும் அதில் அரிசியிடை நெய்யில் கலந்து சாப்பிட இப்படி 20-நாள் சாப்பிட்டால் தாதுவிர்த்தி யாகும் நரம்பெல்லாம் முருக்கேரும் அதிக பலமுண்டாக்கும் தயிர், நெய், பால், வெள்ளாட்டுக்கறி அதிகம் சேர்க்கவும் இச்சாபத்தியம்.

மாந்தம், வலி, ஜுரம், இதுகளுக்கு மாத்திரை

சுக்கு மேல்தோல் நீக்கியது	½-பலம்
மிளகு	½-தோலா
திப்பிலி	½-பலம்
கஸ்தூரி	1-குண்டுமணி
குங்குமப்பூ	¼-தோலா
கோரோஜனம்	⅛-தோலா
அபினி	½-தோலா
லிங்கம்	½-தோலா
சன்னராஷ்டம்	2-பலம்

சன்னராஷ்டம் அம்மியில் வைத்து ஜலம் விட்டு அரைத்து பால் பிழிந்துக்கொண்டு காட்டுக் கருணைக்கிழங்குவேர் ½-பலம் அரைத்து நிழலில் உலர்த்தி கல்வத்தில் போட்டு முன் மருந்தையும் போட்டு சன்னராஷ்டம் பால்விட்டு அரைத்து கொத்தமல்லி பிரமானம் மாத்திரைத்திரட்டி நிழலில்உலர்த்தி பதனம் பண்ணவும் காலை மாலை சன்னராஷ்டம் பாலில் ஒரு மாத்திரை கலந்து கொடுக்கவும் 5-நாள் சாப்பிட மாந்தம் வலி வாய்வு நீங்கும் இச்சாபத்தியம்.

ஜலதோஷ மாத்திரை

சுக்கு	பலம்	¼
திப்பிலி	,,	¼
மிளகு	,,	¼
லவங்கம்	,,	¼
சன்னராஷ்டகம்	,,	¼
எலிகாரம்	,,	¼
லிங்கம்	,,	¼

இவையெல்லாம் ஒன்று சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழம் சார்விட்டு அறைந்து குண்டுமணியிடை பிரமானம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி பதனம் பண்ணவும் ஜலதோஷங்களுக்கு 1-மாத்திரை தேனில் குழைத்து கொடுக்கவும் இச்சாபத்தியம்.

அரைப்பு 2-மணிநேரம்

அமிர்த சஞ்சீவி மாத்திரை

மூன்று கல்லு அடுப்பு மாதிரி வைத்து அதன்மேல் பீங்கான் கோப்பையை வைத்து அந்த கோப்பையில் செவ்வீர் கட்டி பலம் ½ வைத்து அதற்கு சிறு நெருஞ்சி சாற்றில் சுருக்கு கொடுக்க மெழுகாகும் அதை ரொட்டிமாவில் திரட்டி சிறுபயர்போல் மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும்

இதில் தீரும் வியாதிஃ வாந்திபேதி, வாய்வு, ஜன்னி, சுவாசம் தீரும். அநுபானம் புளிச்சத்தண்ணீரில் கொடுக்கவும் மாத்திரையை வயதுக்கு தக்கபடி 1-2-மாத்திரை கொடுக்கவும் இச்சாபத்தியம்.

பெரும் மூத்திரத்திற்கு மாத்திரை

லிங்கம் பலம் 1

இதை பீசெங்கன் சார்விட்டு 3-நாள் அரைத்து சிறு சுண்டக்காய் அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி அத்திக்கள்ளி பாலில் பிரட்டி அரொட்டி மாவில் பிரட்டி பசு வெண்ணெயில் காலை மாலை 1-நாள் ஒரு வேளைக்கு 1-மாத்திரை சாப்பிடவும் பத்தியம் பசும்பால் சாதம் சாப்பிடவும்.

ஆனந்த பூபதி மாத்திரை

சுத்தி செய்த வீரம்	1	விராகனிடை
வெண்ணுபி	1	விராகனிடை
கோமியத்தில் சுத்திசெய்த வாளம்	1	விராகனிடை
லிங்கம்	1	விராகனிடை
நவாச்சாரம்	1	விராகனிடை

இதுகளெல்லாம் சுத்திசெய்து கல்வத்தில்போட்டு முலை பால் விட்டு 2-ஜாமம் அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலில் உலர்த்தி வைக்கவும். வெண்ணை, நெய், பால் சேர்க்கவும். தீரும் வியாதிகள்ஃ மகோதரம், சோகை, பித்தப்பாண்டு, வீக்கம், குன்மம், நீர்கட்டு இதுகள் தீரும் காலையில் மாத்திரம் 1-நாள் சாப்பிடவும். 1-நாள் விட்டு மறு நாள் சாப்பிடவும். குன்மத்திற்கு 5-நாள் நீர்கட்டுக்கு 3-நாள் ஜுரத்திற்கு 1-நாள் இப்படி சாப்பிட்டுக் கொண்டு வரவும் மீன், கருவாடு புகையிலை இதுகள் கூடாது.

கரும் செவ்வாய்க்கு மாத்திரை

ஜிரிக்கி விரை	1	விராகனிடை
மூசாம்பரம்	1	விராகனிடை
தும்மிட்டிக்காய் சோர் சுட்டது	1	விராகனிடை

இந்த மூன்று சரக்கையும் கல்வத்தில் போட்டு நன்றாய் மைபோல் அரைத்து உளுந்து பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலில் உலர்த்திவைக்கவும் அநுபானம் முலைபாலில் உரைத்துக்கொடுக்கவும் கடும்பத்தியம் நல்லெண்ணை கடுகு கூடாது

மாந்த மாத்திரை

ஆமை ஓட்டை துண்டுதுண்டாய் நருக்கி குப்பமேனியிலையை அரைத்து ஓட்டுக்கு கவசம்செய்து 3-புடம் போடவும் பிறகு ஓட்டை எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து பூநாகம் ஓட்டுக்கு சரியிடை சேர்த்து அரைத்து காலணபிரமாணம் பில்லைதட்டி நிழலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி 7-சீலமண் செய்து ½-கெஜம் புடம் போடவும் இதுமாதிரி 3-புடம் போடவும் பஸ்பமாகும் பஸ்பத்தை கல்வத்தில் போட்டு அரைத்து பதனம் பண்ணிக் கொள்ளவும் நாயுருவி, வசம்பு, கியாழத்தில் காலை மாலை அரிசியிடை கொடுக்கவும் இப்படி 3-நாள் கொடுக்க எப்பேர்பட்ட மாந்தமும் தீரும். நல்லெண்ணை, கடுகு, கூடாது இச்சாபத்தியம்.

பேதி மாத்திரை

சுத்திசெய்த வாளம்	1	பலம்
வெங்காரம்	2½	விராகனிடை
ரசபஸ்பம்	1½	விராகனிடை
கோதுமை நொய்	½	பலம்

கத்தாழை சார்விட்டு 2-ஜாமம் அரைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி பதனம் பண்

ணிக்கொள்ளவும். பிறகு 2-3-4-வயதுக்குத் தகுந்தபடி மாத்திரை கொடுக்கவும். இச்சாபத்தியம்.

குழந்தைகளுக்கு அமிர்த சஞ்சீவி மாத்திரை

சுத்திசெய்த நாபி	பலம்	½
நெல்லிக்காய் கெந்தகம்	பலம்	½
ரஸபஸ்பம்	பலம்	½
கடுகுரோணி	பலம்	½
நெல்லி வத்தல்	பலம்	½
தானிக்காய் தோல்	பலம்	½
கடுக்காய் தோல்	பலம்	½
சித்திரைமூலம் வேர்ப்பட்டை	பலம்	½
சுத்திசெய்த நேர்வாளம்	பலம்	1

இதுகளைக் கல்வத்திலிட்டுக் கரிசலாங்கன்னி சார்விட்டு 3-ஜாமம் அரைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி புட்டியில் பதனம் பண்ணிக்கொள்ளவும் இதில் தீரும் வியாதிகள்: ஜுரம், வாய்வு தீரும். குழந்தைகளுக்கு தக்கினபடி 2-3-வயது பிரகாரம் மாத்திரை கொடுக்கவும். இச்சாபத்தியம்.

குழந்தைகளுக்கு மாந்தம் உப்பிசத்திற்கு மாத்திரை

ஐந்து தினுசு உப்பு, அரிசி, திப்பிலி, நாயுரிவி, சாம்பல், புளியாம் பரணி, கடுக்காய்த் தோல், பெருங்காயம் மிளகு, சுக்கு, ஓமம், கடுகுரோணி, நிலாவிரை, மோடி, சித்தரத்தை இதுகளை சமனிடை எடுத்து கல்வத்தில் போட்டு கரசலாங்கன்னி சார்விட்டு இரண்டுஜாமம் அரைத்து சுண்டக்காய் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி பதனம் பண்ணிக் கொள்ளவும். தீரும்வியாதி: மாந்தம், உப்பிஷம், வாந்தி, வயிற்றுவலி, பக்கயிசுவு, வாய்வு இவைகள் தீரும். இச்சாபத்தியம்

வாந்திபேதி மாத்திரை

பாவரஸம்	பலம்	½
சூரத்து கற்பூரம்	பலம்	½
நெல்லிக்காய் கெந்தகம்	விராகனிடை	½

இந்த மூன்று தினுசையும் கல்வத்தில்போட்டு கம்மாறு வெற்றிலைச் சாற்றில் இரண்டு ஜாமம் அரைத்து துவரை பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு மாத்திரை தேனில் கொடுக்கவும். 3 மாத்திரைக்கு மேல் கொடுத்தால் கோதுமை நொய் கஞ்சி கொடுக்கவும்.

பாரிச வாய்வுக்கு சங்கு பாஷாண பஸ்பம்

வீரம்	பலம்	1
சங்கு பாஷாணம்	பலம்	1

இந்த இரண்டையும் இடித்து தூள்செய்து புதுகுண்டாஞ் சட்டியில் போட்டு மேல்சட்டி மூடி 4-ஜாமம் எரிக்கவும் மேல்சட்டியில் பதனம் யேறியிருக்கும் அரைச்சுறண்டி புட்டியில் பதனம் பண்ணவும். அரிசியிடை பனவெல்லத்தில் கொடுக்கவும். காலை மாலை 5-நாள் சாப்பிடவும். நாள் ஒன்றுக்கு புரு, காடை, கௌதாரி சாப்பிடவும். சுட்ட உப்பு புளி, நெய், தாளிப்பு. மறுபத்தியம் 5-நாள் இருக்கவும். ஸ்நானம் சந்தனாதி தைலத்தில் செய்யவும் எப்படிப்பட்ட பாரிச வாய்வும் பரந்தோடும்.

குழந்தைகளுக்கு தித்தீப்பு பேதி

மிளகு	விராகனிடை	1
ஓமம்	விராகனிடை	1
சுக்கு	விராகனிடை	1
சுத்திசெய்த வாளம்	பலம்	5
கடுகுரோகணி	பலம்	3

கற்கண்டு	பலம்	5
திராட்சப்பழம்	பலம்	5

இவையெல்லாம் கல்வத்தில்போட்டு பசும்நெய் பலம்-2 புதுதேன் பலம்-7½, கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு 4-ஜாமம் அரைத்து கல் ஜாடியில் வைத்துக்கொள்ளவும். குழந்தைகளுக்கு ஒரு காசு அளவு எடுத்து அரிசி அடையில் தடவிக் கொடுக்கவும் பேதியாகும். பெரியவர்களுக்கு காலணையிடை சாப்பிடவும். பேதியதிகமானால் மோர்சாதம் சாப்பிடவும் இச் சாப்பத்தியம். சாயரட்சை வசம்பு கியாழம் கொள்ளவும்.

குழந்தைகளுக்கு மாந்த மாத்திரை

நேர்வாளம்	விராகனிடை	1
இந்துப்பு	விராகனிடை	1
பெருங்காயம்	விராகனிடை	1
வாய்விளங்கம்	விராகனிடை	1
கடுரோகணி	விராகனிடை	1
ஓமம்	விராகனிடை	1
ஆமையோடு	விராகனிடை	1
மிளகு	விராகனிடை	1
திப்பிலி	விராகனிடை	1
சுக்கு	விராகனிடை	1

இந்தப் பத்து வகையும் சேர்த்து கல்வத்திலிட்டு உத்தாமணி சார்விட்டு அரைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். (இதற்கனுபானம்) அகத்திக்கீரையை வதக்கி சார்பிழிந்து அதில் ஒரு மாத்திரை அல்லது 1½மாத்திரையாககொடுக்கலாம் கலியாண முருக்கயிலையை வதக்கி அதின் ரசத்திலும் கொடுக்கலாம்.

தீரும் வியாதிகள்:—அள்ளு மாந்தம், முக்கு மாந்தம், ஜ்வரம் இதுகள் தீரும். இரண்டொரு தகுதி வலசுத்தியாகும்.

பத்தியம்:—புளி நீக்கவும். மருந்து கூட்டும்போது ஆமையோட்டை மாத்திரம் உத்தாமணிச் சாற்றில் ஒரு ராத்திரி பகல் ஊரவைத்தெடுத்து சேர்த்துக்கொள்ளவும்.

ஜுரபரணி அல்லது முறைக்காய்ச்சலுக்கு

வெள்ளைப் பாஷாணம் அல்லது சங்கு பாஷாணத்தை கொண்டுவந்து துண்டுதுண்டாய் பொடித்து பெரிய பாவக்காயைக்கீறி விரைக்கிவிட்டு அதனுள் இந்த பாஷாணத்தை வைத்து நூல்சுற்றி சீலைமூடி செம்மண் கவசம் செய்து 5-விரட்டியில் புடம்போடவும் மேல்துணி சாம்பலான பிறகு மருந்தை யெடுத்து சாம்பலைத் தட்டிவிட்டு அந்தப் பாவக்காயுடன் கல்வத்திலிட்டரைக்கவும். இளகாவிட்டால் வேவித்த பாவக்காய் சாறுவிட்டு அரைத்து சிறு சுண்டைக்காயளவாக உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக் கொள்ளவும். (இதற்கு அனுபானம்) ஒருமாத்திரை வாயில் போட்டுக்கொண்டு மிளகு கியாழஞ் சாப்பிடவும். இச்சாப் பத்தியம்.

சகல காய்ச்சலுக்கும் லிங்க மாத்திரை

லிங்கம் 1½-விராகனிடை, திப்பிலி 2½-விராகனிடை பசும்பாலில் ஒருஜாமம் அரைத்து பயரளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். வேண்டியபோது உலர்ந்த இஞ்சி கியாழத்திலிட சகல காய்ச்சலும் நீங்கும்.

பத்தியம்:—சுட்டபுளி வருத்த உப்பும் கூட்டவும்.

ஜீவ சஞ்சீவி குளிகை

சுக்கு	வாய்விளங்கம்
திப்பிலி	சேராங்கொட்டை
வசம்பு	நாவி
கடுக்காய்	சீந்திற்கிழங்கு
தான்றிக்காய்	சித்திரமூலம் வேர்பட்டை

இவைகளைச் சமயிடையாய் தூக்கி கல்வத்திலிட்டுக் கோசலம் விட்டரைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி புட்டியில் போட்டு வைத்துக்கொள்ளவும். (இதற்கு அனுபானம்) அஜீரணத்திற்கு ஒரு மாத்திரை வாந்தி பேதிக்கு இரண்டு மாத்திரை ஜன்னி பாதத்திற்கு நான்கு மாத்திரையாக திரேக திடமறிந்து இஞ்சிச் சாற்றிலிடவும்.

கிராணி கழிச்சலுக்கு

கிராம்பு	அபினி
சுக்கு	அதிவிடையம்
இலவங்கம்	ஜாதிக்காய்

வகைக்கு 1¼-விராகனிடையாக எடுத்து மாதுளம் பிஞ்சி இரண்டு எண்ணெய் வார்த்து சுருக்கிஷ்டினுசுகளுங்கூட்டி தயிர் வார்த்து அரைத்து சுண்டக்காய் பிரமாணம் உருண்டை செய்து தயிரில் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

அண்டவாத மாத்திரை

ஒருபலம் பூரத்திற்கு பால்நண்டையிடித்து ரசம் எடுத்து நாலுஜாமம் சுருக்கு கொடுத்து உத்தாமணி வேர்பட்டை ரசத்திலில் மூன்று ஜாமம் சுருக்குக் கொடுத்து ஷை ரசத்தால் அரைத்து பயறுபோல் மாத்திரைசெய்து முத்தெண்ணெயில் நனைத்து 20-நாள் சாப்பிடவும் இச்சாப்பத்தியம். இதற்கு முதல் நாள் பேதிக்கு சாப்பிடவேணும். ஆகையால் கழற்சி வேர் 3-பலம் எடுத்துயிடித்து கியாழம்வடித்து மிளகு ரசஞ் செய்து முத்தெண்ணெய் பலம்-1 விட்டு, சாப்பிட்டு விட்டு மறுநாள் முதல் ஷை மாத்திரை உட்கொள்ளவும்.

பூரக்கட்டு

சீனபூரம் ஒருபலம் வாங்கி முலைப்பாலில் மூன்று நாள் ஊரவைத்தெடுத்து உலர்த்தி ஒரு சட்டியில் துளசி ரசம்

பிழிந்து அதில் பூரத்தை வைத்து அடுப்பேற்றி சிறு தீயாக அந்த ரசஞ்சுண்டுகிற வரையிலும் எரித்தெடுத்தால் அது கட்டும்.

வீரக்கட்டு

வேண்டிய மட்டும் வீரத்தைக் கொண்டுவந்து சாம்பிராணி விராகனிடை-1, நெல்லிக்கா கெந்தகம் விராகனிடை-1 இரண்டும் தூள்செய்து கரண்டியிலிட்டு அனல் பிடிக்க உருகி வருஞ்சமயத்தில் வீரத்தை போட்டுப்புரட்டி எடுத்துக்கொள்ளவும் ஜன்னி, வாய்வுகளை கேட்டும் இதுபோல லிங்கத்தையும் கட்டிக்கொள்ளலாம்.

லிங்கக்கட்டு

சீனலிங்கம்	பலம் 1
சேராங்கொட்டை	பலம் 15

சேராங்கொட்டை துண்டுதுண்டாகவெட்டி ஒருசட்டியில் பாதிப்போட்டு அதன்மேல் லிங்கக் கட்டியை வைத்து மற்ற பாதி கொட்டையைபோட்டு லிங்கம் தெரியாமல்மூடி அடுப்பிலேற்றி எரிக்கும்போது விளக்கைக் காட்டினால் திக்கென்று எரியும் அனல் அடங்கிய பிறகு லிங்கக்கட்டியை எடுத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு தேனில் உரைத்துக் கொடுக்கலாம். பத்தியம்: புளிகூடாது லிங்கக்கட்டியில் பாதி உடைத்து கல்வத்தில் பொடித்து வைத்துக் கொள்ளவும் இதற்கு லிங்க செந்தூரம் என்று பெயர். எல்லாவித சுரங்களுக்கு அரிசியிடை பிரமாணம் தேனிற் கொடுக்கவும் சுரம் நிற்கும் பித்தசுரத்திற்கு தும்பைபூ கஷாயத்தில் கொடுக்கவும்

ரசகற்பூரக் கட்டு

4-விராகனிடை ரசகற்பூரம்வாங்கி முலைபால், நண்டையிடித்து சாறு எடுத்து இரண்டு ஜாமம் சுருக்குக் கொடுத்து பிறகு முசுமுசுக்கைச் சாறுபிழிந்து இரண்டுஜாமம் சுருக்குக் கொடுக்கக் கட்டும்.

லிங்க பற்பம்

லிங்கம் வேண்டிய மட்டும் வைத்துக்கொண்டு வெள் ளெருக்கன் வேரில் கொஞ்சம் பொட்டுலுப்புப் போட்டு இடித்து சார்பிழிந்து அந்த ரசத்தில் பாதிஎடுத்து லிங்கத்திற்கு சுருக்குக்கொடுத்து மற்ற சார்விட்டு ஷை உப்பை அரைத்து உலர்த்தி தூள்செய்து கழுத்து நீண்ட குடுவையில் அறை குடுவை அறைத்த உப்பை போட்டு அதின்மேல் லிங்கத்தை வைத்து அதன்மேல் அறைத்த உப்பைபோட்டு நிறப் 9 10-வரட்டியில் புடம்போட்டு உப்பு சிவந்தவுடன் எடுத்து ஆர வைத்து லிங்கத்தை எடுத்துக் கொள்ளவும்.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணை இதுகளில் பணவிடை கொடுக்கவும்.

தீரும் வியாதிகள்:-மேகம், ரணம், கரிமேகம், தழுப்பு வாய்வு இவை எல்லாம் தீரும்.

பத்தியம்:—இறைச்சி, பீர்க்கங்காய், முருங்கைபிஞ்சு, துவரை, நெய் தாளிப்பு, நெய் சேர்த்துக் கொள்ளவும். வாய் பிடித்தால் பசும்பால் கொப்பளித்து முழுங்கவும். 3-நாள் அல்லது 5-நாள் சாப்பிடவும்.

செம்மேகத்திற்கு பேரண்ட பற்பம்

பால் போலிருக்கும் அண்ட ஓட்டை பூநீரில் கொதிக்க வைத்து கழுவியெடுத்து எருமை சாணி யடைத்து மத்தியில் வைத்து அரைகெஜ புடமிட்டெடுத்து இது நான்கு பாகத் திற்கு பூரம் ஒருபாகஞ் சேர்த்து வாய் நீராலரைத்து பில்லை செய்துலர்த்தி அரைகெஜ புடமிட்டு எடுத்துக்கொள்ளவும்.

அனுபானம்:—தேனில் பணவிடையாக அரை மண் டலம் கொடுக்க செம்மேகம் தீரும்.

சீமை கல்நார் பற்பம்

கல்நார் ஐந்துபலம் கொண்டுவந்து துண்டுத் துண்டாக யிடித்து புதுக்குடுவையில்போட்டு எலுமிச்சம்பழசார்விட்டு நிழலில் ஊரவைத்து சுண்டினபிறகு இதேமாதிரியாய் 5-தரம் ஊரவைத்தெடுத்து 30-வரட்டியில் புடம்போட்டு பிறகு கல்வத்திலிட்டு அரைத்துகொள்ளவும் நெய் அல்லது வெண்ணெயிற் கொடுக்க பல்நோய், மார்நோய், இதுகள் தீரும். சூடு நிவர்த்தியாகும். இச்சாப்பத்தியம்.

மலங்கட்டுக்கு லேகியம்

மஞ்சள்	பலம்	1
கடுகு	பலம்	1
கடுக்காய்தோல்	பலம்	1
சூரத்துக்கடுக்காய்தோல்	பலம்	1
கர்கடகசிங்கி	பலம்	1
தான்றிக்காய்தோல்	பலம்	1
நெல்லிவத்தல்	பலம்	1
நீர்முள்ளி	பலம்	1

மேல்கண்ட சரக்குகளை சூரணம் செய்து பாதம் நெய் அல்லது பசு நெய் பலம்-2, தேன் பலம்-5, ஒன்றுகக் கலந்து காய்ச்சி மேற் சூரணத்தைப்போட்டு கலந்து வைத்துகொள்ளவும். 2-அல்லது 2½-விராகனிடையாக 7-நாள் காலை மாலை இருவேளையும் சாப்பிடவும். மலக்கட்டு, மூலம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

கற்பூர சிலாசத்து பற்பம்

கற்பூர சிலாசத்து பத்து களஞ்சி வாங்கி சுண்ணும்பு தளமாய்ப்பூசி 3-வரட்டியில் புடம் வைத்தால் பஸ்பமாகும் அதின் மேலிருக்கும் சுண்ணும்பைத் தட்டிவிட்டு கல்வத்தி

லரைத்து யெடுத்துக் கொள்ளவும். இதை நெய்யில் கொடுத் தால் சகல மேகம், வாய்வு, சூடு, நீங்கும். இச்சாபத்தியம்.

உஷ்ணவாய்வு பேதி இரைச்சல் இதுகளுக்கு படிகார பஸ்பம்

படிகாரம் பலம் 1

இதைத் தூள்செய்து சட்டியில் பாதித் தூள்போட்டு ½ அரைசம்விட்டு பொரித்து மறுபடியும் தூள்செய்து புட்டி யில் பதனம் பண்ணவும். வேளைக்கு 3-குண்டுமணி யிடைக் கொடுக்கவும். ஷை வியாதிகள் தீரும். நெய் தாளிப்பு, தண் ணீர் சாதம் சாப்பிடவும்.

வெள்ளை இருமலுக்கு படிகார பற்பம்

சிறிய மண் குடுவையில் ஒரு பலம் பசும்வெண்ணையை விட்டு அதின் மத்தியில் ஒரு பலம் படிகாரம் ஒரே கட்டியாக அதன் நடுவில் இரங்க சொரிகிவைத்து வாய்புரம் ஓடுமூடிச் சீலை மூன்றுசெய்து 5-வரட்டியில் புடம்போடவும். நீர்த்துப் பஸ்பமாயிருக்கும் அதை வெண்ணையில் மிளகு யிடைக் குழைத்துக் கொடுக்க மூன்றுநாள் ஆறுவேளையில் வெள்ளை நீர்கடுப்பு இதுகள் தீரும். மூன்று குன்றியிடை பஸ்பத்தை முசுமுசுக்கையிலை மூன்றில் பத்தியாய் அடுக்கி மடித்து சாப் பிட இருமல் தீரும். 7-நாள் சாப்பிடவும் தினம் ஒரு யிலை அதிகப்படுத்தவும்.

பாதும் தாது விர்த்தி லேகியம்

சாலாமிசிரி	விராகனிடை	½
லவங்கம்	விராகனிடை	½
லவங்கப்பட்டை	விராகனிடை	½
ஜாதிக்காய்	விராகனிடை	3/4
ஜாப்பத்திரி	விராகனிடை	3/4
நீர்முள்ளிவிரை	விராகனிடை	1

துத்திவிரை	விராகனிடை	1
ரத்தசூரிவிரை	விராகனிடை	½
நிலப்பனைக்கிழங்கி	விராகனிடை	½
சாரைப்பருப்பு	விராகனிடை	1
பாதம்பருப்பு	விராகனிடை	1
இரத்தினபுருசு	விராகனிடை	1
குரோசானி ஓமம்	விராகனிடை	1
உடங்கன் விரை	விராகனிடை	1
ஏலம்	விராகனிடை	3/4
ஆனைதிப்பிலி	விராகனிடை	½
தூதுருசுருக்கு	விராகனிடை	1
சின்னயாகோந்து	விராகனிடை	1¼
காமச்சக்கரக் கிழங்கு	விராகனிடை	½
கஜர்பழம்	விராகனிடை	2
ரூமஸ்தகி	விராகனிடை	3/4
பீசுபிந்து	விராகனிடை	½
முந்திரிப்பருப்பு	விராகனிடை	2½
பூமிசக்கரக் கிழங்கு	விராகனிடை	1
ஆவாரம் விரை	விராகனிடை	½
காட்டுவாழை விரை	விராகனிடை	½
வேலம்கோது	விராகனிடை	1
பாதம்கோது	விராகனிடை	1
பூமாதலம் விரை என்பது	விராகனிடை	½
சர்க்கரை	வீசை	1¼
பசும்பால்	படி	1
கெஞ்சா	விராகனிடை	2
நெய்	வீசை	3/4
தேன்	வீசை	2

கெஞ்சாவை இரவில் தண்ணீரில் ஊரவைத்து காலையில் 7-தரம் கழுவி எடுத்தால் சுத்தியாகும் மேல்படி கடைச்சரக்குகளை வஸ்திரகாயம் செய்து மைபோல் ஜலித்துத்தூளை சர்க்கரை பாவுபிடித்து பாவு முரியாமல் காச்சவும். தூளைப் போட்டு கிண்டி அதில் நெய்விட்டுக் கிண்டவும். இறக்கும் போது தேன் விடவும். 40-நாள் சாப்பிடவும். பால், நெய் இதுகள் ஏராளமாக சேர்க்கவும்.

வீரபற்பம் பச்சை வெட்டு

வீரம், இரதம், பொரிகாரம் இந்த மூன்றும் சமயிடையாயெடுத்து அரைத்து பனவெல்லத்தில் ஒரு பணவிடைபற்பம் வைத்து சாப்பிட புண், வெள்ளை, கிரந்தி, கட்டி, சூலை, சூதக வாய்வு, விஷக்கட்டி, மலக்கட்டு இதுகள் தீரும். 3-நாள் 6 வேளை சாப்பிடவும், வருத்த உப்புசூட்டவும் புளிஆகாது

விடா ஜுரத்திற்கு பைரவி மாத்திரை

சுக்கு	பலம்	½
திப்பிலி	விராகனிடை	½
வெள்ளை மிளகு	விராகனிடை	½
நாபி	விராகனிடை	3/4
லிங்கம்	விராகனிடை	3/4
வெண்காரம் பெரித்தது	விராகனிடை	½
நெல்லிக்காய் கெந்தகம்	விராகனிடை	½

நாபியை பசும் கோமியத்தில் 3-நாள் ஊரவைத்து லிங்கத்தை முலைபாலில் 3-நாள் ஊரவைத்து யெடுத்துஷை இரண்டையும் சுத்தி செய்து பிறகு மேல்கூறிய மருந்துகளை யெல்லாம் கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழம் சார் விட்டு நாலு ஜாமம் அரைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரை செய்து

நிழலில் உலர்த்தி பதனம் பண்ணிக் கொள்ளவும் இஞ்சிசார், தேன், சரியிடை சேர்த்து வேளைக்கு 2-மாத்திரை சாப்பிடவும் இச்சாபத்தியம்.

பக்க சூலைக்கு மருந்து

பூண்டு பல்லை உரித்தது	விராகனிடை	½
மிளகு	பலம்	½
சித்திரமூலம் வேர்பட்டை	விராகனிடை	½
சீரகம்	பலம்	½

மருந்தை நெருக்கி புதுசட்டியில் பால்விட்டு சட்டிக்கு துணியால் வாய்கட்டி பொடிசெய்த மருந்தை அதில்போட்டு வேகவைத்து இரக்கி கல்வத்தில் அரைத்து அடை செய்துப் பாக்கு பிரமாணம் பில்லை செய்து விளக்கெண்ணையில் வேகவைக்கவும் பில்லை செய்த அடையை உள்ளுக்கு சாப்பிடக் கொடுக்கவும் மேலுக்கு எண்ணையை தடவிக் கொள்ளவும் இச்சாப்பத்தியம்.

பலகாரை பற்பம்

பலகாரை 3-பலம் வாங்கி புதிய குடுவையில் போட்டு எலுமிச்சம்பழம் சார்விட்டு கவசம் செய்து 10-வரட்டியில் புடம்போட்டு எடுத்து கல்வத்தில் அரைத்து வைத்துக் கொள்ளவும். இதை நெய்யில் தேனில் கொடுக்க பக்கசூல மார்நோய் வாய்வு நீங்கும் கடுகு நல்லெண்ணை மீன் ஆகாது

விரைவாதத்திற்கு நெய்

பசும் நெய்	விராகனிடை	5

செம்மண் நாக்குப்பூச்சி கொண்டுவந்து தயிரில் போட்டால் மண்ணைக்கக்கிவிடும் அதை எடுத்து நெய்யில் போட்டு காய்ச்சி வைத்துக் கொள்ளவும், நாள் ஒன்றுக்கு ½-விராகனிடை நெய்யாக 7-நாள் சாப்பிடவும் விரைவாதம் தீரும் இச்சாபத்தியம்.

சொரி சிரங்கிற்கு மேல் பூசும் மருந்து

தகரயிலை விராகனிடை 3

தகரயிலையை வெய்யலில் காயவைத்து இடித்து வஸ்திர காயம்செய்து அம்மியில் வைத்து எலுமிச்சம்பழம் சார்விட்டு அரைத்து மொத்தமாய் உருண்டை செய்து நடுவில் பள்ளம் செய்து ஜலம் விட்டு மருநாள் சுன்னிடையன் தயிர் விட்டுக் கலக்கி 3-பாகம் செய்து 3-நாளைக்கு காலையில் தடவிக் கொண்டு பகல் 1-மணிக்கு சீயக்காய் தேய்த்து குளிக்கவும். நமைச்சல் சொரி சிரங்கு இவைகள் ஒழியும். மோர் சாதம் சாப்பிடவும்.

மேக சூட்டுக்கு பஞ்சாமூர்த தைலம்

கருஞ் செம்பைப்பூ யிலையை கொண்டுவந்து பசும்பால் ¼-படி விட்டு இடித்து ரசம் பிழிந்து நல்லெண்ணை ½-வீசை கொண்டுவந்து ஒருசட்டியில்விட்டு அதில் மேற்படி ரசத்தை யும் விட்டு பிறகு,

கஸ்தூரி மஞ்சள்	சோம்பு
ஏலம்	சம்பங்கிப்பூ
கிச்சிலிக்கிழங்கு	கிளியூரம்பட்டை
பச்சிலை அரிசி	பூஞ்சாந்து
திப்பிலி	சந்தனத்தூள்
மிளகு	சாம்பிராணி
சௌவுரிக்கிழங்கு	மட்டிப்பால்
சதகுப்பை	

மேல்கண்ட சரக்குகள் வகைக்கு ¼-விராகனிடையாக யெடுத்து பசும்பால் விட்டரைத்து மேற்கூறிய எண்ணையில் சேர்த்து மெழுகுபதமாய் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும் ஸ்நானம் செய்யும்போது இத்தைலத்தை

தேய்த்து ஸ்நானம் செய்யவும் மேகச்சூடு மயக்கம் வொண்டி தலைவலி நோய் இதுகள் தீரும்.

தீராத மேக ரணத்திற்கு மருந்து

கடை ரசம்	பலம்	¼
நெல்லிக்கா கெந்தகம்	விராகனிடை	¼
முதார்சிங்கு	விராகனிடை	¼
பால்துத்தம்	விராகனிடை	¼
மயில்துத்தம்	விராகனிடை	¼
காட்டு சீரகம்	விராகனிடை	½
கார்போக அரிசி	விராகனிடை	½

இதுகளை உரலில் போட்டு இடித்து தூள்செய்து கல் வத்தில் போட்டு ரசம் கெந்தகம் சேர்த்து அரைத்து பிறகு முதார்சிங்கு துத்தம் போட்டு அரைக்கவும் அரைத்தப் பிறகு அதை புட்டியில் பதனம் பண்ணவும். நாள்பட்ட மேக ரணங்களும், சிரங்குகளும் ஒழியும் இதை நெய்யில் குழைத் துப் போடவும் பிறகு சோப்பினல் தேய்த்துக் குளிக்கவும்.

காட்டுச் சீரகம், கார்போக அரிசி இரண்டையும்தான் நன்றாக இடிக்கவேண்டும்.

கெட்டிமுத்து பற்பம்

ஒரு விராகனிடை கெட்டிமுத்து வாங்கி சீமை கர சனுங்கண்ணி சார்பிழிந்து சிறிய குடுவையில் போட்டு சீலை கவசம் செய்து 5-கை வரட்டியில் புடம் போட்டு யெடுக்க வும், நெய்யில் கொடுக்க திரேக காந்தி வீரிய விர்த்தியுண்டா கும். இச்சாபத்தியம்.

வான்மெழுகு செய்யும் முறை

பாலரசம்	விராகனிடை	½
ரசசெந்தூரம்	விராகனிடை	½

நெல்லிக்காய் கெந்தகம்	விராகனிடை	¼
செவ்வீரம்	,,	¼
கௌரிபாஷாணம்	,,	¼
சங்கு பாஷாணம்	,,	¼
மூதார்சிங்கு	,,	¼
ரசகற்பூரம்	,,	¼
தங்கம்	,,	¼
அபினி	,,	¼
பளிங்கு சாம்பிராணி	,,	¼
பச்சைக் கற்பூரம்	,,	¼
ஊசி கெந்தகம்	,,	¼

பாஷாண வகைகளை சுத்திசெய்து மயில் முட்டையின் வெள்ளைக் கருவில் 4-ஜாமம் அரைத்து புட்டியில் பதனம் பண்ணிக்கொள்ளவும். பிறகு உளுந்து பிரமாணம் பனவெல் லத்தில் கொடுக்கவும். கபவாதம், ஜன்னி, ஜ்வரம், காசம், மகோதரம், சோகை, மஞ்சள்காமாலை, இரத்திப்புண், குலை வலி, கண்டமாலை, நீர் ஒழுக்கு முதலிய மேகங்கள் தீரும். கடும்பத்தியம்.

சுகவிரோஷன் மெழுகு

பிஞ்சுக் கடுக்காய்	பலம்	1
நிலாவிரை	விராகனிடை	1
பன்னீர்பூ	,,	1
ரேவல் சின்னி	,,	½
திராட்சைப்பழம்	,,	2
சீனகல்கண்டு	,,	2
தேன்	,,	4

கடுக்காய் பிஞ்சியை சித்தாமணக்கெண்ணெய் விட்டு வருத்து மற்ற தினுசுகளை வெரும் வரலாக வருத்து உரலில் போட்டு இடித்துக்கொண்டு வஸ்திரகாயம் செய்துக்கொண்டு

திராட்சை, கல்கண்டு, ரேவல்சின்னி இவைகளை தேன் விட்டு கல்வத்தில் 2-ஜாமம் அரைத்து பீங்கான் டப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ளவும் பெரியவர் முதல் குழந்தைகள் வரை கொடுக்கலாம் பெரியவர்களுக்கு புளியாங் கொட்டை யளவும் சிறியவர்களுக்கு அதில் பாதி கொடுக்கவும் இரவில் தூங்கும் சமயம் இதை சாப்பிடவும் மலபந்தம், மூலவாய்வு, மூலைச்சூடு, இவைகளைக் கண்டிக்கும். காலையில் வயிர் சுக மாய் போகும். பத்தியம் இல்லை.

மான் கொம்பு பற்பம்

மான்கொம்பு அரைவீசை வாங்கி துண்டுத் துண்டாய் நருக்கி உடைத்து இதையும் அகத்திக் கீரையையும் பெரிய பானையில் போட்டு ஒருஜாமம் வேகவைத்து யெடுத்து பிறகு நீர்முள்ளி யிலையை அரைத்து மேல்கவசஞ்செய்து சீலைமூடி 50-கை வரட்டியில் புடம்போடவும் பஸ்பமாகும் கல்வத்தி லரைத்து யெடுத்துக் கொள்ளவும் நெய்யில் கொடுக்க மார் நோய், இடுப்புநோய், நாவரட்சி, வெள்ளை, மேகம் இவைகள் தீரும் இச்சாப்பத்தியம்

மயிர் வளர தைலம்

நல்லெண்ணெய்	விராகனிடை	10
குண்டுமணி பருப்பு	,,	1½
மூணுமூலை பிரண்டைசார்	நாழி	

மேல்படி குண்டுமணி பருப்பை அம்மியில் வைத்து சாற்றை விட்டரைத்து நல்லெண்ணெயில் விட்டு காய்ச்சவும் காய்ச்சும்போது ஆவாரம் பூச்செடியில் இருக்கும் பச்சைப் புழு 15-போட்டு பதமாக காய்ச்சி இரக்கி வடிகட்டி வைத் துக்கொள்ளவும் மயிர் முளையாவிட்டால் தினந்தோறும் தேய் த்து வரவும் சோதனைசெய்துப் பார்க்க வேண்டுமானால் உள் ளங்கை அல்லது காலில் 20-நாள் தேய்க்கவும் மயிர் வளரும்

பித்த யெரிச்சலுக்கு கியாழம்

சீரகம் சக்காளத்தி நீக்கியது	விராகனிடை	1
கையாந்தகரைசார்	ஆழாக்கு	½
புளியாரைச்சார்	,,	½
முசுமுசுக்கைசார்	,,	½
எலுமிச்சம் பழச்சார்	,,	½

இந்த நான்கு சாற்றையும் ஒன்றுய்க் கலந்து சீரகத்தை சக்காளத்தி நீக்கி சாற்றில் போட்டு ஒரு நாள் முழுதும் ஊரவைத்து நிழலில் உலர்த்தி 3-பாகமாக்கி ஒரு பாகத்தை சட்டியில் போட்டு பொரித்து மேல்படி சாற்றில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி காலை மாலை 10-நாள் சாப்பிடவும். தலை சுற்றல், மயக்கம், பித்தம், மார் எரிச்சல் நீங்கும்.

பவழ பற்பம்

பவழம் 5-பலம் வாங்கி எலுமிச்சம் பழரசத்தில் ஒரு நாள் வூரி கழுவியெடுத்து வாய் அகலமான குடுவையில் போட்டு முசல் ரத்தம் விட்டு சீலை கவசம் செய்து 50-கை வரட்டியில் புடம் வைத்தால் பஸ்பமாகும் கல்வத்திலரைத்து வைத்துக் கொள்ளவும் இதை தேனில் அல்லது நெய்யிற் கொடுக்கவும் இருமல் நீங்கும் இச்சாப்பத்தியம்.

நவமூலத்திற்கு லேகியம்

காட்டுக்கருணைக்கிழங்கு	காராகருணைக்கிழங்கு
காக்காகருணைக்கிழங்கு	நாட்டுப்பிரண்டை

மாவு சுக்கு

இந்த ஐந்து தினுசுகளையும் சமயெடையாய் நிறுத்தெடுத்து வெள்ளாட்டு தயிரில் ஒருநாள் ஊரவைத்து மேற்படி தயிரில் வேகவைத்து வெய்யலில் உலர்த்தி வஸ்திரகாயம் செய்து

மருந்தை நிறுத்து அதற்கு சரியிடை நல்லவெல்லம்பாவு செய்து சூரணத்தை போட்டு லேகியபதம் வரும்போது 2½-பலம் நெய்விட்டு 2-பலம் தேன்விட்டு களரி எடுத்து பதனம் பண்ணிக் கொள்ளவும் நவமூலத்திற்கு கொடுக்கவும் கோழிக் கரி, மீன், கருவாடு உதவாது. இச்சாப்பத்தியம்.

சிக்கிஞ்சி சர்பத்து

எலுமிச்சம் பழம்சார்	ஆழாக்கு	1
இஞ்சிச் சார்	,,	1
கொத்தமல்லிச் சார்	,,	1
புதினாச் சார்	,,	1
நெல்லிக்காய்ச் சார்	,,	1
தேன்	பலம்	10
கற்கண்டு	,,	10
வினிகர்	புட்டி	½
பன்னீர்	,,	½

இவைகளை ஒன்றாய் சேர்த்துக்காய்ச்சி பதமாக இரக்கி வடி.கட்டி புட்டியில் பதனம் பண்ணிக்கொள்ளவும் பிறகு பச்சைக் கற்பூரம் விராகனிடை-1, சேர்த்து கலக்கி கொள்ளவும் 1-டீஸ்பூனுக்கு 3-டீஸ்பூன் ஜலம் சேர்க்கவும். பித்தம், அரோசிகம், மயக்கம், அஜீரணம், கைகால் ஓய்ச்சல் இவைகள் தீரும். காலை மாலை ஒரு மண்டலம் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

மஞ்சள் காமாலைக்கு பச்சிலை

கீழாநெல்லி யிலையை அரைத்து எலுமிச்சங்காய் அளவு எடுத்து அதை வெள்ளாட்டுப்பாலில் கலக்கிக் கொடுக்கவும் 5-நாள் சாப்பிட்டு வரவும் காமாலை தீரும். கடும்பத்தியம். வெண்ணீர் சாதம் சாப்பிடவும்.

சங்கு பற்பம்

5-பலம் சங்கு வாங்கி கல்வத்தில் வைத்து பிரண்டைச் சார்விட்டு அரைத்து 10-பில்லையாகச் செய்து உலரவைத்து 25-வரட்டியில் புடம்வைக்கவும் இப்படி 7-தடவை அரைத்து புடம் வைத்தப்பிறகு கல்வத்திலரைத்து யெடுத்துக்கொள்ளவும் இதை எலுமிச்சம்பழரசத்தில் சாப்பிடவும் வாத குன்மம் நீர் சுறுக்கும் விலகும் இச்சாப்பத்தியம்.

அறுவகை சூரணம்

சூரத்து நிலாவிரை	பலம்	3
சுக்கு	,,	1
திப்பிலி	,,	1
மிளகு	,,	1
மராட்டிமொக்கு	,,	1
இந்துப்பு	,,	½

இந்த ஆறுசரக்கையும் உரலில் இடித்து வஸ்திரகாயம் செய்து இதனிடைக்கு சர்க்கரையை சேர்த்து இரவில்போஜனமான பிறகு 3-விரல் அடங்கிய சூரணத்தை சாப்பிடவும் மலக்கட்டு, மலக்காந்தல், தலை மயக்கம், கால்கை குடைச்சல் இவையாவும் தீரும். மாலையில் ஒருவேளையாக 10-நாள் சாப்பிடவும் வயிற்றுவலி தீரும். இச்சாப்பத்தியம்.

கோரோசனை மாத்திரை

சுத்தமான கோரோசனை விராகனிடை		1
அதிமதுரம்	,,	½
கோஷ்டம்	,,	½
இந்துப்பு	,,	½
இலுப்பைக்கொட்டை	,,	½
சீரகம்	,,	½

இவைகளை கல்வத்தில்போட்டு சோற்றுக்கற்றுழை சாற்றில் ஒருஜாமமும் முலைப்பாலில் ஒருஜாமமும் நன்றாய் அரைத்து மெழுகு பதமாக கல்வத்திலிட்டு வழித்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி பதனம் பண்ணிக் கொள்ளவும். குழந்தைகளுக்கு உண்டாகும் சளி, இசுவு, ஜன்னி, ஜுரம், இருமல், இவைகளுக்கு இதை ஸ்நானம் பண்ணின உடன் உரைமருந்தாக கொடுக்கவும். இச்சாபத்தியம்.

படிகாரத் திராவகம்

படிகாரம்	பலம் 5
வெடியுப்பு	,, 1

இதுகள் இரண்டையும் பொடியாக்கிக் கொண்டு ஓர் குண்டு சட்டியில் அடியில் செங்கல் வைத்து அதைச் சுற்றிலும் மேடி பொடியைப்போட்டு செங்கல்லின் மேல் கோப்பை ஒன்றைவைத்து அந்த சட்டி வாய்க்குச் சரியான ஓர் கலயம் சம்பாதித்து அதை வாய்புரம் மேலே இருக்கும்படியாக கலயத்தை அந்த சட்டியின் பேரில் திருப்பி வைத்து அந்தக் கலயம் நிறைய தண்ணீர் வார்த்து அந்தச் சட்டி வாய்க்கும் கலயத்தின் அடிப்புரமாக சேர்த்து 3-சீலமண் செய்து அடுப்பில் யேற்றி சிறு தீயாக எரிக்கும்போது மேடி கலயத்தில் ஜலமானது கை பொருக்கும்படியான அளவு சூடு வந்தவுடன் அடுப்பை விட்டு இரக்கும்போது அசையாமலிரக்கித் தூர வைத்து பார்க்கவும் கோப்பையில் திராவகம் இரங்கியிருக்கும் இதை சீசாவில் பதனம் பண்ணிக் கொண்டு உபயோகித்துக் கொள்ளவும்.

கெந்தி மெழுகு

நெல்லிக்காய் கெந்தகம்	பலம் 4

ஓர் புதுசட்டியில் வைத்து 1-புட்டி முந்திரிப்பழம் சாற்றில் சுருக்குக் கொடுத்துக் கொண்டே சிறு தீயாக யெரித்துக்

கொண்டு வரவும் இப்படியாக புட்டியிலிருக்கும் சார் முழுவ தையும் சுருக்குக் கொடுத்துக் கொண்டே வந்தால் கெந்தி மெழுகாகும் இதை சுண்டக்காய் அளவு எடுத்து உள்ளங் கையில் வைத்து பசு நெய் 2-விராகனிடையில் சேர்த்து மருந் தைசாப்பிடவும் காலை மாலை இருவேளையும் 20-நாள் அல்லது 15-நாள் சாப்பிடவும் மேகரணம், மேகப்புரை, யோனிப் புற்று, கண்டமாலை, சொரி, சிரங்கு, இன்னும் அனேகமான மேகத்தைச் சேர்ந்த வியாதிகளை யெல்லாம் கண்டிக்கும் இச் சாப்பத்தியம் ஷை மருந்துக்கு பால் தயிர், நெய், அதிகமாக சேர்த்துக் கொள்ளவும்.

ஆமையோடு பற்பம்

ஆமையோட்டை நருக்கி பச்சைக் கோரைக் கிழங்கை யரைத்து அதின்மேல்பூசி கவசம்செய்து உலர்த்தி 50-வரட்டி யில் புடம் வைக்க பஸ்பமாகும் நெய்யில் கொடுக்க பசிதீப னம் உண்டாக்கும் அஜீரணம் நீங்கும். இச்சாப்பத்தியம்.

கல்நார் பற்பம்

சுத்திசெய்த 2-பலம் கல்நார் வாங்கி பசுங் கோமியத்தில் 15-நாள் ஊரவைத்து யெடுத்து கழுவி யுலர்த்தி ஆவாரை யிலையை அரைத்து கவசம் செய்து கெஜபுடத்தில் வைக்க பற்பமாகும். இந்த பஸ்பம் முன்சொன்ன அனுபானங்களில் கொடுக்க சகல மேகங்களும் தீரும்.

பூரணச் சந்ரோதயம்

ரசம்	பலம்	2
வெள்ளீயம்	,,	2
நவாச்சாரம்	,,	2
நெல்லிக்காய் கெந்தகம்	,,	2
வெள்ளைப் பாஷாணம்	,,	2

வெள்ளீயத்தை கரண்டியில் உருக்கி மற்றொரு பாத்திரத்தில் ரசத்தைவிட்டு உருக்கின வெள்ளீயத்தை ரசத்தில் விட்டு ஆறினப்பின் கல்வத்தில் போட்டு மற்ற சரக்கையும் சேர்த்து அரைத்துகொண்டு காய்ச்சிகுப்பியிலடைத்து அதற்குச் செம்முள்ளி யிலைசாற்றை கால்படிவிட்டு குப்பிவாய்க்கு செங்கல் துண்டை தேய்த்து கார்க்குப்போட்டு 7-சீலை மண் செய்து காய்ந்த பிறகு ஒரு குண்டு சட்டியில் நான்குவிரல் கணம் மணலைக் கொட்டி அடுப்பின் மேலேற்றி மணலின் நடுவில் குப்பியைவைத்து குப்பிதெரியாமல் மணல்சொரிந்து மேல் சட்டிமூடி அதற்கு 7-சீலைமண் செய்து காய்ந்த பிறகு ஒரே ஜாதி விரகால் 12-ஜாமம் 36-மணி நேரம் தீயெரிக்கவும் தியின் ஸ்தானம் தீபாக்கினி 3-ஜாமம் கமலாக்கினி 3-ஜாமம் காடாக்கினி 3ஜாமம் தனலாக்கினி 3-ஜாமம் எரிக்கவேண்டியது இவ்வாறு எரித்து ஆறினபிறகு மணலை எடுத்துவிட்டுச் சீசாவின் கவசத்தை கத்தியால் கீறி சீசாவை உடைத்துப் பார்க்க அடியில் தங்கச் சொரூபமாகவும் மத்தியில் முருக்கம் பூப்போலவும் இருக்கும் இதை தனியாக எடுத்து ஓர் பீங்கானில் வைத்து மத்தியிலிருக்கும் செந்தூரத்தை கல்வத்திலிட்டு சற்று பொடிசெய்து அரைத்து சீசாவில் பதனம் பண்ணவும். மத்தியிலிருந்த செந்தூரத்தை தேனீரில் கலந்து காலை மாலை 3-நாள் சாப்பிடவும் ஜ்வரம் முதலியவைகள் நீங்கும். திரிகடுகு சூரணத்திலுண்ண வாய்வு, வாதம் முதலியவைகள் தீரும் பரங்கிச்சக்கை பலம்-2, பாலில் அவித்து காயவைத்து சூரணித்து சுக்கு பலம்-1, சித்திரமூலம் வேர்பட்டை பலம்-1 இதையும் சூரணம் செய்து இந்த யிடைக்கு பனவெல்லம் சேர்த்து அரைத்து லேகியத்தை பாக்கு அளவு எடுத்து செந்தூரம் குண்டுமணியளவு சேர்த்து சாப்பிடவும் மூலம், பவுத்திரம், சூலை, கன்னப்புற்று, கண்டமாலை, அரையாப்பு, துடைவாழை, யோனிப்புற்று இவைகள் 10-நாளில் தீரும்.

கெந்தி தைலத்தில் உண்டுவர விரைவாதம், மேகம் தீரும் அடியிலிருக்கும் தங்கமயச் செந்தூரத்தை பசு வெண்ணெயில் ஓர் குண்டுமணியிடையாய் 10-நாள் காலை மாலை சாப்பிட்டு வர தாது விர்த்தியாகும் பவுத்திரம் கெட்டியாகும் தளர்ந்த நரம்பு உருதியாகும் உடலில் பலம் தரும் இச்சாப்பத்தியம்.

நாக பஸ்பம்

சிறுநாகம்	பலம் 1
ரசம்	,, 1

இதை பூரணச்சந்ரோதயத்தில் ரசம் சேர்த்ததுபோல் நாகத்தோடு ரஸம் சேர்த்து வட்டாகச்சுற்றி ஒரு சிறிய குண்டு சட்டியில் ½-பலம் கற்பூரத்தை பொடிசெய்து ½-பலம் தூள் அடியில் வைத்து மேற்சொல்லிய நாகவட்டை அதன்மேல் வைத்து ½-பலம் கற்பூரத்தூளை அதன்மேல் போட்டு சட்டியின் வாய்க்கு மற்றொரு சட்டியை கவிழ்த்து 7-சீலமண் செய்து காயவைத்து அடுப்பிலேற்றி 2-ஜாமம் சிறுதீயாக யெரித்து ஆரவைத்து பிரித்துப் பார்த்தால் பஸ்பமாக யிருக்கும் இதை புட்டியில் பதனம் செய்யவும் இதில் அரிசியிடையெடுத்து பனவெல்லத்தில் கலந்து காலை மாலை 3-5-7-9-11 நாளாக, உட்கொள்ளவும் மூலம், வெள்ளை, உஷ்ணம் தீரும் இச்சாப்பத்தியம்.

துருசு களங்கு

நெல்லிக்காய் கெந்தகம்	பலம் 3/4
பித்தளைபொடி	,, 1
வீரம்	.. ¼
துருசு	,, 1

துருசு ஒரு கட்டியாக எடுத்துக் கொண்டு சரக்கு மூன்றையும் கல்வத்தில்போட்டு உமிழ்நீரால் 4-ஜாமம் அரைக்க அதை துருசுகட்டிக்கு கவசம் கொடுத்து நன்றாகக் காய்ந்த பிறகு அதன்மேல் சுண்ணாம்பு கவசம் கொடுத்து நன்றாகக் காய்ந்தப்

பிறகு அதன்மேல் 7-சீலமண் செய்து காயவைத்து உலர்ந்த பின் இரவில் உலர்த்தவேண்டும் 15-பலம்எடையுள்ள வரட்டியில் புடம்போடவும் ஆறினப்பின் கவசத்தைப் பிரித்துப் பார்த்தால் பஸ்பமாகயிருக்கும் அதை ஒரு மூசையில் அடைத்து கொஞ்சம் வங்காரம் பொரித்துப்போட்டு உலை களத்தில் வைத்து உருக்க அது உருகி கலங்களாகும் அதை உடைத்துப் பார்த்தால் சிவப்பு நிறமாகபிருக்கும் இதை தொழில்களுக்கு வைத்துக்கொள்ளலாம் இதை செந்தூரம் செய்தால் நண்மையாய் இருக்கும் இதை அயச்செந்தூரத்தில் கொடுத்தால் களங்களாகும் அதை செந்தூரம் செய்தால் காய கற்பமாகும் மேற் செ ா ல் லி ய அயச்செம்பு களங்கு செந் தூரிக்க வேண்டுமானால் நெல்லிக்காய் கெந்தகம் இடைக் கிடை சேர்த்து பொற்றலைகையான் சாற்றில்விட்டு 4-ஜாமம் அரைத்து உலர்த்தி குப்பியிலடைத்து அதற்கு 7-சீலமண் செய்து காய்ந்த பிறகு பக்குவம் செய்து 12-ஜாமம் தீயெரிக்க செந்தூரமாகும் இதில் குண்டு மணியிடை யெடுத்து காலை மாலை 10-நாள் அல்லது ½-மண்டலம் உட்கொள்ள சகல வியாதியும் தீரும் இச்சாப்பத்தியம்.

தங்க பற்பம்

தங்கரேக்கு விராகனிடை-½, சுத்தி செய்த சித்தண்ட ஓடு விராகனிடை-1, இவ்விரண்டையும் அரைத்து உத்தா மணிப்பால் 5-துளிவிட்டு பிசரி மூசையிலிட்டு ஓடு மூடி சீலை செய்து ஒரு குண்டு சட்டியில் உமிகொட்டி அதன் மத்தியில் வைத்து தீயிட பஸ்பமாகும் காசரோகத்திற்கும் அதிக கொழுமையினுலடைந்த தாது சோர்வையும் தீரும்.

ரச பற்பம்

ரசம் 2½-விராகனிடை யெடுத்து சிவகரந்தைசார் விட்ட ரைத்து பில்லை செய்து ரவியிலுலர்த்தி ஓட்டில்வைத்து மேல் ஓடுமூடி 3-சீலமண் செய்து கோழிப்புடம்போட தீரும்

இதை பணவெல்லத்தில் கொடுக்க இரந்தி மேகம் வெள்ளை தீரும் இச்சாப்பத்திய.

வெள்ளி பற்பம்

முக்கா வேளையைக் கொண்டு வந்து அரைத்து எலுமிச்சங்காய் அளவு உருட்டி அதனுள் வெள்ளித்தகட்டை அச்சமாகத்தட்டி சொருகி சீலமண் கவசம் செய்து பத்து வரட்டியில் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளவும் தாது விர்த்திக்கி வெண்ணெயில் அரிசிப்பிரமாணம் மேகம் எலும்புருக்கி முதலானதற்கு கொடுக்கலாம்.

அயக்களங்கு பொன் வருணம்

தேங்காயின் மேல்பண்ணுடையை காயவைத்து ஒரு பெரிய இரும்பு சட்டியின் மேல் அடுக்கி சுட்டு சாம்பலாக்கி அந்த சாம்பலை ஒரு பாளையில் கரைத்து தெளியயிருத்து காய்ச்சி உப்பாக யெடுத்து பலம்-1, ஒரு கோப்பையிலிட்டு ½ படி சுத்தஜலம் விட்டு கரைத்து 1-மணிநேரம் நிழலில் வைத்து குளிர்ந்தவுடன் சன்னகத்தை அரைத்து பழுக்க காயவைத்து கோப்பையிலிருக்கும் ஜலத்தில் துவைக்கவும் பின்பு அந்த அரக்கை தூளாக நெருக்கி இரும்பு உரலில் போட்டு சன்னமாக யிடித்து வஸ்திரகாயம் செய்து துலா -1; வேரே வைத்துக்கொண்டு பின்பு 1-பலம் வெள்ளியை மூசையில் உருக்கி கல்விட்டாட்டும்போது 4-பலம் குழா கெந்தகத்தை தூள் செய்துக் கொண்டு அதில் போட்டு கிண்டிக்கொண்டு வரவும் அப்படி மருந்தெல்லாம் ஆனபிறகு மூசையை யெடுத்து ஆர வைத்து உடைத்துப் பார்க்க வெட்டையாய் இருக்கும் அதை இரும்பு உரலில் போட்டு இடித்துத் தூளாக்கி இதையும் வேரே வைத்துக்கொண்டு பின்பு கரிவங்கம் 1-துலா நிறுத்தி அயச் சட்டியில் விட்டு உருக்கி ½-துலாம் கட்டி அரிதாரத்தூள் அதில் போட்டு கிண்டிவர வெட்டையாகும்

அதில் இரண்டணை இடையையெடுத்து மேற்செய்த இரண்டு வெட்டையும் சேர்த்து கோப்பையில் போட்டு கலந்து வைத்துக் கொண்டு இதில் சேரும் சரக்கை யறிந்துக் கொள்ளவும்.

கெந்தி	தம்பிடியிடை	1
சிகப்பு பாஷாணம்	,,	3
நவாச்சாரம்	,,	3½
பொன்னரிதாரம்	,,	3½
மயில்தூத்தம்	,,	1½
லிங்கம்	,,	2½
வங்காரம்	,,	1½

இவையெல்லாம் ஒன்றுக தூலாக்கி 7-பாகமாக பங்கிட்டு வைத்துக் கொண்டு மேல்கூறிய 3-விதக்களங்கிள் 1-பாகம் மருந்து சேர்த்து நன்றுகக் கலந்து மூசையில்போட்டு மேலே மூசையைமூடி 7-சீலைமண் செய்து காயவைத்து மூசையை அளிய ஊதி எடுத்துப் பார்க்க சற்று வரணமாகயிருக்கும் அதை முன்போலே உரலில் போட்டு யிடித்து சன்னமாக பிறகு மற்றொரு பாகமருந்தையும் சேர்த்து மூசையில்போட்டு மூசையை கவிழ்த்து 7-சீலைமண் செய்து ஊதவும் அப்படி 7-தரம் ஊதியெடுத்துப் பார்த்தால் பத்தரை மாற்றுத் தங்கம் போல் தோன்றும் பொன் வருணமாகயிருக்கும் அதை மறு படியும் உடைத்து சன்னமாக செய்து மேற்கூறிய தேங்காய் மட்டை உப்பு பலம்-2 எடுத்து ஒரு மூசையில் 1-பலம் உப்பைக் கொட்டி அதன்மேல் அயம் களங்கம் வைத்து மீதி ஒரு பலம் உப்பைப் போட்டு மூசையைக் கவிழ்த்து 7-சீலைமண் செய்து காய்ந்த பிறகு மேல் மூசையின் உச்சியில் விரல்கனம் துவாரம் செய்து உலைகளத்தில் வைத்து ஊதினுல் மேல்மூசை வழியாக புகைவரும் புகை அடங்கின பின்பு கீழேயிரக்கி வைத்து ஆரினப்பின் மூசையை உடைத்துப் பார்க்க பத்

தரை மாற்றுத் தங்கமாயிருக்கும் இதை தொழில்களுக்கு உபயோகிக்கலாம் சென்தூரமாய் செய்தால் மிகவும் நன்மையாய் இருக்கும்.

இரச வெண்ணை

இரசம் பலம் 10

இதை ஒரு கலயத்திலிட்டு இரசித மணியைப் போட்டு இதன் வாய்க்கு ஓடுமூடி 7-சீலைமண்செய்து உலர்த்தி அதிகமான தீயிட்டு யெரிக்காதப்படி நெருப்பில் வைத்து சற்று வீசிவிட சுருசுரு என்ற சப்தத்துடன் ரசம் மடியும் இதில் சப்தம் நன்றாக அடங்கினப்பிறகு கீழே இறக்கி ரசமெல்லாம் ஒரு கோப்பையில் போட்டு வஸ்திரத்தில் பிழிந் தெடுக்கவும் மடிந்த ரசமெல்லாம் வஸ்திரத்தில் நிற்கும் மடியாத ரசமெல்லாம் கோப்பையில் வடியும் வடிந்த ரசத்தை ஒரு பீங்கான் பரணையில் ஊற்றி வைத்துக்கொள்ளவும்.

தாளக பற்பம்

பச்சைத்தாளகம் ஒருபலம் வாங்கி கல் சுண்ணும்பை ஜலத்தில்போட்டு தெளிந்தப்பிறகு ஜலத்தை யிருத்து அந்த ஜலத்திலல் தாளகத்தை 7-நாளரைத்து பில்லைசெய்து உலர வைத்து ஒரு கலசத்தில் சுண்ணும்பு நீரு நிரைய அழுத்தமாய் வைத்து அதின்மேல் இந்தப் பித்தளையைவைத்து வேறொரு கலசத்தில் சுண்ணும்பு நீரை அழுத்தமாய் வைத்து மூடி 7-சீலை கவசம் செய்து சுமார் 10-வரட்டியில் புடம் போட்டு யெடுக்க வெள்ளை பஸ்பமாகும். தேனில் இதை கொடுக்கவும். புளி நல்லெண்ணை கடுகு ஆகாது.

தங்க பற்பம்

7-அல்லது 8-மாத்துள்ள பொன்வாங்கி மிக அச்ச பில்லைகளாக தகடு தட்டி சிகப்பு முள்ளுக்கீரை வேரின் பட்டையை அரைத்து தகட்டின்மேல் முத்தையாக மூடி சீலை

கவசம்செய்து 10- வரட்டியில் புடம் வைத்து ஆரினப்பின் யெடுத்து இங்கிலீஷ் வெள்ளைக் கல்வத்தில் அரைத் தெடுத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். இதை நெய்யில் சாப்பிட்டால் வீக்கம், வாய்வு போகும் மேற்படி மொத்தை ஒரு விராகனிடை தகட்டுக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு இருக்க வேண்டும்,

யூனி செந்தூரம்

பூங்காவி	பலம்	2
படிகாரம்	,,	2

இவை யிரண்டையும் கல்வத்தில் அறைத்து வெண்ணை அல்லது நெய்யில் சாப்பிடவும். பெரும்பாடு, வெள்ளை, பசிமை ரத்தகாசம், மேகவெட்டை, உள் காய்ச்சல், உஷ்ண வாய்வு, நாக்குவரட்சி இதுகள் தீரும். இச்சாப்பத்தியம் கடுகு நல்லெண்ணெய் நீக்கவும்.

பாரிச வாய்வு கால்கை பிடிப்பு தலைநோய் ஜன்னி இதுகளுக்கு மேல்பூசும் ஓரல்லியம்பாம்

மெந்தால் சிரிஸ்டல்	அவுன்ஸ்	1
கெஜப்பட்டாயில்	,,	1
பிக்லிப்டில் ஆயில்	,,	1
டர்பெண்ட்டாயல்	,,	1
கலிக்கர் அமோனியா பார்ப்டயர்	,,	1
சித்தாமணக்கெண்ணை	,,	1
இஸ்பிரீடல் ஆப் வொயின்	,,	1
கற்பூரம்	பலம்	½
மஞ்சள் மெழுகு	,,	½

ஆட்டுக்கொழுப்பு	அணு	2
சீமை நவாச்சாரம்	தம்படி	3

இதுகள் செய்யும் விதம்:—இனமல் கிண்ணம் 2-கொண்டுவந்து ஒரு கிண்ணத்தில் ஆட்டுக் கொழுப்பை வைத்து தீயில் வைத்தால் உருகும் நன்றாக உருகின பின்பு மற்றொரு கிண்ணத்தில் மெல்லிய துணியால் வாய்கட்டி வடிகட்டிக்கொண்டு பிறகு மஞ்சள் மெழுகை காய்ச்சி வடிகட்டின கொழுப்பில் வடிகட்டிக் கொள்ளவும். பிறகு நவாச்சாரம் கற்பூரம் இரண்டையும் கல்வத்திலரைத்து வடிகட்டின கொழுப்பில் போட்டவும் மெந்தால் தவிர மற்ற தினுசுக்களை அதில்ஊற்றி அடுப்பில்வைத்து டீஸ்பூனில் களறிக்கொண்டு வரவும் கொதிக்கும்போது மெந்தாலை சேர்த்து மெந்தால் புட்டியில் 3-அவுன்ஸ் தண்ணீர் விட்டுக் கலக்கி மருந்தில் விட்டு கிண்டிவரவும் தீயினுல் மேலே பொங்கினுல் கரண்டியில் கிண்டி வரவும். சுண்டிவரும்போது ஒரு துளி கீழே விட்டால் கட்டிப்போகும் அப்போது புட்டியில் பதனம் பண்ணிக்கொண்டு ஷை நோய்களுக்கு உபயோகிக்கவும். மிகவும் நன்மைத்தரும்.

வெண்குஷ்டத்திற்கு மருந்து

வெள்ளைக் கலியாண முருக்கன் பூ விரையைக் காயவைத்தது	விராகனிடை	10
நன்னரிவேர்	,,	2½
சிறுதேக்கு	,,	5
பரங்கிச்சக்கை	,,	5
வெள்ளை கலியாண முருக்கன் பூ	,,	5
சுக்கு	,,	2½

இந்த ஆறு தினுசும் உரலில் போட்டு இடித்து வஸ்திர காயம்செய்து புட்டியில்போட்டு பத்திரம் பண்ணவும். இந்த

சூரணம் காலைமாலை 1-மண்டலம் சாப்பிடவும் 4-பாகமாகச் சாப்பிடவும். 12-நாள் சாப்பிட்டு 5-நாள் மறுபத்தியம் இருந்து தைலத்தில் ஸ்நானம்செய்து மறுபடியும்சாப்பிடவும் இப்படி 4-முறை சாப்பிடவும் சர்க்கரையுடன் கலந்து சாப் பிடவும் புளி தள்ளவும் ஸ்ரீபோகம் கூடாது. இச்சாப் பத்தியம்.

வாத மாருத மெழுகு

பரங்கிச்சக்கை	பலம்	4
கடுக்காய்தோல்	,,	4
திரிகடுகு	,,	2
சித்துழாப்பட்டை	,,	2
சித்திரமூலம்பட்டை	,,	2
கசகசா	,,	1
கார்போக அரிசி	,,	½
வழலரிசி	,,	½
வெப்பாலரிசி	,,	½
ஜாதிக்காய்	,,	¼
ஜாப்பத்திரி	,,	¼
ஏலம்	,,	¼
வெங்கம்	,,	¼
சித்தரத்தை	,,	¼
வால்மிளகு	,,	¼
அதிமதுரம்	,,	¼

இவைகளை சூரணம் செய்து வைத்துக்கொண்டு

கோரோஜனம்	பலம்	¼
குங்குமப்பூ	,,	¼
தாளகம்	,,	1
வீரம்	,,	1
லிங்கம்	,,	1

பூரம்	பலம்	½
ரசசெந்தூரம்	,,	½

இவைகளை அரைத்துமேற்கூறியசூர்ணத்துடன் கலந்து வைத்துக்கொண்டதின் பிறகு திரிபலாதி கியாழத்திலில் 4-ஜாமம் அரைத்து நிழலிலுலர்த்தி தேன்விட்டு 3-ஜாமம் அரைத்து வைத்துக்கொள்ளவும் இந்த மெழுகை மிளகுப் பிரமாணம் பனவெல்லத்தில் இருவேளையும் சாப்பிடவும் புளி நீக்க வேண்டியது நெய் வெள்ளாட்டு வத்தல் சேர்த்துக் கொள்ளவும் முடக்குவாதம், சூலை, மேகவாய்வு, பாண்டுவலி, குடல் வாய்வு, சூலை வாய்வு, மண்டை வாய்வு, சூதகவாய்வு, முசல் வாய்வு, மூர்ச்சை வாய்வு, பித்த வாய்வு, பாரிச வாய்வு, அர்ப்புத வாய்வு, திமிர் வாய்வு. இவையெல்லாம் தீரும்.

கஸ்தூரி மெழுகு

கஸ்தூரி	விராகனிடை	1
பச்சை கற்பூரம்	,,	2
கோரோசனை	,,	4
குங்குமப்பூ	,,	4
புனுகு	,,	½
ஜவ்வாது	,,	½
பூநீக்கிய லவுங்கம்	,,	4
வால்மிளகு	,,	4
ஏலக்கா அரிசி	,,	8
சிறுலவங்கப்பட்டை	,,	8

இதில் சூரணிப்பதை சூரணம்செய்து சகலமும் ஒன்றாய் கூட்டி கற்பூர வாசனை வெற்றிலை ரசத்தாலும் கற்பூர வள்ளி ரசத்தாலும் தூதுவேளைரசத்தாலும் மட்டிநீக்கிய இஞ்சி ரசத்தாலும் மிளகு கியாழத்தாலும் சித்திரமூலம் வேர் கியாழத்தா

லும் மஞ்சள் கரிச்சாலை ரசத்தாலும் தனித்தனியாக ஒவ் வொரு ஜாமம் அரைத்து நிழலில் உலர்த்தி சுயத் தேனினல் மெழுகு பதமாயரைத்து வைத்துக்கொள்ளவும் இந்த மெழு கில் பயறு பிரமாணம் தேனில் சாப்பிட சீதளம், ஜ்வரம், கப ரோகம், உப்பிச மாந்தம், முகவாத ஜன்னி, இருமல், மார டைப்பு, வாதம் இவ்வகை வியாதிகள் தீரும்.

சுகபேதி எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய் ½-படி, பசும்பால் 2-படி, அதி மதுரம் கடுக்கா இந்துப்பு கடுகுரோகணி வாளம் வகைக்குப் பலம்-¼, இந்த சரக்குகளையிடித்து கலக்கி காய்ச்சி வடித்துப் பெரியவர்களுக்கு ½-பலம் கொடுக்கவும் ஒரு நாழி சென்று வென்னீர் கொடுக்கவும் பேதி நிருத்த வேண்டுமானல் உப்பு கஞ்சி மோர் மாலையில் மிளகு சுக்கு கியாழம் இராத்திரிக்கும் மிளகு நீர் சாதம் சாப்பிடவும் துவரை துவயல் உபயோ கிக்கவும்.

கிராணி சகல கழிச்சலுக்கும் சூரணம்

ஆவாரம்பட்டை	பலம்	¼
அரசம்பட்டை	,,	¼
அத்திப்பட்டை	,,	¼
வேலம்பட்டை	,,	¼
அழிஞ்சிப்பட்டை	,,	¼
வெட்டிவேர்	,,	¼
எலுமிச்சம்வேர்	,,	¼
கடுக்காய்பிஞ்சு	,,	¼
தான்றிக்காய்தோல்	,,	¼
வில்வப்பத்திரியோடு	,,	¼
மாதளம்தோல்	,,	¼
ஏலம்	,,	¼
கிரும்பு	,,	¼

அதிவிடையம்	பலம்	½
சீரகம்	,,	½
தேத்தாங்கொட்டை	,,	½
கோரக் கிழங்கு	,,	½
சந்தனம்	,,	½
நெல்லிவத்தல்	,,	½
புளியாங்கொட்டை தோல்	,,	½
சுத்திசெய்த கெஞ்சா	,,	⅛

இதுகளை வஸ்திரகாயம்செய்து சீசாவில் பதனம் பண்ணவும் காலை மாலை 5-அல்லது 7-நாள் ஒருகடி பிரமாணம் சாப்பிடவும் எப்படிப்பட்ட கழிச்சலானாலும் பேதியும் கிருணிக் கழிச்சலும் ஜீரணக் குறைவும் தீரும். இச்சாப்பத்தியம்.

சுகபேதி சூரணம்

சுக்கு	விராகனிடை	1
மிளகு	,,	3
சுத்திசெய்த வாளம்	,,	4
கடுக்காய் தோல்	,,	8
வெங்காரம்	,,	1

வெங்காரத்தை கோழிமலத்தில் புரட்டி வெய்யலில் ஒரு நாள் காயவைத்து பின்பு பொரித்தெடுத்து மேலே சொன்ன சரக்கு 3-சூரணித்து பிறகு இரண்டுசரக்கையும்கூட சேர்த்து கல்வத்தில்போட்டு அரைத்து வைத்துக்கொள்ளவும் வாய்வு ரோகத்திற்கு சுக்கு கியாழத்திலும் எலுமிச்சம்பழ ரசத்திலும் வெள்ளை சர்க்கரைபோட்டு கொடுக்கவும். பத்தியம்: இச்சா பத்தியம்.

கெர்ப்ப ஸ்திரீகளுக்கு பழயது எண்ணெய்

விளக்கெண்ணெய் 1-வீசை அடுப்பிலேற்றி தாளிவேர் 1-பிடி கொண்டுவந்து யெண்ணெயில் போட்டு காய்ச்சவும்

அந்தவேர் மளக்கென்று உடைந்தால் எண்ணெயை இரக்கி வைத்துக்கொண்டு சாப்பிடும்விவரம் காலையில் ½-பலம்எண் ணெய் சாப்பிட்டு உடனே பழயதுசாப்பிடவும் கெணச்சூடு தீரும் கெர்ப்பத்திலுள்ள சிசுவுக்கும் யாதொரு வியாதியும் அணுகாது கெர்ப்ப ஸ்திரீயானவள் 5-வது மாதம் முதல் 9-வது மாதம் வரையில் அந்தந்த மாதம் முதலில் 3-நாள் சாப் பிடவும் இச்சாபத்தியம் ஆரோக்யமாயிருக்கும்.

இருமல் க்ஷயம் இதுகளுக்கு சூரணம்

மூங்கிலுப்பு	பலம்	3
திப்பிலி	,,	½
சுக்கு	,,	¼
மிளகு	,,	¼
தாளிச்சப்பத்திரி	,,	¼
ஏலரிசி	,,	¼
லவங்கப்பத்திரி	,,	¼
லவங்கப்பட்டை	,,	1
லவங்கம்	,,	1
கற்கண்டு	,,	3
தார்பில்பில்	,,	½
நாகேசரம்	,,	¼

இதுகளை யிடித்து வஸ்திரகாயம்செய்து பின்பு கற்கண் டும் மூங்கிலுப்பையும் பொடிசெய்து ஒன்றுய் சேர்த்து பத னம் பண்ணவும் காலை மாலை இரண்டு வேளையும் 20-நாள் கடி பிரமாணம் சாப்பிடவும் இருமல், சளி, ஈளை, க்ஷயரோகம் தீரும். புளி உதவாது கடும் பத்தியம்.

சுக்கிலம் கட்ட சூரணம்

முருங்கப்பிசினி விராகனிடை 6

அபினி	விராகனிடை	3
எள்ளுப்புண்ணைக்கு	,,	12

இந்த மூன்றையும் இடித்து சூரணம் செய்து பத்திரப் படுத்திக்கொண்டு போகம்செய்ய 2-நாழிக்கு முன்பு $\frac{1}{8}$-விராக னிடை வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிடவும் தாது கட்டி விடும்.

காது செவிடுக்குத் தைலம்

வில்வயிலைப் பழுப்பும் வெள்ளாட்டு கோமியம் எள்ளு எண்ணை மூன்று தினுசையும் காய்ச்சி காதில் விட்டு பஞ்சு வைக்கவும் நாள்பட்ட செவிடானாலும் நன்றாய் கேட்கும்.

மும்மூர்த்தி செந்தூரம்

லிங்கம்	பலம்	1
பூரம்	,,	1
மலைசிலை	,,	1

இந்த மூன்றையும் கல்வத்தில்போட்டு பழச்சார்விட்டு 4-ஜாமம் அரைத்து சின்னக்குடுவையில் போட்டு வாய்க்கு ஓடு வைத்து சந்து இல்லாமல் சீலமண் செய்து ஒரு குண்டு சட்டியில் 3-விராகனிடை மணல் கொட்டி குடுவையை அதன் நடுவில் வைத்து மேலே மணல்கொட்டி சட்டியை மூடி சீலை செய்து ஜடாக்கினியாய் 4-ஜாமம் எரித்து ஒரு நாள் ஆறினப்பின் யெடுத்து மருந்தைக் கல்வத்தில் விட்டு அரைத்து தூளான பிறகு புட்டியில் பதனம் பண்ணிக்கவும் வாய்வு 80-பதும் கால்கைப்பிடிப்பு, ஜ்வரம், பித்தசிலேத்ம ஜ்வரம் இதுகளுக்கு காலை மாலை அரிசியிடை தேனில் கொடுக்கவும் வியாதியை அனுசரித்து கியாழத்தில் 3-நாள் அல்லது 5-நாள் கொடுக்கவும் வியாதி தீரும் நல்லெண்ணெய் புளி லாகிரிவஸ்து புகை இதுகள் கூடாது கடும்பத்தியம்.

திமிர், தடிப்பு, குஷ்டரிணம், படை, சட்டை மேகம், குஷ்டம், சொரி, இவைகட்கு எண்ணெய்

பூவரசம்பட்டை ரசம், அத்திப்பட்டை ரசம் வெள்ளருகு ரசம், கோவை ரசம், பீச்சங்கன் ரசம், வகைக்கு ¼-படி-வேவித்த முத்துயெண்ணெய் 2-படி, அமுக்கனைக்கிழங்கு பலம்-2½, பரங்கிச்சக்கை பலம்-3, லவுங்கப்பட்டை, கார்போக அரிசி, கடுகுரோகணி, வாய்விளங்கம், திப்பிலி, வகைக்குப் பலம்-1, மிளகு பலம் ½, பூரம் பலம் ¼. இவைகளை தூள் செய்து ஷிசாறு வகைகளை எண்ணெயில் ஊற்றி அடுப்பேற்றி சிலங்கை கொதி பக்குவத்தில் தூள்செய்த மருந்தை அதில் போட்டு கலக்கி வடித்துக்கொண்டு வேளைக்கு ½ பலம் வீதம் 3-தடவை 7-நாள் விட்டு 7-நாள் சாப்பிடவும் பீர்க்கன்காய் முருங்கக்காய் துவரம்பருப்பு உப்பு அரைக்கீரை ஆகும். புளிநீக்க வேண்டியது மேல்கண்ட வியாதியெல்லாம் தீரும்.

குழந்தைகட்கு மாந்த எண்ணெய்

உத்தாமணி ரசம்	பலம் 7½
விளக்கெண்ணெய்	.. 7½

இவை இரண்டையும் கலந்து அடுப்பேற்றி காய்ச்சியிரக்கினவுடன் பூரம். ஏலரிசி. லவுங்கப்பட்டை. சுக்கு வகைக்கு விராகனிடை-2½. கடுகுரோகணி விராகனிடை-1½ இவைகளை தூள் செய்து கல்வத்திலரைத்து எண்ணெயில் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஓர் சிறுகரண்டி வீதம் கொடுக்கவும் உப்பில்லாதப் பத்தியம் தாயார்கூட பத்திய மிருக்க வேண்டியது.

வெள்ளி பஸ்பம் செய்யும் முறை

அழகுவண்ண மூலிகை சாற்றில் பழைய ரூபாய் ஒன்றை 7-முறை தோய்க்கவும் அதேயிலையை இடித்து தேங்காய் பிரமாணம் உருண்டை செய்துக்கொண்டு ரூபாயை அதில் வைத்து 7-சீலமண்செய்து சீலமண் காய்ந்த பிறகு ஒரு கெஜம் அளவு ஆழக்குழிவெட்டி. தாம்பிர பஸ்பம்போல் புடம்போட்டு எடுக்க பஸ்பமாகும் இதை சீசாவில் பதனம் செய்துக்கொள்ளவும் இதை அரிசியிடை பசும் வெண்ணெயில் வைத்து கலந்து காலை மாலை 10-நாள் சாப்பிடவும் தாது விர்த்தி, காசம், க்ஷயம், ஈளை, இருமல், சுவாசகாசம் தீரும் இச்சாப்பத்தியம். ரூபாயை பழுக்க காயவைத்து சாற்றில் 7-தடவை தோய்க்கவும்.

வெள்ளைப் பாஷாண பஸ்பம்

அப்ளாகாரம்	துலா	6
வெள்ளைப் பாஷாணம்	,,	1

அப்ளாகாரத்தை சன்னமாக பொடித்து இருபாகமாக்கி ஒருபாகம் மூசையில் போட்டு வெள்ளைப் பாஷாணத்தை வைத்து மற்ற பாகத்தை அதற்குமேல் போட்டு பிகுந்து ஓட்டைவைத்து வாய்மூடி 7-சீலமண்செய்து காயவைத்து சேவல் உயரம் விரட்டி அடுக்கி புடம்போடவும் ஆறினப் பிறகு உடைத்தால் பஸ்பமாகியிருக்கும் அதை பதனம் பண்ணிக்கொள்ளவும் இதை அரிசியிடை யெடுத்து காலை மாலை இரண்டுவேளையும் தேனில் குழைத்துக் கொடுக்கவும் ஜ்வரம் முதலியவை தீரும். வெண்ணெயில் கொடுக்க சுவாசகாசம், இறைப்பு நோய், வாதரோகம் தீரும். இச்சாப்பத்தியம்.

குழந்தைகட்கு அள்ளு மாந்த எண்ணெய்

6-பலம் சித்தாமணக்கெண்ணெயில் $1\frac{1}{2}$-பலம் வெப்பாலன் பால்விட்டு $1\frac{1}{2}$-பலம் வெங்காய ரசம்விட்டு கருஞ்சீரகம்

கடுகுரோகனி வகைக்கு பலம்-$\frac{1}{8}$, பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக்கொள்ளவும் பால் குடிக்கும் குழந்தையாக யிருந்தால் $\frac{1}{4}$-பலம் வீதமாய் 5-நாள் கொடுத்து தாயாருக்குப் புளியில்லாமல் பத்தியம் வைக்கவும்.

சகல கரப்பானுக்கும் எண்ணெய்

பூவரசன்பட்டை செங்கத்தாரிப்பூ தகரப்பட்டை கண்டங்காலி நிலாவிரை வகைக்கு பலம்-10, யெடுத்து யிடித்து 5-படி தண்ணீரில் கியாழம்வைத்து 1-படியாக சுண்டகாச்சி யிருத்து முத்தெண்ணை 1-படி, வெள்ளாட்டுப் பால் 1-படி ஒன்றுய்க்கலந்து மிளகு, கருஞ்சீரகம், கார்போக அரிசி, சதகுப்பை, பூண்டு, வசம்பு, வலம்புரிக்காய், பரங்கிப்பட்டை இதுகள் வகைக்கு பலம்-$\frac{1}{4}$, எடுத்து யிளம்வருப்பாய் வருத்து யிடித்து வஸ்திரகாயம் செய்து மேல்கூட்டிய யெண்ணையில் போட்டு காச்சிவடித்து பிரதினமும் காலையில் ஒரு கரண்டி வீதம் கொடுக்க சகல கரப்பானும் தீரும். அடியில் நின்ற கடு கெடுத்து இரணம்மீது தடவவும் தீரும். 5-நாள் அல்லது 7-நாள் கொடுக்கவும். தாயார்கூட இச்சாப்பத்தியமிருக்கவும்.

நவநீத வெண்ணை

வெள்ளை குங்கிலியம்	விராகனிடை	1
நெய்	,,	1
நெல்லிக்காய் கெந்தகம்	,,	$\frac{1}{2}$

இந்த மருந்துடன் தேங்காய்-1, உடைத்து திருகி பால் பிழிந்துக்கொண்டு அதனிடைக்கு செம்பருத்திசார்விட்டுஇது களையெல்லாம் ஒன்றுய் சேர்த்து காய்ச்சி கல்வத்தில்போட்டு அரைத்து வெண்ணை பதமாய்வரும்போது வழித்து கொண்டு சுத்த ஜலத்தில்போட்டு வைக்கவும். பாக்களவு பனவெல்லத்தில் வைத்து சாப்பிடவும். காலை மாலை 5-நாள் சாப்பிடவும்

வெள்ளை, மஞ்சள் மேகம், சித்தபிரமியம், நீர்கடுப்பு இதுகள் தீரும் கல்வத்தி லரைக்கும்போது சுத்த ஜலம்விட்டு அரைக்க வும். இச்சாப்பத்தியம்.

பக்கசூலை கெற்பசூலைக்கு யெண்ணெய்

முளகரணையிலையை உரலிலிட்டு ஜலம் வார்த்திடித்து 12-பலம் ரசம் பிழிந்துக்கொண்டு அதில் 12-பலம் முத்தெண் ணெய் விட்டு உரித்தெடுத்தப் பூண்டுத்திரி 4-பலம் கூட்டி காய்ச்சி வடித்து திரேக திடப்படி 3-நாள் கொடுத்துவர பேதி யாகும் பேதியதிகமானால் நோய் நீங்கினதென்று தெரிந்துக் கொண்டு நிருத்திவிடவும் இச்சாப்பத்தியம்.

இரசசெந்தூர வல்லாதி மெழுகு

இரச செந்தூரம்	விராகனிடை	1
இரச கற்பூரம்	,,	1½
திரிகடுகு	,,	3
ஓமம்	,,	3
கருஞ்சீரகம்	,,	3
கொடிவேலி வேர்பட்டை	,,	3
செங்கொட்டை	,,	6

இந்த செங்கொட்டையை மூக்கை ஒடித்து சாணியில் போட்டு அவிழ்த்து சுத்த ஜலத்தில் அலம்பி சுத்தி செய்துக் கொண்டு மேல்கூரிய 6-தினுசுகளையும் போட்டு கல்வத்தில் நன்றாய் அரைத்து தேன்விட்டு 2-ஜாமம் அரைத்து மெழுகு பதம் வரும்போது வழித்து பீங்கான் டப்பியில் வைத்துக் கொள்ளவும் 7-நாள் கடலைபிரமாணம் வெல்லத்தில் சாப்பிட வும் 10-நாள் விளக்கெண்ணையில் ஸ்நானம் பண்ணவும் நாள் பட்ட புடிப்புகள் தீரும். புளி, புகையிலை, லாகிரி வஸ்து முதலியவைகள் கூடாது. நெய்தாளிப்பு கடும்பத்தியம்.

சாரக்கொழம்பு

சாரம்	விராகனிடை	1
நாட்டு வெங்காரம் பொரித்தது	,,	½

இது இரண்டையும் கல்வத்தில் போட்டு கொம்புக் கள்ளிப் பால்விட்டு 1-ஜாமம் அரைத்து இடைக்கிடை விளக்கெண்ணை விட்டு அரைத்துப் டப்பியில் பதனம் பண்ணிக் கொண்டு கடலை பிரமாணம் பனவெல்லத்தில் சாப்பிடவும் காலையில் 7-நாள் அல்லது 5-நாள் சாப்பிடவும். புளி, எள்ளு, நெய், லாகிரி வஸ்துக்கள் கூடாது. மலம் போகும். நீர் இறங்கும். வீக்கம், பாண்டு. நீராம்பல். நீர்கோர்வை, மகோதரம், வயிற்றுவலி, வயிர் உப்பிஷம், சிற்சில மேகம் முதலியவைகள் தீரும். இச்சாபத்தியம்.

விரைவாத சஞ்சீவி எண்ணை

கெச்சக்காய் பருப்பு	ஏலம்
வால்மிளகு	பரங்கிச்சக்கை
சன்ன லவுங்கப்பட்டை	பூரம்
சுத்திசெய்த வாளப்பருப்பு	கடுகுரோகனி

வகைக்கு ½-பலமாக யெடுத்து யிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு கெச்சக்கா யிலேவேறு முதலான சமூலம் கொண்டுவந்து 10-பலம் நிறுத்து பஞ்சுபோலிடித்து 1-படி தண்ணீரில் கியாழம்வைத்து ¼-படியாக காய்ச்சி வடிகட்டி அதற்கு சரியாய் சித்தாமணக் கெண்ணைவிட்டு மிதூளாப் போட்டுக் கலக்கி அடுப்பேற்றி கமலாக்கினியாக கொஞ்சம் சிறுக யெரித்து பக்குவமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு காலையில் ஒரு கரண்டி வீதம் 7-நாள் சாப்பிடவும் இச்சாப் பத்தியமாக கடுகு, நல்லெண்ணை, அவுத்திக்கீரை புகை, போகம் நீக்கவேண்டியது. விரைவீக்கம் நரம்பு முதலானதும் தீரும்.

பேதிக்கு காசுக்கட்டி மாத்திரை

காசுகட்டி விராகனிடை 12, சுத்திசெய்த வாளம் விராகனிடை 6, தேன்விட்டு 1 ஜாமம் அரைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் இதில் ஒரு மாத்திரையை பொடித்து வாயில்போட்டு கொஞ்சம் ஜலம் குடிக்கவும் பேதியாகும் வயிற்றுவலி, வாந்தி, கடினமான பேதிகண்டால் எலுமிச்சம்பழச்சார் குடிக்கவும் நிற்கும் அல்லது குளிர்ந்த ஜலத்தில் குளித்துவிட்டு மோர் சாதம் சாப்பிடநிற்கும் மாலையில் மிளகுகியாழம் சாப்பிடவும்

சூதக வாய்வுக்கு யெண்ணை

விளக்கெண்ணை	படி	4
தும்மிட்டிக்காய் சார்	,,	2
ஆவின் பால்	,,	1
ஆவின் கோமியம்	,,	1
வெள்ளாட்டு கோமியம்	,,	1
நொச்சிச்சார்	,,	1
மஞ்சள்யிலை சார்	,,	½
இஞ்சிச் சார்	,,	½
குமரிச் சார்	,,	½
புங்கம் பால்	,,	½

இதுகளையெல்லாம் பத்திரமாய்ச் சட்டியில் வார்த்து கலந்து

நிலாவிரை வேர்	விராகனிடை	½
கண்டம்கத்திரி வேர்	,,	½
சட்டரணை வேர்	,,	½
சித்திரமூலம் வேர்	,,	½

இந்தநான்கு சரக்கையும் பால்விட்டு அரைத்துஷ்டி எண்ணெயில்கூட்டி அடுப்பில்வைத்து ஒரே ஜாதிவிரகால் எரித்து

மெழுகு பதத்தில் வடிகட்டிக்கொண்டு பிறகு கடைச்சரக்குகள் சேர்க்கவேண்டிய விபரம்,

கடுகுரோகனி	பலம்	½
மிளகு	,,	½
வாய்விளங்கம்	,,	½
சுக்கு	,,	½
ஏலம்	,,	½
திப்பிலி	,,	½
ஆணைதிப்பிலி	,,	½
வால்மிளகு	,,	½
கடுக்காய்தோல்	விராகனிடை	1½

இதுகளை சூரணித்து வஸ்திரகாயம் செய்து யெண்ணையில் சேர்த்து,

பூண்டு	விராகனிடை	½
நவாச்சாரம்	,,	½
இந்துப்பு	,,	½
வளையலுப்பு	,,	½
கல்லுப்பு	,,	½
சவுட்டுப்பு	,,	½
எவ்வசாரம்	,,	½
அப்பளாகாரம்	,,	½

இதுகளையெல்லாம்பொடித்து எண்ணையில்போட்டு 1-வாரம் நெல் புடத்தில் போட்டு வைக்கவும் பிறகு கணபதி பூஜை செய்து வைத்துக் கொண்டு வீட்டுப் பிரதியானதே விராகனிடை-½ சாப்பிடவும் இச்சாபத்தியம் புளி தள்ளவும் வாய்வான பதார்த்தம் கூடாது 6-நாள் எண்ணை 3-நாள் மறுபத்தியம் ஆக 9-நாள் போனதே 10-ம்நாள் ஸ்நானம் செய்யவும் இப்படி 3-மாதவிடைக்கு சாப்பிட்டால் வயிற்றுநோய்,

கெர்பநோய், சூசிதவாதம், சூலை. உதிரம் கட்டினது, கண்ட சதைநோய், ஆமையைப்போல் ஓடும் வாய்வு இதுகள் தீரும்

காமரூபி லேகியம்

வால்மிளகு	விராகனிடை	8
லவங்கப்பட்டை	,,	8
குல்கந்து	,,	8
அக்ராகாரம்	,,	8
ரூமஸ்தகி	,,	4
கடலைமாவு	,,	4
ஜாதிக்காய்	,,	4
போஸ்தக்காய்	,,	4
குரோசனி	,,	4
ஓமம்	,,	4
முள்ளிலவம் பிசினி	,,	4
லவங்கம்	,,	4
ஜாப்பத்திரி	,,	4
சுக்கு	,,	4
குங்குமப்பூ	,,	1

இதுகளை சேகரித்துக்கொண்டு குல்கந்து குங்குமப்பூ இவைகளை வேரே வைத்துக் கொண்டு மற்ற சரக்குகளை உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்துக்கொண்டு கல்வத்தி லிட்டு சுத்தமான தேன்விட்டு அரைத்து மெழுகுபதம் வரு கையில் குங்குமப் பூவையும் சேர்த்து அரைத்து பிறகு குல் கந்தையும் போட்டு கையினல் பிசைந்து பிறகு ஒரு பரணை யில் போட்டுக்கொண்டு வேளைக்கு 2-விராகனிடை சாப்பிட வேண்டியது காலை மாலை இருவேளையும் 20-நாள் சாப்பிட வும் சாப்பிட்டால் தாதுவிர்த்தியாகி நீர்தாரை சிறுத்து அதிக சந்தோஷத்தை அடைவிக்கும். இதை சாப்பிடும்போது

ஆழாக்கு பசும்பால் சாப்பிடவும் இதோடு நெய் தயிர், வெள்ளாட்டுக்கறி சேர்த்துக் கொள்ளவும் இந்த லேகியத்தோடு அயச்செந்தூரம் அரிசியிடை சேர்த்து சாப்பிட்டால் வெகு நன்மை தரும்.

பேதிக்கு ஜல மாத்திரை

ஜாதிலிங்கம்	விராகனிடை	1
இரச பற்பம்	..	1
சுக்கு	..	1
திப்பிலி	..	1
மிளகு	..	1
வெண்காரம்	..	1
சிற்றாமணக்கு பருப்பு	..	1
சுத்திசெய்த வாளம்	..	1

இவைகளை கல்வத்திலிட்டு குளிர்ந்த ஜலம் விட்டு ஒரு ஜாமம் அரைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் ஒரு மாத்திரையை யெடுத்து கொஞ்சம் வாழப்பழத்திற்குள் வைத்து சாப்பிட்டு உடனே கொஞ்சம் குளிர்ந்த ஜலம் குடிக்க பேதியாகும். பேதி யதிக மானால் வென்னீர் குடிக்க பேதிகட்டும் வென்னீரில்குளித்து மோர்சாதம் சாப்பிடவும் மாலையில் மிளகு கியாழம் சாப்பிடவும்.

வீரச் செந்தூரம் செய்யும் முறை

வீரம்	பலம்	1
பொட்டாஸ் ஐயோடியன்	..	1

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு கலக்கபொடிசெய்து 1 குண்டுசட்டியின் மத்தியில் வைத்து மேற்படி சட்டியை கவிழ்த்து மூடி 7-சீலைமண் செய்து உலர்ந்தப்பின் அடுப்பி லேற்றி நீபாக்கினியால் 4-ஜாமம் எரித்து ஆரினப்பின் சட்டி யின் மண்கவசத்தை பிரித்து மேல்சட்டியில் பிடித்திருக்கும்

மருந்தை யெல்லாம் கத்தியால் சுரண்டி கல்வத்திலிட்டு நுணுக்கி அரைத்தால் முருக்கம்பூப்போல் செந்தூரமாகும் அதை சீசாவில் பதனம்செய்து அரிசியிடை தேனில் கலந்து காலை மாலை 3-நாள் சாப்பிடவும் ஜுரம், ஜன்னி, சுவாசகாசம் கை கால் பிடிப்பு, சூலை, வீக்கம், பாண்டு இவைகள் தீரும் இதை 3-நாளுக்குமேல் உபயோகிக்கக்கூடாது இச்சாப்பத்தியம்.

தாம்பிர செந்தூரம்

பழைய ஜல்லிகாசியைக் கொண்டுவந்து தட்டானிடத்தில் கொடுத்து காய்ச்சி யிலைபோல் தகடுகளாக தட்டினபிறகு நன்றாய் சிவக்கக் காய்ச்சி எலுமிச்சம்பழரசத்தில் தோய்க்கவும் இப்படி பதினேழுதடவை காய்ச்சி தோய்த்த பிறகு அவுத்திக் கீரையை அரைத்து ஒவ்வொரு தகட்டுக்கும் தள மாய்ப்பூசி அதாவது முத்தையின் நடுவில் தகட்டைச்சொருகி அனைத்தும் ஒரே முத்தையாய்த் திரட்டி திரட்டி சன்னி கோணிப்பட்டையை சேற்றில் புரட்டி கீரைமொத்தைமேல் கவசஞ்செய்து இரண்டு முழ ஆழம் அகலங்களமுள்ள கெஜ புடத்தில் நூறுகைவரட்டியில் புடம் வைக்கவும் நாலுளான பிறகு அதையெடுத்து கல்வத்தில் வெள்ளெருக்கன் பால் விட்டரைத்து பில்லைகளாகச்செய்து நிழலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலை கவசம் செய்து ஐம் பதுகை வரட்டியில் புடம் வைக்கவும் மறுநாள் எடுத்துப் பார்க்க ஊதா செந்தூரமாகயிருக்கும் அதைக் கல்வத்திலிட்டு அரைத்து புட்டியில் வைத்துக்கொள்ளவும் இதற்கனுபானம் கால்படி புளிச்சதண்ணீரில் 2½-பலம் மிளகுபோட்டு 3-நாள் ஊரவைத்து நாலாளுள் எடுத்து வெய்யலில் உலர்த்தி சூரணம் செய்து நெய்பழகிய சட்டியில் ஒரு ரூபாயிடை தேன், ஒரு ரூபாயிடை இஞ்சிரசம், ஒரு ரூபாயிடை பசுநெய். மூன்றும் விட்டு மேற்சூரணம்போட்டு லேகியமாய் கிளரி வைத்துக் கொள்ளவும் புளியங்கொட்டைப் பிரமாணம் லேகியத்தில்

அரிசியிடை செந்தூரம் வைத்து உருட்டி சாப்பிடவும் வாத சுரம் மேகவாய்வு, பாரிசவாய்வு, கண்டமாலை கிரந்தி இப்படி பட்ட வியாதிகளெல்லாம் நிவர்த்தியாகும் தாதுவிர்த்தியுண்டா கும், கடுகு, நல்லெண்ணெய் நீக்கவும், இச்சாப்பத்தியம்.

கிருமிகள்விழ சவுக்கிய பேதி

சித்தாமணக்கெண்ணெயும் பசும்பாலும் சமயிடையாய் சேர்த்து நன்றாய்க்கலந்து ஒரு சிட்டிகை கற்கண்டு பொடி போட்டு சாப்பிட சவுக்கியமாகும் இளைப்பு ஆயாசமில்லா மல் பேதியாகும் நாக்குபூச்சியென்னும் கிருமிகள் கட்டுக்கட் டாய் வெளிப்படும் இரைச்சி, சூப்பு, மிளகு நீர் இவையாகும் கத்திரி அவரை முருங்கை இதுகளின் பிஞ்சு சேர்த்துக் கொள்ளலாம் மாலையில் சுக்கு மிளகு கியாழம் சாப்பிடவும்.

சீமைகல்நார் பஸ்பம் செய்யும் முறை

சீமைகல்நார் பலம்-5, ஓர் கல்லுரலிலிட்டு நன்றாக இடி த்து கல்வத்திலிட்டு அரைக்கும்போது வெள்ளெருக்கன் கொழுந்தை சேர்த்தரைக்கவும் அப்படியாக இரண்டு சாமபரி யந்தம் யெவ்வளவு கொழுந்து வாங்கிக்கொள்ளுமோ அவ் வளவு கொழுந்தையும் ஒவ்வொன்றாக கொடுத்து அரைக்க வும் பின்பு அதை வட்டுசெய்து காயவைத்து அகலில்வைத்து அதன்மேல் அகல்மூடி 5-சீலைமண் செய்து உலர்ந்த பின்பு 50-விரட்டியால் புடம் போடவும் ஆறினப்பின்பு பார்த்தால் வெண்மையாய் நீறியிருக்கும் அதை சீசாவில் பதனம் செய்து அதில் பணயிடையெடுத்து பசுவெண்ணெயில் மத்தித்து 10-நாள் காலை மாலை உட்கொள்ள நீர்சுறுக்கு வெள்ளை இப் பேர்ப்பட்ட வியாதிகளையும் தீர்ப்பதும் தவிர தாதுவிர்த்தி யாகும் இதைப் பல்துலக்கிவர பற்களிருகி அசையாமல் வலுவாகும் இச்சாப்பத்தியம்.

புருஷரத்தின தைலம் செய்யும் முறை

½-வீசை வெள்ளை குண்டுமணியை இருபிளவாய் செய்துக்கொண்டு வெள்ளாட்டின் பாலில் ஓர் இரவு முழுவதும் ஊரவைத்து பிறகு மேற்றோலப்போக்கி ஒரு பகல் முழுவதும் வெய்யலில் காயவைக்கவும் இவ்வாறு 7-இரவு பாலில் ஊரவைக்கவும் 7-பகல் காயவைத்துக்கொண்டு ஓர் கலயத்தின் அடித்தூரில் 5-துவாரம் செய்து அத்துவாரங்களுக்கு 5-இரும்புக்கம்பிகள் சொருகி மேற்கூறிய பருப்புகளை யெல்லாம் அந்தக் கலயத்தில்போட்டு 5-சீலமண் செய்து காயவைத்து ஒரு ஜான் அகலமும் ஒரு ஜான் முழம் குழிவெட்டி குழிக்குத் தகுந்த ஓர் சட்டிவைத்து அதில் ஜலம் நிறப்பி அதில் ஓர் கணமுள்ள டம்ளர்வைத்து முன்சொல்லிய கலயக் கம்பிக்கும் டம்ளர்வாய்க்கும் சரியாய் பொருந்தச்செய்து கலயத்தை செவ்வையாக அமர்த்திப்பார்த்தால் பூமிமட்டத்திற்கு மேலே கலயம் முக்கால்பங்கு அளவிருக்கவேண்டும் பின்பு ஒருமுழம் விரட்டி அடுக்கி புடம்போட வேண்டியது ஆறின பிறகு புடத்தை மெதுவாகப்பிரித்து கலயத்தை அசையாமல் எடுத்து அப்புரப்படுத்திப்பார்த்தால் டம்ளர் நிறம்ப மாதுளம்பூ நிறமான தைலம் இருக்கும் அதை சீசாவில் பதனம் செய்துக்கொள்ளவும்.

தைலத்தை உபயோகிக்கும் விபரம்

இந்த தைலத்தை சர்க்கரையோடு 5-துளிவிட்டு மத்தித்து காலை மாலையாக 10-நாள் சாப்பிட்டு பின்பு மறுபத்தியம் 10-நாள் இருந்து பிறகு நல்லெண்ணையில் ஸ்நானம் செய்து விடவேண்டும்.

பத்தியம்

மீன், கருவாடு, நல்லெண்ணை, கடுகு, புளி, ஆகாது இவ்வாறு பத்தியம் தவறுது சாப்பிட்டு வருவீர்களாகில் தாதுகள்

மணியாயிருக்கிவிடும் 80-வயதுள்ள விருத்தாபியர் மேற்படி தைலத்தை 10-நாள் சாப்பிட்டால் வாலிப தன்மையும் பெறுவர் பாரிச வாய்வு உடையவர்கள் 10-நாள் சாப்பிட்டால் பூரண சுகம் அடைவார் இவ்வறுமை தைலத்தை உபயோகித்தவர்களே இதன் பெருமையை சொல்லுவார்கள் சிற்றின்பமே புரியும் காமிகளுக்கு மாத்திரமல்ல குடும்ப சுகத்தை யனுபவிக்க யேலாமலும் சந்ததிவிர்த்தி இல்லாமலிருக்கும் சகல ஆண் பெண் இருதரத்தினரும் நன்மையடைய விரும்பியே இவ்வருமைத் தைலத்தை வெளியிடலானேம்.

வெள்ளை எண்ணை செய்யும் முறை

சித்தாமணக்கெண்ணெய்	வீசை 1
இரசக்கற்பூரம்	பலம் 1

இந்த கற்பூரத்தை சிறுதுண்டுகளாக உடைத்து ஒரு கோப்பையிலிட்டு அதில் நிறைய முலைப்பால்விட்டு 8-ஜாமம் ஊரினப்பின் எடுத்து காயவைத்து கல்வத்திலிட்டு சன்னமாக நுனுக்கி கொஞ்சம் சித்தாமணக்கெண்ணைவிட்டு 4-ஜாமம் அரைத்து மெழுகுபதம் கண்டால் ஒருசட்டியில் வழித்து மேல்படி எண்ணையுடன் கூட்டிவிட்டு ஒரு குச்சியால் கிண்டி அதன் வாய்க்கு ஓடுகட்டி வைத்துக்கொண்டு உச்சிக்கரண்டி வீதம் 4-நாள் ஒரு முறையாக பிள்ளைகளுக்கு கொடுத்து வந்தால் பிள்ளைகளுக்கு வியாதிகாணாது பிள்ளைகள் நன்றாக வளர்ந்து மேனிக்கொடுக்கும் அதிக பலனுமுண்டாகும் வாய்வு இசிவுகள் இவைகளெல்லாம் நிவர்த்தி செய்யும் வாலிபகாலத்தில் வெள்ளைக் கண்டவர்களுக்கு வேளை ஒன்றுக்கு 1-பலம் அளவு காலையில் ஒருவேளை மாத்திரம் மூன்று நாள் உட்கொண்டால் வியாதிதீரும் இச்சாப்பத்தியம்.

பூநீறு முப்புச்சுண்ணம் செய்யும் முறை

பூநீறு	பலம் 2

வெடியுப்பு	பலம்	2
மயில்தூத்தம்	,,	2

இம்மூன்றையும் கல்வத்திலிட்டு நன்முக நுனுக்கி அறு வகை ஜெயநீர்விட்டு 4-ஜாமம் அரைத்து வட்டுசெய்து காய வைத்து அகலில் இட்டு மேலகல்மூடி 7-சீலமண் செய்து காய வைத்து குழித்தோண்டி 20-விரட்டி.யால் புடம்போட வும் ஆறினப்பின் பார்க்க வெண்மையாக இருந்தால் சரி அப் படி இல்லா விட்டால் மறுபடியும் ஜெயநீர்விட்டு 2-ஜாமம் அரைத்து வட்டு செய்து முன்போல் 30-விரட்டியால் புடம் போட மலர்ந்து சுண்ணமாகும் அரிசியிடை நெய்யில் கலந்து காலை மாலை 10-நாள் உட்கொள்ள சூதக வாய்வு சூதககட்டி வயற்றில் வாய்வு கட்டி சுரக்கட்டி இவைகள் தீரும் இச்சாப் பத்தியம் மேற்படி சுண்ணம் இடை பாதரசம் விட்டு கல்வத் தில் அறுவகை ஜெயநீர்விட்டு 4-ஜாமம் அரைத்து வட்டு செய்து காயவைத்து அகலில்வைத்து மேலகல்மூடி 7-சீலை மண் செய்து உலர்ந்தபிறகு 6-வரட்டியில் புடம்போடவும் இரசம் நீங்கும் இதில் சகல வியாதிகள் நீங்கும்.

ரோக வச்சிர குடார கேசரி செய்முறை

பாதரசம்	பலம்	1
நெல்லிக்காய் கெந்தகம்	,,	1

கெந்தகத்தை கம்மாறு சாறுவிட்டு மைபோல் அரைத்து அதில் முக்கால்பாகம் எடுத்து மூசைப்போல்செய்து மற்றொரு மூசையை யெடுத்து அதற்குள் கெந்தகத்தால் செய்த மூசை யை சரிவர அமர்த்தி பொருந்தசெய்து அதில் ஒருபலம் வாலை ரசத்தைவிட்டு மீதியாகயிருக்கும் கால்பாகம் கெந்தகமாயினத் தால் ஓர் வட்டுசெய்து அதற்குள் விட்டிருக்கும் கெந்தக மூசையை அமர்த்தி கையினல் சரிவரசெய்து மண்மூசை வாய் மட்டத்திலிருந்து ஒரு விராகனிடை தாழ்ந்திருக்கும் படியாக

பானை ஓட்டை வட்டமாக நறுக்கி மூசைக்குள்ளிட்டு அதற்கு மேல் சோற்றுப்பை வெற்றிலை சாற்றில் அரைத்து விராகனிடை தாழ்ந்திருக்கும் மட்டத்திற்கு சரியாக இம்மையினத்தை தடவி மேல்மூசை கவிழ்த்து அசையாமல் 7-சீலை மண் செய்து காயவைத்து ஓர் சட்டியில் ½-படி மணலை கொட்டி அதில் குழித்தோண்டி சோற்றுப்பு ¼-படி விட்டு மூசையை அதின் மத்தியில் வைத்து மேலேயும் ¼-படி உப்பு கொட்டி அதின்மேல் ½-படி மணலைக்கொட்டி மூசை தெரியாமல் செய்து மேல்சட்டி கவிழ்த்துமூடி 7-சீலைமண் செய்து சற்று காயவைத்து அடுப்பிலேற்றி ஒரேஜாதி விரகால் கமலாக்கினியாக அதாவது 3-விரகால் 4-ஜாமம் யெரித்து ஆரவைத்து கலசத்தை நீக்கினால் மூசையடியில் குண்டுகற்போல் உருகி நிற்கும் அதை கல்வத்திலிட்டு நுனுக்கி இதில் நான்கு குண்டு மணியிடையாக நெய்யில் மத்தித்து காலை மாலை 40-நாள் சாப்பிட்டுவர திமிர்நோய் திமிர்படை குறைநோய் குஷ்டம் இவைகள் தீரும் இம்மருந்து சாப்பிடும்போதெல்லாம் ¼-பலம் நெய்யை உச்சியில் தேய்த்துக்கொண்டு பகல் 10-மணிக்கு குளத்தில் 100-முழுக்குப்போட்டு ஸ்நானம் செய்யவும் இது முக்கிய கடமையாகும் இச்சாப்பத்தியம். பால், தயிர், மோர் வெள்ளாட்டுக்கறி இதுகள் சேர்த்துக்கொள்ளவும்.

வாலைபேதிக் குளிகை

மிளகு	விராகனிடை	5
வாளம்	,,	5
சுக்கு	,,	1
ஓமம்	,,	1
ரோகணி	,,	1
ஆமையோடு	,,	1
கோஷ்டம்	,,	1

இவைகளை பழச்சார் விட்டரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும் 1-மாத்திரையை மூலைப்பாலில் இழைத்து குழந்தைகளுக்கு கொடுக்க பேதி யாகும் ஜன்னி ஜ்வரம் சீதஜ்வரம் தீரும் பேதியதிகமானால் வென்னீர்சாதம் கொடுக்கவும்.

குழந்தைகள் ஊதுமாந்தத்திற்கு பேதி மாத்திரை

நெல்லிகெந்தகம்	விராகனிடை	½
இரசம்	,,	½
வெண்காரம்	,,	½
சுக்கு	,,	½
சுத்திசெய்த வாளம்	,,	1

இவைகளை குளிர்ந்த தண்ணீர் விட்டரைத்து பாசிப் பயிர் பிரமாணம் மாத்திரை செய்து ஒரு மாத்திரையை தண் ணீரில் ஊரவைத்து உரைத்துக்கொடுக்கவும் ஊதுமாந்தம் தீரும் பெருமல் வாதம் இவைகளெல்லாம் தீரும்.

காந்தச் செந்தூரம் செய்யும் முறை

ஊசிகளைப்பிடிக்கும் சுத்தமான காந்தத்தை கல்வத்தி லிட்டு எலிமிச்சம்சார்விட்டு நான்கு ஜாமம் அரைத்து வட்டு செய்து ரவியில் காயவைத்து மேலகல்மூடி 7-சீலைமண் செய்து சீலைமண் காய்ந்தப்பிறகு ஒருமுழம் உயரம் வரட்டி யடுக்கி புடம்போட்டு ஆரினப்பின் எடுத்து கவசம் பிரித்து வட்டை யெடுத்து கல்வத்திலிட்டு மறுபடியும் எலுமிச்சம் சார்விட்டு அரைத்து முன்போலவே செய்து மூனுமுறை புடம்போட்டு பின்பு தாழமரத்தின் அடிதண்டை எடுத்து அதைநன்றாக யிடித்து சார்யெடுத்துக்கொண்டு ஷை புடத்து மருந்தையெல்லாம் கல்வத்திலிட்டு கத்தாழை சாரையும்

சேர்த்து 4-ஜாமம் அரைத்து முன்போல் கவசம் செய்து 3-புடம்போடவும் ஆகமொத்தம் ஆறுபுடம்போட்டு எடுத்து பார்த்தால் முருக்கன்பூ போன்று சிவந்திருக்கும் அதை யெடுத்து சீசாவில் பதனம் செய்துக்கொள்ளவும் இந்த செந் தூரத்தில் பணவிடையெடுத்து சுத்தமான பசுநெய்யில் மத் தித்து காலை மாலை 20-நாள் உட்கொள்ள மேகம் 29-தும் வாதம் 80-தும் தீருவதும் தவிர கண்பார்வை அதிக சுத்தமாக தோன்றும் இச்சாப்பத்தியம்.

சாம்பிராணி பதங்கம் செய்யும் முறை

நல்ல பால்சாம்பிராணி 5-பலம் நுனுக்கி கல்வத்திலிட்டு அதன் வாய்க்கு பெரிய காகிதப்பை செய்து அதன்வாயில் நுழைத்து நூலினல் கட்டி ஆவிபோகாதப்படி செய்து மூன்று ஆணியை பூமியில் அடித்து அதன்மேல் கலயம் வைத்து அதன் கீழ் பசுநெய்யினல் விளக்கொன்றுவைத்து எறியவிடவும் அந்த கலயத்தில் பரிமளித்து இரைச்சலுடன் சாம்பிராணி மேலே இருக்கிற காகிதப்பையில் ஏறி இருக்கும் இரைச்சல் அடங்கினல் தீபத்தை நிறுத்திவிடவும் பின்பு கலயத்தின் வாயிலிருக்கும் நூலை மெதுவாக அவிழ்த்துப் பார்த்தால் வெண்மையாய் பஸ்பம் இருக்கும் அதை சீசாவில் பதனஞ்செய்து தாம்பூலத்தில் குண்டுமணியிடை உண்டுவர வும் தாதுவிர்த்தியாகும் சீதளஜ்வரம் நாடாது 10-அல்லது 20-நாள் உட்கொள்ளவும் இச்சாப்பத்தியம்.

குழந்தைகள் விடாக்கழிச்சலுக்கு கட்டுவாதி மாத்திரை

ஜாதிக்காய்	விராகனிடை	2½
ஜாதிப்பத்திரி	,,	2½
அதிவிடையம்	,,	2½
அபினி	,,	2½

இவைகளை நல்லெண்ணெயில் தோய்த்து 2-ஜாமம் அரைத்து பணவிடை உருண்டை செய்து மூலைப்பாலில் கொடுக்கவும் ஒரு நாளைக்கு காலை மாலை உச்சி 3-தடவையும் கொடுக்க பேதி நிற்கும்.

பூநீறு முப்புச் செந்தூரம்

பூநீறு	பலம்	5
பதனித்தண்ணீர்	,,	5

ஒரு இரும்புச்சட்டியையும் ஒரு இரும்புக்கரண்டியையும் நன்றாக வெள்ளிப்போல் துளக்கி சுத்தமாக துடைத்து மேற் கூறிய பூநீரையும், பதனித்தண்ணீரையும் கரைத்து காற்றில்லாத ஓர் மூலையில் 3-நாள் வைத்து 4-ம் நாள் காலையில் பார்க்க இதில் உப்பு பூத்திருக்கும் இந்த உப்பை 11-விராகனிடை அல்லது 11½-விராகனிடை எடுத்து முன்னரைத்து வைத்திருந்த இரும்பு சட்டியிலிட்டு அப்புரம் வைத்துக் கொள்ளவும் பின்பு,

சீனம்	விராகனிடை	½
நல்ல அன்னபேதி	,,	1
வெடியுப்பு	,,	1
வெங்காரம்	,,	1
இரசம்	,,	1
கல்லுப்பு	,,	1

இந்த ஆறு சரக்கையும் கல்வத்திலிட்டு செம்பருத்தியிலை சாற்றால் மெழுகுபதமாக அரைத்து மேல்கூறிய செம்பருத்தியின் இலைச்சார் விராகனிடை-5 நிறுத்தி கல்வத்தில் விட்டு நன்றாக கழுவி இரும்பு சட்டியில்வார்த்து சட்டியை அடுப்பிலேற்றி ஆவாரவிரகால் தீபாக்கினியாய் எரியவிடவும் (கொதிவரும் சமயத்தில் அதில் போடப்படும் சரக்குகளை அறிந்துக் கொள்ளவும்)

மக்கி விராகனிடை 1

சல்வீரம் ,, 1

பளிங்குநிறமாக இருக்கிற

பச்சைக்கற்பூரம் ,, 1

இந்த மூன்று சரக்கையும் வெவ்வேறாக பொடிசெய்து வைத்துக்கொண்டு இரும்பு சட்டியில் மருந்துகள் கொதிக்கும்போது முதலாவது மக்கி தூளைப்போடவும் 2வது சல்வீரத்தூளைபோடவும் இவைகளைப்போட்டு சுண்டிவந்தபின் எலுமிச்சம்பழ ரசத்தை 2-3/4 விராகனிடை நிறுத்தி கொதிக்கும் சட்டியில்விடவும் சுண்டினவுடன் ஓர் கத்தியினால் கிளரிக்கொண்டே வரவேண்டும் அடிபிடித்துக்கொள்ளாமல் 4-ஜாமம் கடாக்கினியாய்கொடுக்கவும் எரிப்பும் தேய்ப்புமிருந்தால் செந்தூரமாகும் அதை சீசாவில் பதனம்பண்ணிக்கொள்ளவும் இந்த செந்தூரத்தை செய்ய எத்தனமாக இருக்கும் போது ஒருநாளைக்கு முன்னதாக செம்பருத்தியின் இலையை இடித்து சாறு பிழிந்து ஓர் சீசாவில் அடைத்துக் கொள்ள வேண்டும் அதற்கு கார்க்குபோட்டு மறுநாள் காலையில் துவாரம் செய்யவும் அப்போது சீசாவிலிருக்கும் சாறு நன்ருக தெளிந்து சிவந்த நிறமாக இருக்கும் செந்தூரம் செய்துக் கொள்ளவேண்டியது இந்த செந்தூரத்தில் விராகனிடை-1 நிருத்தெடுத்து பனித்தண்ணீரில் குழைத்து 1-பலம் சல்வீரத்திற்கு கலசங்கட்டி ஓட்டில் வைத்து மேல் ஓடுமூடி 5-சீலமண் செய்து 6-விரட்டியால் புடம் போடவும் இப்படியே எல்லா சரக்குகளையும் நீற்றிக்கொள்ளவும். வாந்திபேதிக்கும் பேய்பிசாசுகளினாலும். அல்லது துஷ்டதேவதைகளினாலும், வயற்றுநோய் வாந்திபேதியாகின்றவர்களுக்கு 1-பணயிடை நல்லெண்ணையில் கலந்து 3-நாள் காலை மாலை உட்கொள்ள மேற்கூறிய வியாதிகள் தீரும்.

விஷசுரத்திற்கு கியாழம்

நிலவேம்பு	சீந்திற்கொடி
பேய்ப்புடல்	சுக்கு
வேப்பம்பட்டை	கடுக்காய்

இவைகள் வகைக்கு விராகனிடை–5. பொடித்து ஒரு படி ஜலத்தில்போட்டு அடுப்பேற்றி யெரித்து நாலில் ஒன்றாக்கி ¼–ஆழாக்கு வீதம் கொடுத்துவர விஷசுரந்தீரும்.

பழய சுரத்திற்கு கியாழம்

பற்பாடகம்	ஆடாதோடை
சிறுதேக்கு	முத்தக்காசு
கோஷ்டம்	நிலவேம்பு
சீந்திற்கொடி	சுக்கு
திப்பிலி	சிறுகாஞ்சொரி

இவைகள் வகைக்கு விராகனிடை–5, சேர்த்துப் பொடித்து நாலுபடி ஜலத்தில்போட்டு அடுப்பேற்றி யெரித்து ஒருபடியாக்கி வீசம்படி வீதம் கொடுத்துவர பழையசுரந் தீரும் இச்சாப்பத்தியம்.

அஸ்திசுரத்திற்கு சூரணம்

தாளிசப்பத்திரி	பலம்	2½
ஏலம்	,,	½
கிராம்பு	,,	½
ஜாதிக்காய்	,,	½
ஜாபத்திரி	,,	½
வால்மிளகு	,,	½
லவங்கப்பட்டை	,,	½
வாய்விளங்கம்	,,	½
மல்லி	,,	½

சீரகம்	பலம்	¼
திப்பிலி	,,	¼
கோஷ்டம்	,,	¼
அக்கிராகாரம்	,,	¼
கடுக்காய்	,,	¼
தானிக்காய்	,,	¼
நெல்லிவற்றல்	,,	¼
சடாமாஞ்சில்	,,	¼
சோம்பு	,,	¼

இவைகளை நிறுத்தெடுத்து இளம்வறுப்பாய் வறுத்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து அத்துடன் 5-பலம் சீனியைச் சேர்த்து வைத்துக்கொண்டு தினம் காலை மாலை இரண்டுவேளையும் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர அஸ்திசுரம் அஸ்திவெட்டை தீரும். இச்சாப்பத்தியம்

வாந்தியை நிறுத்த

நன்னரிவேர்பட்டைச் சாற்றில் மயிலிரகுசாம்பல் அல்லது மிளகு வசம்பு இவைகளின் சாம்பலைச் சேர்த்துக்கொடுக்க குணமாகும் இவைகளை சுட்டு சாம்பலாக்கிக் கொள்ளவும்,

ஜலுப்பிற்கு கியாழம்

தூதுளையைக் கொண்டுவந்து சார்பிழிந்து ஒருபாலாடை வீதம் கொடுக்கத்தீரும் அல்லது துளசியிலையை கொண்டு வந்து புட்டுவைத்து ஒரு பாலாடை உள்ளுக்குக்கொடுக்கத் தீரும்,

ஜலுப்பிற்கு பத்து

வெற்றிலைச்சாற்றில் ½-விராகனிடை குங்குமப்பூ சேர்த்துக் கொதிக்கவைத்து மூக்கு புருவம் முதலிய இடங்களிற் பற்றுப்போட குணமாகும், அல்லது ஜாதிக்காயை ஜலம் விட்டரைத்து சுடவைத்துப் பற்றுப்போட ஜலுப்புத்தீரும்.

பேதியை நிறுத்த

மஞ்சள்	சிறுநாகப்பூ
கடுக்காய் பூ	போஸ்தக்காய்
அதிவிடையம்	

இவைகள் வகைக்கு பலம்-1 ஜடாமாஞ்சில் பலம்-½ இவைகளைச் சூரணித்து ½-படி கொதிக்குஞ் ஜலத்தில் போட்டு 3-மணிநேரம் ஊரவைத்து வடித்துக்கொண்டு 2-பாலடை வீதம் 5-6-மணிநேரத்திற்கு ஒருவிசை கொடுத்து வர பேதிநிற்கும்.

பேதியுண்டாக

சிற்றாமணக் கெண்ணெயும் முலைப்பாலும் சமமாகச் சேர்த்து இரண்டையும் நன்றாய்க்கலந்து ஒருபாலடை அல்லது 1½-பாலடை கொடுக்க மலமிரங்கும் அல்லது நாட்டுக் காட்டாமணக்குச் சாறுபிழிந்து ஒரு பாலடை கொடுக்கப் பேதியாகும்.

திரிதோஷ நிவாரணி

சடாமாஞ்சில், பெருலவுங்கப்பட்டை, சிறுலவுங்கப்பட்டை சித்தரத்தை, லவுங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக் கிழங்கு, சூதேபல்சான், அசரருன், கோஷ்டம், சறாயித்தா, குங்குமப்பூ, மவ்ரீத் வகைக்குப்பலம்-1 ருமஸ்தகி பலம்-½ இவைகளை தனித்தனியாக சூரணஞ்செய்து வெள்ளை சர்க்கரை பலம் 4-6½, நல்ல ஜலத்தில் பாகுசெய்து சூரணங்களைக் கொட்டி லேகியபதமாய் இறக்கி இரவில் போஜனத்திற்கு முந்தியாவது பிந்தியாவது 2-முதல் 3-விராகனிடை வரையிலும் கொள்ளவும் இதனால் உள்ளுருப்புகளுக்குப் பலம் உண்டாகும். வாய்நாற்றந்தீரும். காற்றைக்கண்டிக்கும் ஊத்தாம் பிள்ளையின் குளிர்ச்சி யாலுண்டாகும் நீர் பெருக்கை மாற்றும். தாது புஷ்டியைத்தரும். பயித்தியங்கள் நீங்கும் குளிர்ச்சி

பற்றிய தலைவலி, இருமல் நீங்கும். மூலநோய், பாதநோய் கால் விரல்களினிசிவு, படைகள். கல்லடைப்பு, நீர்தாரை ரோகங்கள்தீரும் ரோகங்கள் வெளுக்காமல் கார்க்கும். 21-நாள் உட்கொள்ளவும்.

கக்குவான் தீர நெய்

மீன்முள்ளு, எலிச்சதை, நத்தைச்சதை, வேங்கைப்புலியின் கண்டத்தோல் இவைகளில் எதையாகிலும் ¼-பலம் எடுத்து, 5-பலம் பசும் நெய்யில் போட்டுக்காய்ச்சி வடித்துக் கொண்டு 3-4-விராகனிடை வீதம் கொடுத்துவர குணமாகும்

அமிர்த சஞ்சீவி லேகியம்

வல்லாரை, சிறுபுள்ளட்டி, பொன்னுங்கணி, சிற்றாமுட்டி தாழைவிழுது வகைக்குப் பலம்-2, நிறுத்தெடுத்து இடித்து 6½-படி ஜலத்திற்போட்டு 1½-படியாக சுண்டக்காய்ச்சி அத்துடன் பசும்பால் படி-1, இளநீர் 1-படி கூடவிட்டு அதில் மேல் தோல் நீக்கிய இஞ்சி பலம் 3½-யை அரைத்துப் போட்டு அடுப்பேற்றி சீனிகற்கண்டு பலம் 4-பொடித்துப் போட்டு பாகுசெய்து அதில்.

கோஷ்டம்	சிவதைவேர்
வால்மிளகு	ஓமம்
ஏலம்	நறுக்குமூலம்
கருஞ்சீரகம்	திரிகடுகு
நற்சீரகம்	அரத்தை
ஜாதிக்காய்	ஜாபத்திரி
கிராம்பு	தாளிச்சபத்திரி
அக்கிராகாரம்	அதிவிடையம்
திப்பிலி	

தினுசு 1-க்கு ¼-பலமாக இவைகளை வெதுப்பிப் பொடித்துச் சூரணமாக்கிக்கொள்ளவும். பால்லில் வேகவைத்த வில்வப் பழம் பலம்-3/4, பரங்கிச்சக்கை பலம்-3/4, அன்னபேதி

காயம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம் கூகைநீர் வகைக்குப் பலம்-½, குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, பச்சைகற்பூரம் அபினி வகைக்குக் கழஞ்சு-2 ஆவின்பாலில் ஊரவைத்த தேற்றான்விரை பலம்-¼, சீந்தில் சர்க்கரை பலம்-3/4 எல்லாவற்றையும் சூரணித்துக் கொண்டு மேற்படி பாகில் சிறுகச் சிறுகப்போட்டு மருந்துக்குத் தகுந்த நெய்யைச் சிறுகச்சிறுக விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றி காலே ½-படி தேன்விட்டுப் பிசைந்து பீங்கானில் வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் சாப்பிட்டுவர மேகத்தாலடுத்த சகல ரோகமும் அஸ்தி, சுரம் காங்கை. சீதம், இரத்தம்விழுதல், வாய்வு, பாண்டு. சோகை, காமாலை முதலான சகல ரோகங்களும் தீரும் 20-அல்லது 40-நாள் சாப்பிடவும் இச்சாப்பத்தியம்.

வயிறுப்பல் மந்தத்திற்கு

உப்பை வருத்துக்கொட்டிய ஒரு சட்டியில் 5-விராகனிடை வேளைப்பூண்டைப்போட்டு வருத்து சிவக்கும்போது 2½-விராகனிடை, ஓமத்தைச்சேர்த்து வருத்து ½-படி, ஜலம் விட்டுக் ¼-படியாக வற்றக்காய்ச்சி அதில் ¼-விராகனிடை பெருங்காயத்தைச் சேர்த்து 2-3-பாலடைவீதம் கொடுத்து வர குணமாகும் இச்சாபத்தியம்.

கூழ்பாண்ட லேகியம்

கலியாண பூசினிச்சார்	படி	1
தாழை விழுதுச்சார்	,,	½
தென்னம்பூ இடித்தச்சார்	,,	½
எலுமிச்சம் பழச்சார்	,,	½
பசும்பால்	,,	½
சர்க்கரை	பலம்	5

இவையாவும் ஒன்றுசேர்த்து சர்க்கரையிட்டுப் பாகுசெய்து.

சீரகம்	ஏலம்
கொத்தமல்லி	ஜாதிக்காய்
கோஷ்டம்	ஜாபத்திரி
மிளகு	அதிமதுரம்
மாசிக்காய்	தாளிசபத்திரி

வகைக்கு ¼-பலம், நிறுத்தெடுத்துச் சூரணித்துத் தூவி நெய் ½-படி விட்டு கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி தேன் ½-படி விட்டுப்பிசைந்து பீங்கானில் வைத்துக்கொண்டு 20-அல்லது 40-நாள் புன்னக்காய்வீதம் இருவேளையுஞ் சாப்பிட்டுவர சோகை, அஸ்திசுரம், அஸ்திவெட்டை பிரமியம் வெள்ளை விழுதல், நீர்சுருக்கு, உஷ்ணரோகங்கள் தீரும் தேகம் புஷ்டிக்கும், விந்தூறும், பத்தியம் புளி, புகையிலை தள்ளவும்.

சிரங்குகள் ஆர

சந்தணம் நீர்வெடிமுத்து வகைக்கு 5-விராகனிடை சேர்த்து ஜலம்விட்டு அரைத்து சிரங்குகளின்மீது பூசிவர குணமாகும்.

தொப்புள் புண்ணுக்கு

வருத்த சீனாகாரத்தைக் கொண்டுவந்து பொடித்து தொப்புளின்மேல் போட்டுவர குணமாகும்.

வில்வாதி லேகியம்

வில்வவேர் பலம்-1, வில்வப்பழம் பலம்-5, இடித்து 2-படி ஜலத்திற்போட்டு ½-படியாய் வற்றக் காய்ச்சிய கியாழத்தில் வெல்லம் பலம்-2, கரைத்துக் காய்ச்சி பாகுசெய்து அதில்,

திப்பிலிமூலம்	வாலுளவை
சித்திரமூலம்	சடாமாஞ்சில்

செவ்வியம்	அதிவிடையம்
கூகைநீர்	இந்துப்பு

வகைக்கு பலம்-½, குங்குமப்பூ. கிராம்பு, ஜாபத்திரி, ஜாதிக்காய், கோரோசனை வகைக்கு விராகனெடை-½, வெதுப்பி பொடித்துத்தூவி போதுமான நெய்விட்டு மெழுகு பதமாகக் கிண்டி இறக்கி 1-பலம் தேன்விட்டு பிசைந்து பீங்கானில் வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு கொட்டைப் பாக்குப் பிரமாணம் இருவேளையுஞ் சாப்பிட்டுவர குன்மம், சத்தி விக்கல், நெஞ்சுவலி, அரோசிகம், மூக்கு நீர்ப்பாய்ச்சல், குலை எரிவு, காமாலை, கிராணி இருமல், வயிற்றுவலி, கிருமி, மூலம் முதலானதுந்தீரும் இச்சாப்பத்தியம்.

வயிற்றுப்பளுக்கு

நுணையிலை	பிடி	1
ஓமம்	விராகனிடை	2
மிளகு	,,	2
சுக்கு	,,	2
வேப்பிலை	,,	2

இவைகளில் நுணையிலையும் வேப்பிலையும் சட்டியிற் போட்டுவருத்து சிவக்கும்போது மற்றவைகளையும் பொடித்துப் போட்டு ஒருபடி ஜலம் விட்டுக் கால்படியாக வற்றக் காய்ச்சி வடித்து அதில் நாலுபாலடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

பித்த யெரிச்சலுக்கு லேகியம்

லவுங்கம்	பேதானு
ஏலம்	சாலாமிசிரி
ஜாதிக்காய்	சீரகம்
ஜாபத்திரி	கொத்தமல்லி

தாளிச்சபத்திரி	சோம்பு
லவங்கப்பட்டை	சர்க்கரை
சீமை அத்திப்பழம்	பரங்கிச்சக்கை
அமுக்கிலங்கிழங்கு	திரிகடுகு
நிலப்பனங்கிழங்கு	திரிபலாதி
தண்ணிமுட்டான் கிழங்கு	விளாம்பழம்
	திராக்ஷப்பழம்
விழலரிசி	முந்திரிப்பழம்
எலுமிச்சம் விரை	பேரீச்சன்பழம்

ஷை தினுசுகள் வகைக்குப் பலம்-1,

இஞ்சி ரசம்	பலம்	10
எலுமிச்சம்பழரசம்	,,	10
புளிப்பு மாதுளம்பழரசம்	,,	10
இளநீர்	,,	10
நாட்டுச்சர்க்கரை	வீசை	3/4
தேன்	பலம்	10
நெய்	,,	10
பசும்பால்	படி	1

மேற்கூறிய தினுசுகளில் பழவர்க்கம் தவிர, மற்றவை களை இளம்வருப்பாக வருத்துச் சூரணித்து வைத்துகொண்டு பழம், பால், ரசம், முதலியதுகளில் சர்க்கரைச்சேர்த்து பாகு செய்து அதில்சூரணத்தைக்கொட்டி அடிபிடிக்காமல் கிண்டி நெய்யைவிட்டு இரக்கி தேன் விட்டுகிளரி பத்திரப்படுத்தவும் வேளைக்கு கழற்சிக்காய்ப் பிரமாணம் இருவேளையும் சாப் பிட்டுவரவும். பத்தியம் புகை, கள்ளு, சாராயம், சம்போகம், அன்னிய பதார்த்தம், கடுகு, நல்லெண்ணெய் நீக்கி இச்சாப் பத்தியமாக 40-நாள் சாப்பிடவும். பித்தயெரிவு குலையெரிவு, பித்தவாய்வு, மேகவாய்வு, மேககாரிகம் இவையாவும் தீரும்.

வயிற்றில் எண்ணை தங்கினால்

வெந்தயமும் ஜலமும் சேர்த்து கஷாயமிட்டுக் கொடுக்கத்தீரும் அல்லது நாயுருவிவேரும் ஜலமும்சேர்த்து கஷாயமிட்டுக்கொடுக்கத்தீரும் அல்லது ஆமணக்குவேரும் ஜலமும் சேர்த்துக்கொடுக்க யெண்ணெய் கழியும் ஒரு விராகனிடை வேருக்கு ½-படி ஜலம்வைத்துக் கஷாயமிட வேண்டும்.

மகா கரிசாலை லேகியம்

மஞ்சள் கரிசலாங்கண்ணி கிடைக்காவிட்டால் சாதாரண கரிசலாங்கண்ணிச்சார் 2-படி, நெரிஞ்சிச்சார் 2-படி சிறு கீரைச்சார் 1-படி, பொடுதலைச்சார் 1-படி, கீழாநெல்லிச்சார் 1-படி, யாவும் ஒரு பாண்டத்தில் விட்டு வைத்துக்கொண்டு

நாகப்பட்டை	பலம்	1
கருங்காலிப்பட்டை	,,	1
அத்திப்பட்டை	,,	1
தென்னம்பூ	,,	1
மஞ்சள்	,,	1

இவைகளை எடுத்து 8-படி ஜலத்தில் நருக்கிப்போட்டு 1-படியாகக் கியாழம் வடித்து மேற்படி ரசங்களுடன் விட்டு மிளகு, மிளகருணை, அவுரி, சிற்றரமுட்டி, பேரரமுட்டி விலாமிச்சன்வேர் வகைக்கு 3-பலம் நிறுத்தெடுத்து இடித்து 8-படி ஜலத்தில் போட்டு ½-படி கியாழம் வடித்து முன் சாற்றோடு விட்டுக்கொண்டு அதில் பசும்பால் 4-படி விட்டு பனைவெல்லம் பலம்-8 நல்லவெல்லம் பலம்-8 போட்டுக் கரைத்து அடுப்பேற்றி பாகுசெய்து அதில்,

சீரகம்	கோஷ்டம்
ஏலம்	அக்கிராகாரம்
கிராம்பு	அதிமதுரம்

சுக்கு	தாளிச்சப்பத்திரி
ஜாதிக்காய்	மிளகு
ஜாபத்திரி	திப்பிலி
ஓமம்	கடுக்காய்
குரோசனிஓமம்	நெல்லிக்காய்
சிறுநாகப்பூ	தான்றிக்காய்
கடுக்காய்ப்பூ	

வகைக்குப் பலம் ஒன்றாக எடுத்துச் சூரணித்து மேற் படி பாகில் போட்டுக்கிளரும்போது திரிலோகச் செந்தூரம் ½-பலம் மாண்டூரச் செந்தூரம் 1-பலம் போட்டு பசுநெய் ½-வீசை விட்டுக்கிளரி இரக்கி தேன் வீசை ½-விட்டு கைவி டாமல் கிளரி விரை நீக்கிய திராக்ஷப்பழம் 5-பலம் சேர்த்து கிளரி கோப்பையில் வைத்துக்கொண்டு காலை மாலை நெல் லிக்காய் வீதம் ஒருமண்டலம் சாப்பிடவும். வியாதிக்குத் தகுந்த வாறு மருந்தைக் குறைத்துக் கொள்ளவும் பால் நெய் மோர், வெள்ளாட்டிரைச்சி முதலியது விசேஷமாக கொள்ள வும். இச்சாப்பத்தியம். சகலவிதமான பாண்டுரோகம், பித்த சம்பந்தத் தாலுண்டாகும் சகல ரோகங்களும், காந்தல், எரிவு, வாந்தி, மயக்கம், நீர்சுரப்பு, வீக்கம், சகலவிதமான இராணி க்ஷயரோகம் யாவும் நீங்கும். இந்த லேகியத்தின் மகிமையைச் சொல்லமுடியாது, பித்தசம்பந்தமான பாண்டு, காமாலை முத லிய ரோகங்களுக்கு இதைக் காட்டிலும் விசேஷப்பட்ட அவுஷதம் கிடையாது. இந்த லேகியம் சாப்பிடும்போது அமுக்கனங் கிழங்குத் தைலம் ஸ்நானஞ் செய்துவர நல்லது.

பால் உண்ணுவிடில்

அதிமதுரத்தை மூலைப்பாலில் உரைத்து மூலைக்காம்பிற் குத்தடவி குழந்தைவாயில் வைத்துக் குடிக்கச் செய்விக்க பால் குடிக்கும்.

குடித்தபாலைக் கக்கிஞல்

வெள்ளைப்பூண்டும் ஓமமும் வகைக்கு விராகனிடை 1 சேர்த்து ஆழாக்கு ஜலம்வைத்து அரையாழாக்காய் கஷாய மிட்டு ஒருபாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

சித்தர் வல்லாதி லேகியம்

பால்வுள்ள செங்கொட்டைகள் 100-எடுத்து மூக்கை வெட்டி சாணியில் கொதிப்பித்து சுத்திசெய்து அதைக்குழித் தைலம் இறக்கி 3½-பலம் தைலம் நிறுத்தெடுத்துக்கொண்டு ஜலத்தில் ஊரவைத்து மேல்தோல் போக்கின வள்ளு 5-பலம் எடுந்துக் கல்லுரலில் போட்டு அதனுடன் நல்லவெல்லம் 5-பலம் போட்டுநன்முயிடித்து சுத்திசெய்த கந்தகம் பலம் 2 சூடம்பலம்-1, இவைகள் இரண்டையும் கல்வத்திலிட்டுநன் முய் மடியும்படி அறைத்துக் கருப்புத் தூளானதை எடுத்து உரலிலிருக்கும் மருந்துடன் போட்டு முன் எடுத்த 3½-பலம் தைலமும் அதில் விட்டு ஒருநாள் முழுதும் யிடித்து மெழுகு போலானவுடன் எடுத்துப் பீங்கான் கோப்பையில் பத்திரப் படுத்தவும் ஒருவேளைக்கு மணிப்புங்கன் விரைப் பிரமாண மாக காலை மாலை இருவேளையும் 11-நாள் சாப்பிடவும் யாதொரு பத்தியமும் கிடையாது. கடுகு, நல்லெண்ணெய் யாவற்றும் ஆகும். ஆனல் இச்சாப்பத்தியம் இருந்தாலும் நல்லது. தயிர், மோர், நெய், ஆட்டிரைச்சி விசேஷமாய்ச் சேர்த்துக் கொள்ளவும்.

தீரும் வியாதிகள்

கண்டமாலை, கொருக்கு, லிங்கப்புற்று, யோனிப்புற்று, இரணங்கள், கிரந்தி, மேகப்படை, குட்டத்தடிப்பு, ஆசனப் பவுத்திரம், கொடி பவுத்திரம், மூலம், சீழ்மூலம், 21-வித மேகமும்தீரும். 11-நாள் ஆனபிறகு நல்லெண்ணெய் தேய்த்து தலைமுழுகவும் ஒரு சமயம் திரேகத்தில் நமைச்சல் கண்டா

லும் ஊதலானலும் இரண்டு கப்பத்தேங்காயைத் திரிகி பால் எடுத்து அந்தப்பாலில் 2-எலுமிச்சம்பழம் சார்பிழிந்து சிரசு முதல் திரேகமெல்லாம் பூசி நன்றாய்த் தேய்த்து ஊறிய பிறகு வென்னீரில் குளிக்கவும்.

சாம்பல் மண்தின்னல் அதற்கு

கத்திரிக்காயை சார்பிழிந்து அதில் பெருங்காயம் சிருபய ளவு உரைத்து ஒரு பாலடை கொடுக்கக் குணமாகும் அல்லது முள்ளங்கிச்சாற்றில் மேற்சொன்னபடி பெருங்காயத்தை உரைத்து ஒருபாலடை கொடுத்துவர சாம்பல் மண்கழியும் குணமாகும்.

சுக்கு லேகியம்

சுக்கு பலம்-25. இரண்டரைபடி தண்ணீரிலிட்டு எட்டுக்கு ஒருபங்காய்க் கியாழம் வடித்து பனைவெல்லம் பலம்-2½, ஓமம் ¼-படி, கரிவேப்பிலை பலம் ½ நெய் ½-படி இவைகளை லேகியமாய்க் கிளரி புன்னைக்காயளவு சாப்பிட கிராணி, மூலம், வாய்வு, கடுப்பு, இரத்தம், வீக்கம், புளியேப்பம் இவைகள் யாவும் தீரும்.

கால்கடுவனுக்கும் மண்டைக்கடுவனுக்கும்

ஆமணக்கெண்ணெய்	படி	¼
வசம்பு விராகனிடை		5
சதுரக்கள்ளிப்பட்டை	,,	5
வெங்காயம்	,,	5
இலுப்பைப்பட்டை	,,	5
பாலப்பட்டை	,,	5

இதை ஜலம்விட்டரைத்து வடி யெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு ஒருபாலடை வீதம் இரண்டுநாள் கொடுக்கக் குணமாகும் இச்சாபத்தியம்.

சீதபேதிக்கு

வில்வப்பழத்து ஓடு சதையுடன் உலர்ந்ததை நொரிக்கி ஜலத்தில்போட்டு காய்ச்சின கஷாயத்தில் ஒரு அவுன்சு வீதம் கொடுத்துவர குணமாகும்.

மிளகு லேகியம்

மிளகு பலம்-25, இரண்டரைபடி தண்ணீரில் கியாழம் வைத்து எட்டுக்கொன்றுய்காய்ச்சி கற்கண்டு பலம் 2½, அக்கிராகாரம், சீரகம், கிராம்பு, ஏலம், கோஷ்டம், அதிமதுரம், சிறுதேக்கு, வாய்விளங்கம், நறுக்குமூலம், வகைக்கு ½-பல மாக எடுத்து சூரணித்து நெய் காலாழாக்கு, தேன் அரிக்கா லாழாக்கு, மேற்படி கியாழத்தில் சூரணத்தைக் கொட்டி நெய் தேன் முதலானதும் விட்டு லேகியமாய்க்கிண்டி கழற் சிக்காய் வீதம் சாப்பிட சிலேத்துமம், கபங்கள், நீர் தோஷம் மூன்றுவித சுரமும் வாதமூந்நீரும்.

கிரந்தி ஒன்பதிற்கும்

செம்பரித்தியெண்ணை, செம்பரித்திச்சாறு. தேங்காய்ப் பால், ஆமணக்கெண்ணை வகைக்குப்படி-1 சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சுத்திசெய்த ரசகர்ப் பூரம் வகைக்கு விராகனிடை 1, சேர்த்து ½ தேங்காய்ப் பாலிலரைத்து எண்ணையிற்கறைத்து அடுப்பேற்றி பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு ஒரு விராகனிடை வீதம் கொடுத்துவர குணமாகும் ஆலிலிந்தயெண்ணை சூலை 18-க்கும் கொடுக்கலாம். இச்சாப்பத்தியம்.

திப்பிலி லேகியம்

திப்பிலி பலம்-25, இடித்து 2½-படி ஜலத்தில் கியாழ மிட்டு எட்டுக்கு ஒன்றுய்யிரக்கி கற்கண்டு 2½-பலம் சுக்கு

கடுக்காய், அக்கிராகாரம், அரத்தை, ஓமம், சீரகம், தனியா வெட்பாலரிசி, செண்பகப்பூ, கோஷ்டம், வகைக்குப் பலம் 1 தேன் உழுக்கு நெய் ஆழாக்கு எல்லாம் நெய்யாழத்திலிட்டு லேகியமாய்க்கிண்டி கழற்சிக்காய் பிரமாணம் சாப்பிட சிலேத்பனம் வாயு இருமல், உப்பிசந்தீரும்.

தோஷம் 9-க்கும் மாத்திரை

மஞ்சள்	முத்தக்காசு
வசம்பு	தேவதாரம்
அதிமதுரம்	கடுக்காய்

வகைக்கு விராகனிடை-2, சூரணித்து பொடுதலைச் சாற்றுலரைத்து பரித்திவிதை அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி வைத்துக்கொள்ளவும். ஒரு மாத்திரைவீதம் தேனி லாவது முலைப்பாலிலாவது உரைத்துக் கொடுக்க குணமா கும், இச்சாபத்தியம்.

மதனகாமேசுர லேகியம்

சுக்கு	பெருஞ்சீரகம்
கிராம்பு	அதிமதுரம்
திப்பிலி	ஏலம்
லவங்கப்பட்டை	கசகசா
கொத்தமல்லி	முள்வேலம்பிசினி
அமுக்கரு	அபினி
தக்கோலம்	வாள்மிளகு
உளுந்து	திரிபலாதி
திராட்சை	ஜாபத்திரி
மிளகு	கோஷ்டம்
சிறுநாகப்பூ	கருஞ்சீரகம்
ஜாதிக்காய்	கஸ்தூரிமஞ்சள்

லவங்கப்பத்திரி	நீர்முள்ளிவித்து
தாளிச்சப்பத்திரி	நிலப்பனங்கிழங்கு
செண்பகப்பூ	

வகைக்கு ½-பலம் எடுத்து வருக்கவேண்டிய தினுசு களை வருத்துச் சூரணஞ் செய்துக்கொண்டு இதற்குச் சரியெ டையாய் கஞ்சாவை நிறுத்தெடுத்து நல்ல ஜலத்தில் 7-தரம் கழுவி காம்பு விரைநீக்கி சுத்தஞ்செய்து 2-படி நல்ல ஜலத் தில் ½-படி பசுநெய்விட்டு அ தி ல் கஞ்சாவைப்போட்டு நன்றாய்க் காய்ச்சி கிட்டி கட்டி நெய்யை அயச்சட்டியில் பிழிந்துக்கொண்டு மற்ற நெய்யையும் நன்றாய் வழித்தெடுத் துக்கொண்டு பசும்பால் உழக்கு சர்க்கரை பலம்-30 ஒன்றாய் விட்டு அடுப்பேற்றி பாகு பதத்தில் சூரணங்களைக்கொட்டி நெய்யைவிட்டு வெந்த சமயத்தில் 8-பலம் தேன்விட்டுப் பதமாய்க்கிளரி இறக்கவும். இரவில் போஜனம் செய்த பிறகு ஒரு களஞ்சி முதல் 3-களஞ்சி வரையில் தேகதிடப்படி புசிக்கவும் உடனே ஆழாக்கு பசும்பால் சாப்பிடவும் வீரிய மதிகரித்து சரீரம் சிவந்து, நேத்திரம் பிரகாசம்தந்து நரை திறையை மாற்றிவைக்கும் யோக அப்பியாசிகளுக்கு வாசி யோடிசன் மருவி நின்று மும்மண்டலமும் தாண்டி ஆனந்த கேசரியில் அறிவுண்டாய் கேசரியைக் காட்டிவைக்கும் உல கோர்க்கு ஈளை. இருமல், அக்கினிமந்தம் சூலை, பழயசுரம் வீக் கம், க்ஷயங்கள் 12ம் தீருமென ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

சுரத்திற்கு

கீழ்க்காநெல்லிச்சாறு பாதரிவேர்ச்சார் இவைகள் வகை க்கு அரிக்கால் அவுன்சு சேர்த்து முலைப்பால் கால் அவுன்சு சேர்த்துச் கொடுத்துவர சுரம் நிவர்த்தியாகும்.

வைத்திய ஆசான்	1-8-0
இல்லற வைத்தியம்	1-8-0

செங்கிரந்தி

முருங்கையிலைச்சாற்றை முரித்து ஒருபாலடை கொடுக்க குணமாகும் அல்லது முலைப்பாலில் கோரோஜனையை 2-3- உரை வுரைத்துக் கொடுக்க குணமாகும் இச்சாபத்தியம்.

மன்மத சிந்தாமணி லேகியம்

பூமிசர்க்கரைக்கிழங்கு	தோலா	10
அமுக்கரு	,,	2
பூனைக்காலிவிரை	,,	2
நீர்முள்ளிவிரை	,,	2
தூத்திவேர்	,,	1
சிறுநாகப்பூ	,,	1
ஜாதிக்காய்	,,	1
ஜாபத்திரி	,,	1
குலாப்புசின்னி	,,	1
சீமைதண்ணிமுட்டாங்கிழங்கு	,,	1
வெள்ளைகுன்றிமணிபருப்பு	,,	1
லவங்கம்	,,	1
லவங்கப்பட்டை	,,	1
ஏலரிசி	,,	1
வேலம்பிசின்	,,	1
இலவம்பிசினி	,,	1
வால்மிளகு	,,	1
வெந்தயம்	,,	1
சாலேமிசிரி	,,	1
சீயாமுசலி	,,	1
ருமஸ்தகி	,,	2
சாம்பிராணி	,,	1

இவைகளைச் சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு நல்ல தேனைக் காய்ச்சி அழுக்கு நீக்கி மேற் சூரணத்திலிட்டுப் பிசைந்து குங்குமப்பூ விராகனிடை–1 மேற் தேனில் இழைத்து நன்றாய்ப் பிசைந்து பத்திரப்படுத்தவும். காலை மாலை இரு வேளையும் இலந்தங்காய்ப் பிரமாணஞ் சாப்பிட்டு உடனே ஆழாக்கு பசும்பால் சாப்பிடவும். இப்படி 40–நாள் தின்று வர தாது விர்த்தியாகும் லாகிரி கட்டாயம் நீக்கவும்.

கருங்கிரந்திக்கு

ஆமணக்கெண்ணை, கருங்கழுதையிலைச்சாறு அவுரியிலை சாறு இவைகள் வகைக்குப் படி–½ சேர்த்து அதில் வசம்பு வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை–1, பொடித்துப் போட்டு அடுப்பேற்றி யெரித்து வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

கூழ்ப்பாண்ட லேகியம் (யூநானி)

ஒரு கல்யாண பூசினிக்காயின் மேல்தோலும் விரையும் நடுசோற்றையும் நீக்கிவிட்டு மற்றதை சிறு துண்டுகளாக்கி 1½–படி ஜலம்விட்டு வேகவைத்து, ஜலம் வடித்துக்கொண்டு தண்ணீரும் சதையுமிடைக்கு இரண்டிடை சர்க்கரைகூட்டி பாகு எடுத்து சதையைக் கடைந்திட்டு,

தர்ப்பூஸ் விரை பருப்பு	தோலா	4
பூனைக்காலி விரை	,,	2
லால்முசிலி	,,	1
சபேத்முசிலி	,,	1
குஸ்சேது சாலம்	,,	2
வேலன்கோந்து	,,	2
முருங்கப்பிசின்	,,	2
வெங்காய விரை	,,	1

சல்கம் விரை	தோலா	1
நீர்முள்ளி விரை	,,	1
சிறுநாகப்பூ	,,	1
தூதரிசுருக்	,,	1
தூதரிசுபேத்	,,	1
லவங்கப்பட்டை	,,	1

இவைகளைச் சூரணமிட்டுக்கிளரி வேளைக்கு ½-தோலா வீதம் இருவேளையும் சாப்பிட வெப்பந்தணிந்து தேகந்தணியும், தாதுபுஷ்டி யுண்டாகும், அதிகநாள் வைத்திருக்க வேண்டுமானால், நெய், தேன் கூடசேர்க்கவும், மீன், கருவாடு, புளி நீக்கவும்.

செரியா மாந்தத்திற்கு

வசம்பு	மிளகு
சடாமாஞ்சில்	வெள்ளைப்பூண்டு
ஓமம்	கருஞ்சீரகம்
சுக்கு	ஆமையோடு

இவைகள் வகைக்கு விராகனிடை-1 சேர்த்து நொரிக்கி அரைபடி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக் கஷாயஞ் செய்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர செரியாமாந்தம் குணமாகும்.

சீரக லேகியம்

சுத்திசெய்த சீரகம் பலம்-5, பழரசம், கரும்புரசம், அப்புக்கோவை ரசம், கையாந்தகரை ரசம், தும்பைரசம், இவைகளில் ஒவ்வொரு நாள் ஊரவைத்து உலர்த்திச் சூரணஞ் செய்து ஜாதிக்காய், ஜாபத்திரி, வால்மிளகு, வகைக்குபலம்-1 சுக்கு, மிளகு, நாட்டுக்கல்நார் வகைக்குப் பலம்-½, சூரணஞ் செய்து புதுசட்டியில் பசும்பால் ½-படி, வெள்ளை சர்க்கரை பலம்-3½, இட்டுப் பாகுசெய்து சூரணங்களைக்கொட்டி கிளரி

நெய் பலம்.10 தேன் பலம்-10 விட்டுக்கிண்டி பதமா யிறக்கி புன்னைக்காயளவாக மண்டலங்கொள்ள சகல பித்தமும் நீங்கி பித்தத்தால் வெளுத்த ரோமமும் கறுத்து, சரீர ஆரோக்கிய மும் உண்டாகும், பத்தியம்: சம்போகம். கடுகு, எள்ளெண் ணெய், கிரந்தி பதார்த்தங்களும் நீக்கவும்.

வயிற்றுப் பொருமல் மாந்தத்திற்கு

குப்பைமேனி வேர்ப்பட்டை பலம்-4, வருத்த ஓமம் விராகனிடை-2, இவைகளை அரைபடி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி கஷாயமாக்கி வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும், இச்சாப்பத்தியம்.

சுழிமாந்தத்திற்கு

இன்டின்சாறு, வெங்காயச்சாறு, ஆமணக் கெண்ணை வகைக்கு 2-அவுன்சு சேர்த்துயெறித்து வடித்து 1-பாலடை வீதம் கொடுத்துவரக் குணமாகும்.

மாந்த வலிப்புக்கு

குப்பைமேனிச்சாறு முடக்கத்தான் யிலைச்சாறு மூக் கரச்சாரணைச் சமூலச்சாறு வகைக்கு 1-அவுன்சு, ஆமணக் கெண்ணெய் அவுன்சு-1, கூடச்சேர்த்து அடுப்பேற்றிகாய்ச்சி வடித்து ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும் இச்சாப்பத்தியம்,

பூரணுதி லேகியம்

ஜாதிக்காய்	பலம்	1½
கசகசா	,,	2
பாதுமைப்பருப்பு	,,	2½
சாரப்பருப்பு	,,	2½
முந்திரிப்பருப்பு	,,	2½
தாளிச்சபத்திரி	நன்னாரிவேர்	

கொத்தமல்லி	வெட்டிவேர்
லவங்கப்பட்டை	நிலப்பனங்கிழங்கு
சன்னராஷ்டம்	சடாமாஞ்சில்
பெருலவங்கப்பட்டை	நீர்முள்ளிவித்து
ஆனைத்திப்பிலி	அத்திவித்து
வால்மிளகு	ஆலம்விழுது
சீரகம்	தாலம்காளு
கடுக்காய்	சுபேத்துமுசலி
அதிமதுரம்	ஜாபத்திரி
சோம்பு	சம்சாவித்து
கோஷ்டம்	வெள்ளரிவித்து
சுக்கு	பூனைக்காலிவித்து
விலாமிச்சன்வேர்	அரசன்வித்து

ஷை தினுசுகள் 1-க்கு பலம் 1-விகிதம் இதில் கண்ட பருப்புதினுசுகளை நீக்கி மற்றவைகளை ரவியி லுலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ் செய்து 2½-பலம் கஞ்சாவை மெல்லிய சீலையில் முடிந்து இரண்டு படி ஆவின்பாலில் போட்டு நன்றாக காய்ச்சி புரைகுத்தி மறுநாள் கடைந்து வெண்ணை எடுத்து அவ்வெண்ணையை அயச்சட்டியிலிட்டு உருக்கி அதில் ஷை சூரணத்தை கொஞ்சங் கொஞ்சமாகத் தூவிக் கிளரி வருகையில் கற்கண்டு பலம்-10 சேர்த்து நன்றாகக் கிளரி திராட்சை பழம் பலம்-5, ஷைபருப்பு தினுசுகளையும்போட்டு உறவாடி தேன் கொள்ளும் அளவில் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் கிண்டி பாகுபதத்தில் லேகியம் முதிராமல் போதுமான பதத்தில் இரக்கி கிளாஸ் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு 20-அல்லது 40-நாள் காலை மாலை புசிக்க மேகத்தாற் சேர்ந்த சகல வியாதிகளையுங் கண்டிப்பதுடன் நரம்புகள் நன்றாக முறுக்கேரி லேசில் கட்டுவிடாது லேகியம் சாப்பிடும்போது பெண் மயக்கம் லாகிரி வஸ்துக்கள் கூடாது.

மாந்தம் 8-க்கும் விபரம்

மேற்சொல்லிய 8-வித மாந்தரோகங்கள் தவிர வயருப் பினல் உப்புமாந்தம்யென்றும், மலங்கட்டினல் கட்டுமாந்த மென்றும், கண்சொரிகினல் சொரிகிமாந்தம் யென்றும் வாத மதிகமானல் வாதமாந்தமென்றும் பித்தமதிகரித்தால் பித்த மாந்தமென்றும், சிலேஷ்ம மாந்தமென்றும், இழுப்புமாந்த மென்றும், சன்னிமாந்தமென்றும், பலவாராக சொல்லுவார் கள் ஆகையால் ரோகங்களின் லக்ஷணங்களை அறிந்து மருந்து களைச் சேர்த்து கொடுக்கவேண்டியது, மேற்கூறிய மாந்தங் களுக்கு இச்சாப்பத்தியம்.

கோரோஜனை மெழுகு

லிங்கம்	விராகனிடை	2½
பூரம்	,,	2½
வாளம்	,,	2½
லவங்கம்	,,	2½
வீரம்	,,	1
கோரோசனம்	,,	1
கரிமஞ்சள்	,,	1
ஏலரிசி	,,	1
சுக்கு	,,	1

இதில் சுத்திசெய்யவேண்டியதை சுத்திசெய்து சூரணிக்க வேண்டியதைச் சூரணித்து யாவுங்கலந்து கல்வத்திலிட்டு 10-பலம் பனைவெல்லங்கூட்டி அரைத்தெடுக்கவும் கருப்பங் கட்டியில் உளுந்துபிரமாணம் சாப்பிட இரைப்பு, உட்பிசம் வீக்கம், சகலமான வாய்வுந் தீரும் இச்சாப்பத்தியம்.

தலைமாந்தத்திற்கு

வெள்ளெருகு, வெதுப்படக்கி, வேலிப்பரித்தி, பெருந் தும்பை இவைகளின்சாறு வகைக்கு அவுன்சு-1, சேர்த்து

அதில் திப்பிலி, வசம்பு, பூண்டு, சதகுப்பை. தேசாவரம் வகைக்கு ½–அவுன்சு, சேர்த்தரைத்து சாற்றில் கலக்கி ஒரு பாலடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

வாதமாருத மெழுகு

பரங்கிச்சக்கை	பலம்	4
கடுக்காய்தோல்	,,	4
திரிகடுகு	,,	2
சித்துழாப்பட்டை	,,	2
சித்திரமூலப்பட்டை	,,	2
கசகசா	,,	1
கார்போக அரிசி	,,	½
விழலரிசி	,,	½
வெப்பாலரிசி	,,	½
ஜாதிக்காய்	,,	¼
ஜாபத்திரி	,,	¼
ஏலம்	,,	¼
லவங்கம்	,,	¼
சித்தரத்தை	,,	¼
வால்மிளகு	,,	¼
அதிமதுரம்	,,	¼

இவைகளைச் சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு

கோரோசனம்	பலம்	¼
குங்குமப்பூ	,,	¼
தாளகம் சுத்தி	,,	1
வீரம்	,,	1
லிங்கம் சுத்தி	,,	1
பூரம்	,,	¼
ரசச்செந்தூரம்	,,	¼

இவைகளைத் தூள்செய்து மேற்படி சூரணத்துடன் கலந்துக்கொண்டு திரிபலாதி கியாழத்தினுல் 4-ஜாமம் அரைத்துலர்த்தி தேன் விட்டு மூன்று ஜாமம் அரைத்து வைத்துக் கொள்ளவும் மிளகு பிரமாணம் பனவெள்ளத்தில் வைத்து இருவேளையும் சாப்பிட முடக்கு வாதம், சூலை, பாண்டுவலி மேகவாய்வு, மண்டை வாய்வு, சூதக வாய்வு. முசல்வாய்வு, மூர்ச்சைவாய்வு. பித்தவாய்வு. பார்சவாய்வு. அற்புதவாய்வு. திமிர்வாய்வு. முதலிய சகல வாய்வு ரோகங்களுந் தீரும். புளி நீக்கவும் வெள்ளாட்டு வத்தல் நெய் சேர்த்துக்கொள்ளவும்.

விஷமாந்தத்திற்கு

நுணைவேர்	வராகனிடை	1
நொச்சிவேர்	,,	1
வேளைவேர்	,,	1
ஓமம்	,,	1
பொடுதலை	,,	1
வெள்ளைப்பூண்டு	,,	1
வசம்பு	,,	1

இவைகளை ஒன்று சேர்த்து நொரிக்கி வெதுப்பி உழக்கு ஜலம் வைத்து அதில்போட்டு ஆழாக்காய் வற்றக்காய்ச்சி வடித்து ஒரு பாலடை வீதம் கொடுக்கக் குணமாகும்.

மூசாம்பர மெழுகு

உயர்ந்தமூசாம்பரம்	தோலா	8
சடாமாஞ்சில்	,,	¼
அசாருன்	,,	¼
லவங்கம்	,,	¼
பெருலவங்கப்பட்டை	,,	¼
ருமஸ்தகி	,,	¼
குங்குமப்பூ	,,	¼

மிளகு	தோலா	¼
கஸ்தூரி	விராகனிடை	¼
தேன்	பலம்	6

முதலாவது தேனைக்காய்ச்சி அழுக்குநீக்கி சுத்தஞ்செய்து டி மருந்துகளைத் தனித்தனியாக யிடித்து வஸ்திரகாயஞ் செய்து நிறுத்தெடுத்து தேனிலிட்டு யாவும் ஒன்றுபட நன் ருய்க் கல்வத்திலிட்டு அரைத்து பத்திரப்படுத்தவும் 3-4 குன்றி யிடை சாப்பிட்டுவர வலி, காக்கைவலி. பின்கோணல், வாய் கோணல், பாரிசவாய்வு, முடக்கல், ஜன்னி இவைகள்தீரும். வாதம், ஜன்னிகளுக்கிசைந்தவாறு பத்தியம் வைக்கவும். மலம் உதையும் இதை வாதப்பிடிப்பு, வாயுவினல் சரீரத்தில் குத்தல் முதலிய இடங்களில் ஜலத்தில் குழைத்துத் தடவிக் காய்ச்ச நீங்கும்.

நீர்மாந்தத்திற்கு

மூக்கரட்டை வெங்காயம் இவைகளின்சாறு ⅛-படி ஆமணக்கெண்ணெய் ⅛-படி சேர்த்துக்காய்ச்சி வடித்து ஒரு பாலடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

கஸ்தூரி மெழுகு

கஸ்தூரி	விராகனிடை	1
பச்சைக்கற்பூரம்	,,	2
புனுகு	,,	¼
ஜவ்வாது	,,	½
கோரோசனை	,,	4
குங்குமப்பூ	,,	4
பூநீக்கியலவங்கம்	,,	4
வால்மிளகு	,,	4
ஏலரிசி	,,	8
சிறுலவங்கப்பட்டை	,,	8

சகலமும் கல்வத்திலிட்டு கற்பூரவாசனை வெற்றிலை ரசத்தாலும், கற்பூரவல்லி ரசத்தாலும், தூதுவேளை ரசத்தாலும், மட்டிநீக்கிய இஞ்சி ரசத்தாலும், மிளகு கியாழத்தாலும், தனித்தனியாக ஒவ்வோர் ஜாமம் அரைத்து நிழலிலுலர்த்தி சுயத் தேனில் மெழுகு பதமாயரைத்து பயறு பிரமாணம் தேனில் சாப்பிட ஜன்னி, சீதளம், சுரம், கபரோகம், உப்பிசமாந்தம், மூகவாத ஜன்னி, இருமல், மாரடைப்பு, வாதம் நீங்கும். இச்சாப்பத்தியம்

ஊது மாந்தத்திற்கு

வேலிப்பரித்தியிலையை வதக்கி பிழிந்தசாறு அவுன்சு–1 சீரகம் கடுகுரோகணி இவையிரண்டும் வகைக்கு அவுன்சு–¼ சேர்த்து அரைத்துப் பிழிந்தசாற்றில் அரைப்பாலடை முலைப்பாலுடன் கலந்துக் கொடுக்கக் குணமாகும்.

சுருக்கு வீராதி மெழுகு

பரங்கிப்பட்டை	பலம்	20
கொடிவேலி வேர்	,,	20
சிவன்வேம்பு சமூலம்	,,	20
சேங்கொட்டை	,,	20

நறுக்கி பாண்டத்திலிட்டு குழித்தைலமிரக்கி

சுத்திசெய்த சவ்வீரம்	விராகனிடை	5
லிங்கம்	,,	3
ரசகற்பூரம்	,,	3
ரசம்	,,	1
அரிதாரம்	,,	1
துருசு பற்பம்	,,	1
இந்துப்பு	,,	1

இந்த 13-விராகனிடை சரக்குகளையும், மயனமாய்ப் பொடித்துக் கரண்டியிற் போட்டுக் கால்படி தைலம் விட்டு

ஓயாமற் கிண்டிக் கொடுத்து வற்றினப் பின்பு தேன் $\frac{1}{8}$-படி விட்டுக் கிண்டி மெழுகு பதத்திற் கல்வத்திலிட்டு,

ஜாதிக்காய்	தேசாவரம்
கார்போக அரிசி	அக்கிராகாரம்
சுக்கு	சன்னிநாயகம்
மிளகு	திப்பிலிமூலம்
திப்பிலி	ஓமம்
கோஷ்டம்	கொடிவேலிவேர்ப்
அரத்தை	[பட்டை

மேற்படி தினுசுகள் வகைக்கு விராகனிடை-1, ஆக இப்பதினுன்கு விராகனிடை கடை சரக்குகளையும் பொடித்துவ்வடிகட்டி சேர்த்து தேன்விட்டு 2 ஜாமம் மெழுகுப்போலாட்டித் தந்தச் சிமிளிலடைத்துக் கொண்டு சுண்டைக்காய் பிரமாணம் சரும்புக் கட்டியிற் போதிந்து 7 வேளை கொடுக்க நெஞ்சடைப்பு, மார்புகுத்து, விப்புருதி, வலிப்புகள், வயிற்று வலி முகவாத சன்னி, சூலை, 18-கரப்பான். உதிரத்திரட்சி தேகாகடுப்பு, சூதகவாய்வு, மந்தாரகாசம், சன்னிதோஷம் கை காலில் விழும் கருப்பு, வெள்ளை, சொரிசிரங்கு, படர் தாமரை, குஷ்டம், மேசரணம் கிரந்தி, அரையாப்பு, மேகப் புற்று, துன்மாங்கிஷ அடைப்பு தீரும், பத்தியம்: புளி, புகை தள்ளவும்.

பால் மாந்தத்திற்கு

வெள்ளைப்பூண்டு, மிளகு, வசம்பு, இந்துப்பு, பொடு தலைக்காய், இவைகள் வகைக்கு 30-குன்றுமணி யிடைச் சேர்த்து நொரிக்கி வெதுப்பி உழக்கு ஜலத்தில் போட்டு ஆழாக்காய் கஷாயஞ்செய்து ஒரு பாலடை வீதம் கொடுத்து வர பால் மாந்தம் குணமாகும்.

சூதக மெழுகு

ஒருபலம் கெந்தகத்தில் ஆவின் வெண்ணையை போட்டு உருக்கி 3 தடவை மிளகு தக்காளிச் சாற்றிலும், இரண்டு

தடவை உத்தாமணிச் சாற்றிலும், சாய்த்தெடுத்து அதையும் வெட்டின சேராங் கொட்டை நாலையும் அரைக்காற்படி விளக்கெண்ணெயிற் போட்டு காய்ச்சி ஒரு சொட்டுக் கீழே விட்டுப் பார்க்க கெந்தக நிறமில்லாமலிருந்தால் அந்தப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு 1-விராகனிடை பாதரசத்தில் விட்டு மத்தித்து வேளைக்கு ¼-பணயிடைவீதஞ் சர்க்கரையிற் கலந்துண்ண மேகம்-21, சூலை, கிரந்தி, நமச்சல், சிரங்கு வெட்டை இவை தீரும்.

சுரமாந்தத்திற்கு

குட்டி விளாயிலை, வெள்ளைப்பூண்டு, அவுரியிலை இந்த மூன்று தினுசும் வகைக்கு 1-அன்வுன்சு, சேர்த்து வெதுப்பிக் கஷாயஞ்செய்து 1 பாலடைவீதம் கொடுத்துவரக் குணமாகும்.

தாளிச்சப்பத்திரி வடகம்

தூதுவேளைவேர்	பலம்	1½
கண்டங்கத்திரிவேர்	,,	1½
சுக்கு	,,	1
மிளகு	,,	1
திப்பிலி	,,	1
கடுக்காய்தோல்	,,	1
தாளிச்சபத்திரி	,,	2
நெல்லிமுள்ளி	,,	½
தான்றிக்காய்தோல்	,,	½
திப்பிலிமூலம்	,,	½
ஏலம்	,,	¼
கோஷ்டம்	,,	¼
சன்ன லவங்கப்பட்டை	,,	¼
ஜாதிக்காய்	,,	¼
கிராம்பு	,,	¼

சிறுநாகப்பூ	பலம்	¼
அதிமதுரம்	,,	¼
வெப்பாலையரிசி	,,	¼
லவங்கப்பத்திரி	,,	¼
ஜாபத்திரி	,,	⅛

இவைகளுக்குச்சேர்ந்த பனிரெண்டேமுக்காலேயரைக் கால் பல சரக்குகளை இடித்துச் சூரணஞ்செய்து ஒருபானையி லிரண்டுபடி ஆவின் பாலும், அரைப்படி பாசிப் பயறும் போட்டு வாயில் வேடுகட்டிச் சூரணத்தை வைத்துச் சட்டி யால் மூடி பிட்டவித்திரக்கி 14-பலம் சர்க்கரையைக் கலந் துப் பிசைந்து கொட்டைப் பாக்குப்பிரமாணம் உருண்டை செய்து சாப்பிட்டுவர நீரடைப்பு, கல்லடைப்பு, ஏப்பம், வாய்வு, ஸுசிகவாய்வு, சூலை, காந்தல், வரட்சி தீரும்.

பால் வரண்டுபோக

மல்லிகைப் பூவாகிலும் அல்லது கோழி கீரையாகிலும் வதக்கிக்கட்ட பால் வரண்டுபோகும் தொந்தரவிராது.

முலைக்காம்பு ரணமாற பத்து

வெங்காரம் ¼-அவுன்ஸ், சாராயம் ½-அவுன்ஸ், ஜலம் மூணேமுக்காலு அவுன்ஸ் இவைகளைச் சேர்த்து அதில் துணியை நனைத்து ரணத்தின் மேல்போட 2-3-நாளில் ரணம் ஆறும்.

கந்தக வடகம்

கந்தகம்	பலம்	5
சுக்கு	,,	5
மிளகு	,,	5
வாய்விளங்கம்	,,	5
கடுக்காய் தோல்	,,	5

நெல்லிவற்றல்	பலம்	5
திப்பிலி	,,	5
லவங்கம்	,,	5
லவங்கயிலை	,,	5
சிறுநாகப்பூ	,,	5
ஏலரிசி	,,	5
தான்றிக்காய் தோல்	,,	5
மைசாட்சி	,,	2½
சித்திரமூலவேர்ப்பட்டை	,,	1¼

இந்த பதினான்கு சரக்குகளுக்குஞ் சேர்ந்த 63-3/4-பலத்தை இடித்து வஸ்திரகாயஞ் செய்து அவ்வளவு கருப்புக் கட்டி சேர்த்தரைத்து தான்றிக்காய்ப் பிரமாணம் உண்டை செய்து உட்கொள்ள மேகரோகந் தீரும்.

பிரசவித்த ஸ்திரீயின் மார்பில் பால் சுரக்க

தோல் நீக்கின வெள்ளைப்பூண்டு, 5-விராகனிடை எடுத்து 2-சேர் பாலில் வேகவைத்துக் கடைந்து அத்துடன் ஏலரிசித்தூள் விராகனிடை-1, சீனி விராகனிடை-5, சேர்த்து பாயசம்போல் செய்து தினம் காலையில் 6-மணிக்கு கொடுத்து 3-4-மணி நேரஞ்சென்ற பிறகு போஜனஞ் செய்யவும் பால் உண்டாகும்.

ஏலாதி வடகம்

ஏலம்	பலம்	6
லவங்கப்பட்டை	,,	6
திராக்ஷைப்பழம்	,,	6
திப்பிலி	,,	6
அதிமதுரம்	,,	1

சர்க்கரை	பலம்	10
பேரீச்சம்பழம்	,,	1

இந்த 7-சரக்குகளுக்குஞ் சேர்ந்த 36-பலத்தையும் இடித்துக் கழற்சிக்காய் பிரமாணம் உருண்டைசெய்து சாப்பிட்டுவர அக்கினிமாந்தம், பித்தம், வயிற்றுவலி, மூலக் கொதிப்பினல் இரத்தம், சீதங்காணுதல் நீங்கும்.

பிரசவித்த ஸ்திரீகளுக்கு கீழ்வயறு-மார்பு-சிரசு-இவைகளின் குத்தல் நோவிற்கு

ஏலம்	விராகனிடை	2
மிளகு	,,	2
லவுங்கப்பத்திரி	,,	2
சுக்கு	,,	2
திப்பிலி	,,	2
லவுங்கப்பட்டை	,,	2

இவைகளை சூரணித்து வைத்துகொண்டு வெல்லத்திலாகிலும் அல்லது கழுநீர் ஜலத்திலாவது சேர்த்துக் கொடுக்க மேற்கூறிய வியாதி குணமாகும்.

சுக்கு வடகம்

சுக்கு	பலம்	6
தாளிச்சபத்திரி	,,	5
செவ்வியம்	,,	1
மிளகு	,,	1
திப்பிலி	,,	4
விலாமிச்சவேர்	,,	½
லவங்கம்	,,	½
லவங்கயிலை	,,	½

சிறுநாகப்பூ	பலம் ½
ஏலரிசி	,, ½

இந்த பத்து சரக்குகளுக்கும் சேர்ந்த 19½- பலத்தையும் சூரணித்து முன்போற் பாலிற்பிட்டவித்து சர்க்கரை பலம்-6 சேர்த்துப்பிசைந்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் உருண்டை செய்து சாப்பிட்டுவர சத்தி விக்கல், அரோசகம், வாயில் நீர் சுரத்தல், வாய்வு அக்கினி மந்தம், பொருமல் சூலை, இருமல், திரிதோஷம் இவைகள் நீங்கி தீபனமுண்டாகித் தேகம் பலமுண்டாக்கும்.

பிரசவித்த ஸ்திரீயின் சுவாசம் தீர உருண்டை

முருங்கைப்பட்டை சமூற்சிப்பருப்பு, பனவெல்லம் வகைக்கு விராகனிடை-1 சேர்த்து மைபோல் அரைத்து பாக்களவு கொடுத்துவர சுவாசந்தீரும்.

மேகாதி வடகம்

கடுக்காய்தோல்	வெள்வேலம்பிசின்
நெல்லிவற்றல்	வெங்குன்றிப்பருப்பு
தான்றிக்காய்தோல்	கரிமஞ்சள்
பருத்திவிரைபருப்பு	காந்தசெந்தூரம்
புளியவிரைத்தோல்	அப்பிரகசெந்தூரம்

இனுசுகள் வகைக்கு விராகனிடை-1 ஆக 10-விராகனிடைக்குச்சரி ஆவாரை வித்தின் பருப்புக் கூட்டிப் பொடித்து அத்திப்பால் விட்டுபிசைந்து மூன்றே முக்கால் விராகனிடை உண்டைசெய்து வேளை ஒன்றுக்கு ஒருருண்டை வீதம் எருமை மோரிற்கொள்ள மேகநீர் இருபத்தொன்றும் நீங்கும்.

அனுபோக வைத்திய களஞ்சியம் முற்றிற்று.

அளவை அல்லது

இடைகளின் விபரம்

3-3/4-குன்றியிடை	கொண்டது	1-பணவிடை
9	பணவிடை கொண்டது	1-விராகனிடை
1½	விராகனிடை கொண்டது	1-களஞ்சி
10	விராகனிடை கொண்டது	1-பலம்
1	ரூபாயிடை கொண்டது	1-தோலா
8	பலம் கொண்டது	1-சேர்
30	பலம் கொண்டது 1-பவுன் அல்லது	1-ராத்தல்
24	பலம் கொண்டது	1-பக்காசேர்
40	குண்டுமணி கொண்டது	1-களஞ்சி
	கிரையின் யென்பது	½-குன்றி
	ஸ்குரூபல் யென்பது	10-குன்றி
	டிராம் யென்பது	32-குன்றி
	அவுன்சு யென்பது	8-விராகனிடை
	திருகடி யென்பது	3-விராகனிடை
	பயின்டு யென்பது	160-விராகனிடை
	காலன் யென்பது	128-பலம்

கலைமகள் அச்சகம் காலாடிப்பேட்டை சென்னை 19

பொருளடக்கம்

	பக்கம்
நாடிபார்க்கும் விதம்	4
ஸ்திரீ புருஷாளுக்குநாடிபார்க்கும் விதம்	4
திரிநாடியை இரவில்பார்க்கும் விதம்	4
வாதத்தில் வாதமாகில்	5
வாதரோகமானால்	5
பித்த ரோகமானால்	5
சிலேத்ம ரோகமானால்	5
வாதத்தில் சிலேத்மமாகில்	5
பித்தத்தில் பித்தமாகில்	5
சிலேத்ம பித்தமானால்	5
பித்தத்தில் வாதமாகில்	6
பித்தத்தில் சிலேத்மமாகில்	6
சிலேத்மத்தில் சிலேத்மமாகில்	6
சிலேத்ம வாதமாகில்	6
தசநாடி எந்தெந்த இடத்தில் நடக்கும்	6
நாடி தெரியாமை	6
நாடி உதிக்கும் இடம்	7
நாடியின் விபரம்	7
வாதம் எவ்விதமாக நடக்கும்	7
பித்தம் எவ்விதமாக நடக்கும்	7
சிலேத்துமம் எவ்விதமாக நடக்கும்	7
திரிநாடி எந்த இடத்தில் உதிக்கும்	7
தசவாயுவின் இருப்பிடமும் அதன் செயலும்	8
முக்கிய குறிப்பு	9
மருந்து செய்யவும் அருந்தவும்	9
மரணகுறி அறிதல்	9
களியின் குணம்	9
பத்தியத்திற்கு ஆனவை	10
பத்தியத்திற்கு ஆகாதவை	10
பாஷாண வகைகள் சுத்தி செய்யும் முறை	10
அறுவகை ஜலநீர்	15
பனித்தண்ணீர் எடுக்கும் விபரம்	15
பூநீர் எடுக்கும் விபரம்	15
வீரக்கட்டு	16
நாகக்கட்டு செய்யும் வகை	16
லிங்கக்கட்டு முறை	17
இலவணக்கட்டு முறை	17
உப்பு கட்டு	18
தாளகக்கட்டு	18
இரசக்கட்டு செய்யும் முறை	18
இரசக்கற்பூரக் கட்டு முறை	20
மேக நாதச் செந்தூரம்	20
அயவீரச் செந்தூரம் செய்யும் முறை	21
சாரசெந்தூரம் செய்முறை	22
அயகெந்தி செந்தூரம்	23
தாம்பிரச் செந்தூரம் முறை	23
பூரக்கட்டு செய்யும் முறை	24
தாளகக்கட்டு செய்யும் முறை	25
காளமேக நாராயணச் செந்தூரம் செய்யும் முறை	25
கலியாணச் செந்தூரம் செய்யும் முறை	26
கிருஷ்ணு அபிரேக் செந்தூரம்	26
தாளக பஸ்பம்	27
நெல்லிக்காய் கெந்தகம் பஸ்பம் செய்யும் முறை	27
ரசபஸ்பம் செய்யும் முறை	28
துருசு பஸ்பம் முறை	28
தங்கபஸ்பம் செய்யும் முறை	29
சீமைகல்நார் பஸ்பம் முறை	29
பவழ பஸ்பம் முறை	30
தாம்பிர பஸ்பம் முறை	30
அய பஸ்பம் முறை	31
மாந்தம் வலிசுரம் மாத்திரை	31
ஜலதோஷ மாத்திரை	32

பொருளடக்கம்

	பக்கம்
அமிர்த சஞ்சீவி மாத்திரை	32
பெரும் மூத்திரத்திற்கு மாத்	33
ஆனந்த பூபதி மாத்திரை	33
கரும்செவ்வாய்கு மாத்திரை	34
மாந்த மாத்திரை	34
பேதி மாத்திரை	34
குழந்தைகளுக்கு அமிர்த சஞ்சீவி மாத்திரை	35
குழந்தைகளுக்கு மாந்தம் உப்பிசத்திற்கு மாத்திரை	35
வாந்திபேதி மாத்திரை	36
பாரிசவாய்வுக்கு சங்குபா ஷாணம் பஸ்பம்	36
குழந்தைகளுக்கு தித்திப்பு பேதி	36
குழந்தைகளுக்கு மாந்த மாத்திரை	37
ஜாரபரணி அல்லது மூறைக் காய்ச்சலுக்கு	38
சகல காய்ச்சலுக்கும் லிங்க மாத்திரை	38
சிவ சஞ்சீவி குளிகை	38
கிராணி கழிச்சலுக்கு	39
அண்டவாத மாத்திரை	39
பூரக்கட்டு	39
வீரக்கட்டு	40
லிங்கக்கட்டு	40
ரசகற்பூரக் கட்டு	40
லிங்க பற்பம்	41
செம்மேகத்திற்கு பேரண்ட பற்பம்	41
சிமை கல்நார் பஸ்பம்	42
மலங்கட்டுக்கு லேகியம்	42
கற்பூர சிலாசத்து பற்பம்	42
உஷ்ணவாய்வுபேதி இரைச் சல் இதுகளுக்குபடிகார பஸ்பம்	43
வெள்ளைக்கு இருமலுக்கு படி காரபஸ்பம்	43
பாதும் தாதுவிர்த்தி லேகி	44
வீரபற்பம் பச்சை வெட்டு	45
விடாஜ்வரத்திற்குபரவி மாத்திரை	45
பக்க சூலைக்கு மருந்து	46
பலகாரை பற்பம்	46
விரைவாதத்திற்கு நெய்	46
சொரி சிரங்கிற்குமேல்பூசும்	47
மேக சூட்டுக்கு பஞ்சாமூர்த தைலம்	47
தீராத மேகரணத்திற்கு மரு	48
கெட்டிமூத்து பற்பம்	48
வான்மெழுகு செய் முறை	48
சுசலிரோஷன் மெழுகு	49
மான்கொம்பு பற்பம்	50
மயிர் வளர தைலம்	50
பித்தயெரிச்சலுக்குகியாழம்	51
பவழ பற்பம்	51
நவமூலத்திற்கு லேகியம்	51
சிக்கிஞ்சி சர்பத்து	52
மஞ்சள் காமாலைக்குபச்சிலை	52
சங்கு பற்பம்	53
அறுவகை சூரணம்	53
கோரேசனை மாத்திரை	53
படிகாரத் திராவகம்	54
கெந்தி மெழுகு	54
ஆமையோடு பற்பம்	55
கல்நார் பற்பம்	55
பூரணச் சந்ரோதயம்	55
நாக பஸ்பம்	57
துருசு களங்கு	57
தங்க பற்பம்	58
ரச பற்பம்	58
வெள்ளி பற்பம்	59
அயகளங்குபொன் வருணம்	59
இரச வெண்ணை	61
தாளக பற்பம்	61
தங்க பற்பம்	61
யூரானி செந்தூரம்	62

பொருளடக்கம்

	பக்கம்
பாரிசவாய்வு கால்கை பிடிப்பு தலைநோய் ஜன்னி இதுகளுக்கு மேல்பூசும் ஓரல்லியம்பாம்	62
வெண்குஷ்டத்திற்கு மருந்து	63
வாதமாருத மெழுகு	64
கஸ்தூரி மெழுகு	65
சுகபேதி எண்ணை	66
கிராணி சகல கழிச்சலுக்கும் சூரணம்	66
சுகபேதி சூரணம்	67
கெர்ப்ப ஸ்திரீகளுக்கு பழயது எண்ணெய்	67
இருமல் ஷயம் இதுகளுக்கு சூரணம்	68
சுக்கிலம் கட்ட சூரணம்	68
காது செவிடுக்குத் தைலம்	69
மும்மூர்த்தி செந்தூரம்	69
திமிர், தடிப்பு, குஷ்டரோணம், படை, சட்டை, மேகம், குஷ்டம், சொரி இவைகட்கு எண்ணெய்	70
குழந்தைகட்குமாந்த எண்ணை	70
வெள்ளிபஸ்பம் செய்முறை	71
வெள்ளைபாஷாணபஸ்பம்	71
குழந்தைகட்கு அள்ளுமாந்த எண்ணை	71
சகலகரப்பானுக்கும் எண்ணை	72
நவநீத வெண்ணை	72
பக்கசூல கெற்பசூலைக்கு எண்ணை	73
இரசசெந்தூர வல்லாதி மெழுகு	73
சாரக்கொழம்பு	74
விரைவாத சஞ்சீவி எண்ணை	74
பேதிக்குகாசுகட்டி மாத்திரை	75
சூதகவாய்வுக்கு யெண்ணை	75
காமரூபி லேகியம்	77
பேதிக்கு ஜல மாத்திரை	78
வீரசெந்தூரம் செய்யும் முறை	78
தாம்பிரசெந்தூரம்	79
கிருமிகள் விழசவுக்கிய பேதி	80
சீமைகல்நார் பஸ்பம் செய்யும் முறை	80
புருஷரத்தின தைலம் செய்யும் முறை	81
வெள்ளை எண்ணைசெய்முறை	82
பூநீறு முப்புச்சுண்ணம் செய்யும் முறை	82
ரோகவச்சிர குடாரகேசரி	83
வாலைபேதிக்குளிகை	84
குழந்தைகள் ஊதுமாந்தத் திற்கு பேதிமாத்திரை	85
காந்தசெந்தூரம் செய்முறை	85
சாம்பிராணி பதங்கம்	86
குழந்தைகள் விடாக்கழிச்சலுக்கு கட்டுவாதிமாத்திரை	86
பூநீறு முப்புச்செந்தூரம்	87
விஷசுரத்திற்கு கியாழம்	89
பழய சுரத்திற்கு கியாழம்	89
அஸ்திசுரத்திற்கு சூரணம்	89
வாந்தியை நிறுத்த	90
ஜலுப்பிற்கு கியாழம்	90
ஜலுப்பிற்கு பத்து	90
பேதியை நிறுத்த	91
பேதியுண்டாக	91
திரிதோஷ நிவாரணி	91
கக்குவான் நீர நெய்	92
அமிர்த சஞ்சீவி லேகியம்	92
வயிற்றுப்பல் மந்தத்திற்கு	93
கூழ்பாண்டலேகியம்	93

பொருளடக்கம்

	பக்கம்
சிரங்குகள் ஆர	94
தொப்புள் புண்ணுக்கு	94
வில்வாதி லேகியம்	94
வயிற்றுப்பலுக்கு	95
பித்தயெரிச்சலுக்கு லேகியம்	95
வயிற்றில் எண்ணை தங்கினால்	97
மகாகரிசாலை லேகியம்	97
பால் உண்ணவிடில்	98
குடித்தபாலை கக்கினால்	99
சித்தர் வல்லாதி லேகியம்	99
சாம்பல் மண் தின்னல்	100
சுக்கு லேகியம்	100
கால்கடுவனுக்கும் மண்டைகடுவனுக்கும்	100
சீதபேதிக்கு	101
மிளகு லேகியம்	101
கிரந்தி ஒன்பதிற்கும்	101
திப்பிலிலேகியம்	101
தோஷம் 9க்கும் மாத்திரை	102
மதனகாமேசுர லேகியம்	102
சுரத்திற்கு	103
செங்கிரந்தி	104
மன்மத சிந்தாமணி லேகியம்	104
கருங்கிரந்திக்கு	105
கூழ்ப்பாண்ட லேகியம்	105
செரியா மாந்தத்திற்கு	106
சீரக லேகியம்	106
வயிற்றுப்பொருமல் மாந்தத்திற்கு	107
சுழி மாந்தத்திற்கு	107
மாந்த வலிப்புக்கு	107
பூரணாதி லேகியம்	107
மாந்தம் 8க்கும் விபரம்	109
கோரோஜனை மெழுகு	109
தலைமாந்தத்திற்கு	109
வாதமாருத மெழுகு	110
விஷமாந்தத்திற்கு	111
சூசாம்பர மெழுகு	111
நீர்மாந்தத்திற்கு	112
கஸ்தூரிமெழுகு	112
ஊதுமாந்தத்திற்கு	113
சுருக்குவீராதி மெழுகு	113
பால்மாந்தத்திற்கு	114
சூதகமெழுகு	114
சுரமாந்தத்திற்கு	115
தாளிச்சபத்திரி வடகம்	115
பால் வரண்டுபோக	116
முலைக்காம்புரணமாற பத்து	116
கந்தக வடகம்	116
பிரசவித்த ஸ்திரீயின் மார்பில் பால் சுரக்க	117
ஏலாதி வடகம்	117
பிரசவித்த ஸ்திரீகளுக்கு கீழ்வயறு-மார்பு-சிரசு-இவை களின் குத்தல் நோவிற்கு	118
சுக்கு வடகம்	118
பிரசவித்த ஸ்திரீயின் சுவா சம்தீர உருண்டை	119
மேகாதி வடகம்	119
இடைகளின் விபரம்	120

முற்றிற்று.

பதினென் சித்தர்கள் அருளிச்செய்த

செய்முறை

ஸ்திரீ புருஷ இல்லற வைத்தியம்

பதினென் சித்தர்கள் வைத்தியத்திலும், சோதிடத்திலும், மாந்திரீகத்திலும், அனேக நூல்கள் செய்துள்ளார் அவற்றில் இந்நூல் முன் காலத்து வைத்திய சிகாமணிகள் ஏட்டுப் பிரதிகளில் மிக ரகசியமாக வைத்து உபயோகித்து வந்தனர் அப்படிப் பட்ட இந்நூலை மிகவும் சிரமப்பட்டு பழைய ஏட்டுப்பிரதிகளை சேகரித்து இதை ஒருங்கு திரட்டியுள்ளது இந்நூலில் ஸ்திரீகளுக்கு உண்டாகும் பலவிதமான நோய்களுக்கும் புருஷருக்குண்டாகும் பலவித நோய்களுக்கும் வியாதிக்கு தக்கப்படி மாத்திரை முறை, சூரணமுறை, செந்தூரமுறை, மெழுகு, லேகியம், கியாழம், எண்ணை, முதலியவைகளும் அதர்க்கு பத்தியம், உண்ணவேண்டியமுறை, தெளிவாக கூறப்பட்டுள்ளது இதன் பெருமையை புத்தகத்தை வாங்கிபடித்தால் தெரியும் மருந்து செய்யவேண்டிய பாகம் தெளிவாக கூறப்பட்டுள்ளது

புத்தக கிரையம் விலை ரூபா 1-0-0 தபால் சிலவு அணா 12

சாயிபாபா புஷ்ப ஆரூடம்

இதில் 60-புஷ்பங்களின் பெயரும் அதற்குண்டான உத்தம மத்திபம் அறியும் ஆரூடமும் விபரமாக கூறியுள்ளது ஆரூடம் பார்ப்பவர் அட்டவணையில் கூறியுள்ள புஷ்பத்தின் பெயரை தன் மனதிற்கு தோன்றியபடி புஷ்பத்தின் பெயரை தொட்டு புத்தகத்தில் கூறியுள்ள உத்தம மத்திபத்தை அறிந்துக் கொள்ளவும் சாஸ்திர நிபணர்களுக்கு உபிர் தோழனாக இருக்கும் நண்பர்களே இதன் பெருமையை பார்க்கவேண்டுமானால் ஒரு முறை வாங்கி படித்தால் தெரியும்

புத்தக கிரையம் ரூபா 1-0-0 தபால் சிலவு அணா 10

கிடைக்குமிடம்:—

டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்

நெ-2, எழுத்துக்காரன் தெரு காலாடிப்பேட்டை சென்னை 19.